பகுதி II

	பக்கம்
மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்	i
ஆளணி	Lvii

மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

	பக்கம்
கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும்	i
நாணய வெளியீடு	x
வங்கித்தொழில் அபிவிருத்தி	xii
வங்கி மேற்பார்வை	xiv
வங்கியல்லா நிதி நிறுவனங்கள்	xvi
அபிவிருத்தி நிதி	xx
கிராமியக் கொடுகடன்	xxix
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்	xxx
கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி	xxxvi
ஊழியர் சேமநிதியம்	xxxvii
செலாவணிக் கட்டுப்பாடு	xxxix
பொதுப் படுகடன்	xxxxvi
பிரதேச அலுவலகங்கள்—மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை	xxxxvii
தகவலும் வெளியீடுகளும்	L
ஆராய்ச்சி நடவடிக்கைகள்	Lii
முகாமைக் கணக்காய்வு	Lii
அளவீடுகள், தரவுச் சேகரிப்புகள், சிறப்பு வெளியீடுகள்	Lii
பயிற்சி	Liv
பணிமனை	Lv
நலம்	Lvi
ஆளணி	Lvii

மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும்

மத்திய வங்கியின் 1991 திசெம்பர் 31 ஆம் நாளன்று உள்ளவாறான ஐந்தொகையும் 1991 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் இலாப நட்டக் கணக்குகளும் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளன. 1991 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 958,350 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டிலும் பார்க்க 23.7 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன.

சொத்துக்கள் பக்கத்தில், வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகள் 79 சதவீதத்தினாலும், உள்நாட்டுச் சொத்துக்கள் 12.9 சதவீதத்தினாலும் அதிகரிக்க, ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. உள்நாட்டுச் சொத்துக்களில் நடுத்தர நீண்டகால முற்பணங்கள் முன்னைய ஆண்டினைவிட 55.2 சதவீதத்தினாலும் அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் 44.4 சதவீதத்தினாலும், நிதியியல் நிறுவனங்களுக்கான உதவுதொகைகள் 36.2 சதவீதத்தினாலும் திறைசேரி உண்டியல்களின் மீதான மத்திய வங்கியின் முதலீடுகள் 10.4 சதவீதத்தினாலும் அதிகரித்தன. எனினும் குறுங்கால முற்பணங்கள் 70.9 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில், முன்னைய ஆண்டின் இலாபங்களிலிருந்து மிகைக் கணக்கிற்கு ரூ. 2,500 இலட்சம் மாற்றல் செய்யப்பட்டதன் காரணமாக மூலதனக் கணக்குகள் 41.2 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. முக்கிய தனிப் பெரும் பொறுப்பு விடயமான சுற்றோட்டத்திலுள்ள நாணயம் முன்னைய ஆண்டினைவிட 15.2 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. மத்திய வங்கியுடனான வைப்புக்கள் 64.5 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. இதில் அரசின் வைப்புக்கள் 150.9 சதவீதத்தினாலும் வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் 66.6 சதவீதத்தினாலும், பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசுகள் மற்றும் வெளிநாட்டு வங்கித்தொழில் நிறுவனங்களின் வைப்புக்கள் 37.1 சதவீதத்தினாலும் உயர்வடைந்த வேளையில் அரச முகவர்கள் மற்றும் நிறுவனங்களின் வைப்புக்கள் 51.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தன. நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் 23.1 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. வங்கியின் சொத்துக்கள் பொறுப்புக்களினது முக்கிய கூறுகளின் ஒப்பீடு அட்டவணை 2.2 இல் காட்டப்பட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டிற்கான வங்கியின் வருவாய் ரூ. 89,510 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 15.9 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. செலவு, ஒதுக்குக் கணக்குகளுக்கான ஒதுக்கங்கள், பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கங்கள், ஏனைய கட்டணங்கள் என்பனவற்றிற்கு இடமளித்து நோக்குகையில் ஆய்விற்குரிய ஆண்டில் வங்கியின் தேறிய இலாபம் ரூ. 12,930 இலட்சமாக விளங்கியது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன் நியதிகளின்படி வங்கியின் மிகைக்கு ரூ. 1,430 இலட்சம் கொண்ட மாற்றல் செய்யப்படுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன் மீதியான ரூ. 11,500 இலட்சம் கொண்ட தொகை நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின்படி திரட்டிய நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டுமெனவும் குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய

1990 திசெம்பர் 28 இலும் 1991

1990 திசெம்பர் 28		பொறுப்புக்கள்	1991 திசெம்பர் 31	
ரூபா	ரூபா		ரூபா	ரூபா
		மூலதன கணக்குகள்		
15,000,000		முதல் ...	15,000,000	
592,000,000	607,000,000	மிகை ...	842,000,000	857,000,000
		சுற்றோட்டத்திலுள்ள நாணயம்		
22,869,022,916		தாள்கள் ...	26,411,240,020	
1,031,510,896	23,900,533,812	சுத்திகள் ...	1,111,353,950	27,522,593,970
		வைப்புக்கள்		
3,593,301 872		அரசு ...	9,016,971,676	
220,749,507		அரச முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் ...	107,140,735	
7,457,546,661		வர்த்தக வங்கிகள் ...	12,426,154,793	
9,481,396 781		பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள் ...	12,994,279,929	
133,632		திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 19,443,650/- கொண்ட தொகை நீங்கலாக கட்டாயச் சேமிப்பு நிதி ...	346,094	
670,247,118	21,423,375,571	ஏனையவைகள் ...	704,012,736	35,248,905,963
	999,397	வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ...		—
	3,250,000,000	நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் ...		4,000,000,000
	372,750,000	மூலதன உதவித்தொகைக் கணக்கு ..		507,750,000
	27.907,282,093	ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும்		27,698,765,231
	77 461,940,873			95,835,015,164

1991 திசெம்பர் 31 ஆம் நாள் முடிவுற்ற

1990 திசெம்பர் 28			1991 திசெம்பர் 31	
ரூபா	ரூபா		ரூபா	ரூபா
	6,976,653,959	பொதுச் செலவுகளுக்கும்(சம்பளங்களையும், நாணயத் தாள்கள், சுத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடங்களினதும், அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும், உளப்படக்கும்) நாணயவிதிச் சட்டத்தின் 38-ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும்.		7,658,214,373
		1991 திசெம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம்		
250,000,000		நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன்படி மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது.	143,000,000	
500,000,000	750,000,000	நாணயவிதிச் சட்டத்தின் 39 (இ) நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வரவேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு	1,150,000,000	1,293,000,000
	7,726,653,959			8,951,214,373

கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு:

1991ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை அரசியல் அமைப்பின் உறுப்புரை 154 (1) இற்கு அமையவும் 1971இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இ.கு ஏற்பவும் 1949 இன் எண் 58 கொண்ட நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 42 (1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்,
கொழும்பு–7
1992, ஏப்பிறல் 15

எஸ். எம். சப்றி
பதில் கணக்காய்வாளர் நாயகம்

அட்டவணை 2.1

வங்கியின் ஐந்தொகையின் ஒப்பீடு

திசெம்பர் 31 இலும் உள்ளவாறு

1990 திசெம்பர் 28		சொத்துக்கள்	1991 திசெம்பர் 31	
ரூபா	ரூபா		ரூபா	ரூபா
		பன்னாட்டு ஒதுக்கு		
8,460,710,058		வெளிநாடுகளில் உள்ள பணங்களும், நிலுவைகளும்	21,318,200,937	
7,533,610,210		*வெளிநாட்டுப் பிணைகளும் இறைசேரி உண்டியல்களும்	7,331,728,788	
16,337,923	16,010,658,191	சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடைமைகள் ...	10,003,786	28,659,933,511
		உள்நாட்டுச் சொத்துக்கள்		
		கடனகளும் முற்பணங்களும்		
11,161,696,884		அரசிற்கு ...	16,117,313,293	
2,545,258,079		எனையவற்றிற்கு–நடுத்தர, நீண்டகால ...	3,949,828,378	
4,785,005,960		குறுங்கால ...	1,394,248,551	
27,044,307,233		அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ...	29,863,952,320	
372,750,000	45,909,018,156	நிதி, எனைய நிறுவனங்களுக்கான உதவுதொகைகள்...	507,750,000	51,833,092,542
	15,542,264,526	எனைய சொத்துக்களும் கணக்குகளும் ...		15,341,989,111
		*அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1இல் ரூபா 5,527,675 முகப்புப் பெறுமானத்திலும், 1965 மே 24இல ரூபா 57,450 முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள, மேற்குறித்த நாட்களில முறையே, ரூபா 2,933,697/– ஆகவும், ரூபா 34,340/– ஆகவும் இருந்தன.)		
	77,464 940,873			95,835,015.164

ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

1990 திசெம்பர் 28		1991 திசெம்பர் 31	
	ரூபா		ரூபா
7,726,653,959		பெறப்பட்ட வட்டி, எனையவை	8,951,214,373
	7,726,653,959		8,951 214.373

எச். என். எஸ். கருணாதிலக
ஆளுநர்

எம். பீ. திசாநாயக்கா
முதன்மைக் கணக்காளர்

அட்டவணை 2.2

மத்திய வங்கியின் சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய முக்கிய கூறுகளின் ஒப்பீடு
1990, 1991 ஆம் ஆண்டுகளின் இறுதியில் உள்ளவாறு

பொறுப்புக்கள்					சொத்துக்கள்				
விடயம்	1990		1991		விடயம்	1990		1991	
	ரூ. ப. இ.	%	ரூ. ப. இ.	%		ரூ. ப. இ.	%	ரூ ப. இ	%
மூலதனக் கணக்கு ...	607.0	0.8	857.0	0.9	பன்னாட்டு ஒதுக்கு ...	16,010.6	20.7	28,659.9	29.9
கற்றோட்டத்திலுள்ள நாணயம் ...	23,900.5	30.9	27,522.6	28.7					
வைப்புக்கள் ...	21,423.3	27.6	35,248.9	36.8	உள்நாட்டுச் சொத்துக்கள் ...	45,909.0	59.2	51,833.1	54.1
வெளிநாட்டுக் கடன் பெறுகைகள் ...	1.0	—	—	—					
நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன்	3,250.0	4.2	4,000.0	4.2	எனைய சொத்துக்கள் ..	15,542.3	20.1	15,342 0	16.0
மூலதன உதவுதொகை க/கு ...	372.8	0.5	507.7	0.5					
வனைய பொறுப்புக்கள் ..	27,907.3	36.0	27,698.8	28.9					
மொத்தம் ..	77,461.9	100.0	95,835.0	100.0	மொத்தம் ...	77,461.9	100.0	95,835.0	100.0

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்

மத்திய வங்கி, வர்த்தக வங்கிகளுடன் இலங்கை ரூபாவிற்கெதிராக ஐ.அ. டொலரின் உடன் வாங்கும் விற்கும் வீதங்களைத் தீர்மானிப்பதில் தொடர்ந்தும் பங்கேற்றது. ஐ.அ. டொலருக்கான நாளாந்த செலாவணி வீதத்தினை நிர்ணயிப்பதில் வங்கி 1991 திசெம்பர் 10 ஆம் நாளிலிருந்து புதிய முறையொன்றினை அறிமுகப்படுத்தியது. இப் புதிய முறையின் கீழ்ப் பின்வரும் முக்கிய காரணிகளுக்குட்பட்டு காலையில் அறிவிக்கப்பட்ட வீச்சுகளுக்கிடையில் ஐ.அ. டொலருக்கான வாங்கும் விற்கும் விலைகளை மத்திய வங்கி குறிப்பிடும்.

(அ) உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்வி நிரம்பல் நிலைமைகள்.

(ஆ) வங்கித்தொழில் முறையிலுள்ள பொதுவான திரவத்தன்மை நிலைமையும் அழைப்புப் பணச் சந்தையின் நடத்தையும்.

(இ) முக்கிய நிதியியல் நிலையங்களில் வெளிநாட்டுக் குறுக்கு செலாவணி வீதங்களின் அசைவு, அத்துடன்

(ஈ) நாட்டின் பன்னாட்டு ஒதுக்குகளின் பொதுவான நிலைமை.

உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை மேலும் அபிவிருத்திசெய்யும் பொருட்டே இம்மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

வர்த்தக வங்கிகளிடமிருந்து ஐ.அ. டொலர்களை முன்மாற்று கொள்வனவு செய்வதில் வங்கி ஒழுங்கான அடிப்படையில் தொடர்ந்தும் தொழிற்பட்டு வந்தது. அத்தகைய காப்புக்கான காலம் ஆறு மாதங்கள் வரையிலானதாக இருந்தது.

தங்க விற்பனை

ஆய்விற்குரிய ஆண்டில் மத்திய வங்கி அதன் மூன்றாவது தங்க விற்பனை நிலையத்தினைத் தலைமை அலுவலகத்தில் திறந்தது. இது கட்டுநாயக்காவிலுள்ள கொழும்பு சருவதேச விமான நிலையத்திலுள்ள இரண்டு தங்க விற்பனை நிலையங்களுக்கும் மேலதிகமானதாகும். தலைமை அலுவலகக் கட்டடத்தில் 1991 மாச்சில் திறக்கப்பட்ட தங்க விற்பனை நிலையம் அத்தகைய விற்பனைகளை இலங்கை ரூபாவிற்கு மேற்கொள்ளத் தொடங்கி வெளிநாட்டு நாணயங்களுக்கான தங்க விற்பனை புறக்கீடு செய்யப்பட்ட 1991 ஒகத்து வரை குறித்தொதுக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களுக்கு மட்டுமே தங்கத்தினை விற்பனை செய்தது. இப்பொழுது தங்கத்தினைச் சலுகைத் தீர்வை வீதங்களில் எவ்வித கட்டுப்பாடுமின்றி இந்நிலையத்திலிருந்து கொள்வனவு செய்து கொள்ளலாம்.

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

1991 இல் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய வசதிகளினூடாக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் பெறுமதியான ரூ. 114,420 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 239,060 இலட்சமாக விளங்கியது. 1991 இல் வெளிநாட்டு நாணயத்தில் செய்யப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி 1990 இன் ரூ. 44,010 இலட்சத்துடன்

ஒப்பிடுகையில் ரூ. 87,560 இலட்சமாக விளங்கியது. 1989 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பண்டமாற்று வசதி இவ்வாண்டிலும் தொடர்ந்து தொழிற்பாட்டிலிருந்ததுடன் இதற்காக இலங்கை 1991 இல் ரூ. 610 இலட்சத்தினையும் வழங்கியது.

சார்க் பயணக் கட்டளிச் சீட்டுத் திட்டத்தின் கீழ்க் கணக்குகளைத் தீர்ப்பனவு செய்வதற்கு ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய பொறிமுறையினைப் பயன்படுத்துவதற்காகப் பிரதேச ஒத்துழைப்பிற்கான தென் ஆசிய அமைப்பினால் (சார்க்) விடுக்கப்பட்ட எடுத்துரைப்பிற்கு ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய நாடுகள் தமது இணக்கத்தினை வழங்கியுள்ளன.

வங்கி வீதம்

அரச உத்தரவாதப் பிணைகளையும், வர்த்தக மற்றும் உற்பத்திக் கடன்கள் தொடர்பான சலுகைக்கால வாக்குறுதிச் சான்றிதழ்களையும் பொறுப்பாக வைத்து வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) 1991 சனவரி 04 ஆம் நாள் தொடக்கம் ஆண்டொன்றுக்கு 15 சதவீதத்திலிருந்து ஆண்டொன்றுக்கு 17 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

குறுங்காலக் கொடுகடன்

ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் திட்டத்தின்கீழ் வர்த்தக வங்கிகளுக்கான வசதிகளை மத்திய வங்கி தொடர்ந்தும் வழங்கியது. இவ்வாண்டில் இத்திட்டத்தின் கீழான வட்டி வீதங்கள் மூன்று சந்தர்ப்பங்களில் பின்வருமாறு மேல்நோக்கித் திருத்தப்பட்டன.

அட்டவணை 2.3

ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் கடன்களின் மீதான திருத்தப்பட்ட வட்டி வீதங்கள்

நடைமுறைக்கு வந்த நாள்	ஆண்டிற்கான வட்டி வீதம் வகை I திருத்தப்பட்ட வீதம்	வர்த்தக வங்கிகளுக்கான மிகை இலாபம்	வகை II திருத்தப்பட்ட வீதம்	வர்த்தக வங்கிகளுக்கான மிகை இலாபம்
04.01.91	13	3	8	3.8
15.08.91	15	3	10	3.8
23.12.91	17	3	12	3.8

செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் ஏற்றுமதிகளின் விற்பனைப் பணம் இலங்கையில் பெறப்படுமிடத்து, கடன் வழங்கும் வங்கிகள் ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபட்ட வாடிக்கையாளர்களுக்கு நன்மைகளையளிக்கும் பொருட்டு ஏற்றுமதி மீள்நிதியிடல் கடன்களின்மீது விதிக்கப்பட்ட வட்டியில் ஆண்டுக்கு 4 சதவீதப் புள்ளிகளை வங்கி தொடர்ந்தும் மீளளிப்புச் செய்தது.

மேலேயுள்ள இரு வகைகளின் கீழும் வழங்கப்பட்ட மீள் நிதியிடல்களை காப்பிடுதல், விரிவாக்கல் என்பன தொடர்பாகப் பல மாற்றங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. தொகை வடிவிலான தேயிலை, மற்றும் தைக்கப்பட்ட ஆடை கள் என்பனவற்றிற்காக வகை I இன் கீழ் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் வசதிகள் முறையே 1991 மார்ச்சு 31 ஆம் நாளிலிருந்தும் ஏப்பிறல் 2 ஆம் நாளிலிருந்தும் புறக்கீடு செய்யப்பட்டன. இவ்வகையில் எஞ்சியுள்ள விடயங்களுக்கான மீள் நிதியிடலின் அளவு 1991 ஏப்பிறல் 2 ஆம் நாளிலிருந்தும் வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தொடர்பான பொதியிடல் கொடுகடனின் 100 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

1991 செத்தெம்பர் 4 ஆம் நாளிலிருந்து வகை II இன் கீழ்க் கிடைக்கத்தக்க தாக இருந்த மீள் நிதியிடலின் அளவுஏற்றுமதியாளர்களுக்கு வர்த்தக வங்கிகளி னால் வழங்கப்பட்ட கடன்களில் 75 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதெனினும் 1991 ஒற்றோபர் 17 ஆம் நாளிலிருந்து இது நிறுவனத்தினது ஏற்றுமதிக் கட் டளையின் க.ஏ.பெ. இல் அல்லது நாணயக் கடிதத்தின் பெறுமதியில் 60 சத வீதத்திற்குத் திருத்தப்பட்டது. எனினும் இத்தொகை வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் தொகையை விஞ்சக் கூடாது. வகை II இன் கீழ் ஏற்று மதிக்கான மீள் நிதியிடல் வசதிகளின் ஏற்பாட்டினை ஒழுங்கு முயமாக்கும் குறிக்கோளுடன், இத்திட்டம் மேலும் மீளாய்வு செய்யப்பட்டதுடன் 1991 செத்தெம்பர் 4 ஆம் நாள் தொடக்கம் முன்னோடி மற்றும் உயர்ந்த பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதுடன் ஏற்றுமதி செய் யப்படும் ஒவ்வொரு விடயத்திற்காக ஒவ்வொரு தனிப்பட்ட ஏற்றுமதியாளருக் கும் ரூ. 100 இலட்சம் கொண்ட ஆகக் கூடிய உச்ச எல்லை விதிக்கப்பட்டது. கூட்டிய பெறுமதி உயர்வாகவுள்ள ஆனால் மரபு ரீதியான அல்லது நன்கு நிறுவப்பட்டது எனக் கருதப்பட்ட குறிப்பிட்ட உற்பத்திகளுக்கு வகை I இன் கீழ் தனிப்பட்ட வங்கிகளுக்கு ஒதுக்கப்பட்ட வரையறைகளுக்குட்பட்ட விதத்தில் மீள் நிதியிடல் வசதிகள் கிடைக்கச் செய்யப்பட்டன.

கெவுடா கற்களைச் சூடேற்றும் செயல் முறைக்காக ஏற்றுமதி சார்ந்த கெவுடா கைத்தொழிலாளர்களுக்கு மீள் நிதியிடலைக் கொண்ட புதிய திட்ட மொன்று 1991 ஏப்பிறல் 2 ஆம் நாளிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின்கீழ்த் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு வங்கிக்கும் ரூ. 250 இலட்சம் வரையறையைக் கொண்ட தொகை ஒதுக்கப்பட்டது. வட்டி வீதம் ஆண்டிற்கு 4 சதவீத மிகை இலாபத்துடன் ஆண்டொன்றிற்கு 13 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது.

நெல், மரக்கறிகள் மற்றும் குறிப்பிட்ட பயிர்களின் உற்பத்தி, உத்தரவாத விலைத் திட்டம் மற்றும் கீழ்மட்ட விலைத் திட்டம் என்பனவற்றின் கீழ்ப் பண்டங்களைக் கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தல் என்பன தொடர்பாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது தனிப்பட்டோரின் வாக்குறுதிச் சான்றிதழ்களைப் பிணையாக வைத்து அதற்கெதிராக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட முற் பணங்களின் மீதான வட்டி வீதம் இவ்வாண்டில் பின்வருமாறு அதிகரிக்கப் பட்டது.

அட்டவணை 2.4

குறுங்கால வீதங்களின் திருத்தம்

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டமும் (பு.அ.கி.கொ.தி) சந்தைப்படுத்தலும்

ஆண்டிற்கான வட்டி வீதம்

நடைமுறைக்கு வந்த நாள்	பு.அ.கி.கொ.தி.	சந்தைப்படுத்தல்
04.01.91	6.5	5.0
15.08.91	8.5	7.0
23.12.91	8.5	9.0

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன்

1990 இன் இறுதியில் ரூ. 32,500 இலட்சமாக விளங்கிய நடுத்தர நீண்ட காலக் கொடுகடன் நிதியம் 1991 இறுதியில் ரூ. 40,000 இலட்சத்திற்கு அதிகரித்தது.

நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழ் அனைத்து வகைகளின் மீதுமான வட்டி வீதங்கள் 1991 சனவரி 4 ஆம் நாளன்று 2 சதவீதப் புள்ளி களாலும் 1991 ஒகத்து 15 ஆம் நாளன்று மேலும் 2 சதவீதப் புள்ளிகளினாலும் உயர்த்தப்பட்டன. இவ்வாண்டில் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மிகை இலாபம் வகை I இனைப் பொறுத்தவரையில் ஆண் டிற்கு 7 சதவீதத்திலும், மற்றைய மூன்று வகைகளைப் பொறுத்தவரையில் ஆண்டிற்கு 4 சதவீதத்திலும் மாற்றமின்றியிருந்தது. திருத்தப்பட்ட வட்டி வீதங்கள் பின்வருமாறு:—

அட்டவணை 2.5

	ரூ. 50 இலட்சமும் அதற்குக் குறைவான மொத்தச் செல வினையும் கொண்ட செயற்றிட்டம்	ரூ. 50 இலட்சத்திற்கு மேல் மொத்தச் செலவினைக் கொண்ட செயற் றிட்டம்	கொடுகடன் நிறு வனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மிகை இலாபம் ஆண்டிற்கு %
வகை I	11%	11%	7%
வகை II	9%	10%	4%
வகை III	12%	12%	4%
வகை IV	14%	14%	4%

இத்திட்டத்தின் கீழான மீள் நிதி வழங்கல் 1991 திசெம்பர் 23 ஆம் நாள் தொடக்கம் இடைநிறுத்தப்பட்டது.

நிதிக் கூட்டு நிலையங்களுக்கான வசதி

1988 இன் எண் 78 கொண்ட நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் 20 (4) (அ), 21 (1) பிரிவுகளின்படி, தற்காலிக திரவத் தன்மைப் பிரச்சினைகளை எதிர்நோக்கும் அத்துடன் அல்லது நிருவாகமும் முகாமைத்துவமும் நாணயச் சபையால் பொறுப்பேற்கப்பட்ட வங்கியல்லா நிதி நிறுவனங்களுக்கு வர்த்தக வங்கிகள் வழங்கும் அவற்றின் கடன் வழங்கல் தொடர்பாக மத்திய வங்கி தொடர்ந்தும் நிதிக் கடன் வசதியை வழங்கியது. இதன்பேரில் 1991 இறுதிவரை வழங்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 9,000 இலட்சமாக விளங்கியது.

ஒதுக்குத் தேவைகள்

வர்த்தக வங்கிகளின் கேள்வி, தவணை சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களின் மீதான நியதி சட்ட ஒதுக்கு விகிதம் 1991 சனவரி 11 ஆம் நாளிலிருந்து 13 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது. வர்த்தக வங்கிகள் அவைகளின் ஒதுக்குத் தேவையின் ஒரு பகுதியை திறைசேரி உண்டியல்களாக வைத்திருப்பதற்கு வழங்கப்பட்ட வசதியும் இத் திகதியிலிருந்து புறக்கீடு செய்யப்பட்டது.

திறைசேரி உண்டியல்களில் இரண்டாந்தரச் சந்தைத் தொழிற்பாடுகள்

இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் மொத்த விற்பனைச் சுழல்வு 1990 இன் ரூ. 679,070 இலட்சத்திலிருந்து 1991 இல் ரூ. 782,540 இலட்சத்திற்கு அதிகரித்தது. இவ்வாண்டில் மொத்தக் கொள்வனவுச் சுழல்வும் ரூ. 213,550 இலட்சத்திலிருந்து ரூ. 374,860 இலட்சத்திற்கு அதிகரித்தது. வங்கியல்லாத் துறைக்கான தேறிய விற்பனைகளின் மொத்தச் சுழல்வு 1990 இன் ரூ. 81,320 இலட்சத்திலிருந்து 1991 இல் ரூ. 96,580 இலட்சத்திற்கு அதிகரித்தது.

இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தைத் தொழிற்பாடுகளுக்குப் பொருந்தத்தக்க கழிவு வீதங்கள் இவ்வாண்டில் ஆண்டிற்கு 12 சதவீதத்திலிருந்து ஆண்டிற்கு 15.25 சதவீதத்திற்கிடையில் வேறுபட்டன.

இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து செல்வோருக்கான
உதவுதொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்

1964 இன் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் அடங்கும் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புதல் தொடர்பான திட்டங்களை அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் தொழிற்படுத்தியது.

ஏற்றுமதியாளர்களுக்கான இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடி

ஏற்றுமதியாளர்களுக்குச் செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வைத் தள்ளுபடிகள் தொடர்பாக வர்த்தக வங்கிகளினால் செய்யப்பட்ட கோரல்களை மீளளிப்பதனை அரசின் சார்பில் வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. 1991 இல் ரூ. 5,565 இலட்சம் கொண்ட மொத்தத் தொகை மீளளிப்புச் செய்யப்பட்டது.

கட்டாய சேமிப்புக்கள் நிதியம்

மத்திய வங்கி 1971 இன் எண் 6 கொண்ட கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தினதும் 1972 இன் எண் 15 கொண்ட வருமான உச்சவரம்பு, கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தினதும் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட பணத்தின் பாது காவலனாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் அரசின் சார்பில் கட்டாய சேமிப்புக் கள் நிதியத்தினையும் நிருவகித்தது. இவ்வாண்டில் பெறப்பட்ட 16 விண்ணப்பங் களின் மீது வங்கி ரூ. 1 இலட்சத்தினை (வட்டி உட்பட) உதவுநர்களுக்குச் செலுத்தியது.

அரச கணக்குகள்

அரசின் வங்கியாளர் என்ற வகையில் மத்திய வங்கி அரச திணைக்களங்கள், அரச முகவர் நிலையங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் குறிப்பிட்ட சில நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளைத் தொடர்ந்தும் பேணியது. 1991 திசெம் பர் இறுதியில் தொழிற்பட்ட கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 187 ஆகும்.

நாணய வெளியீடு

1991 இல் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களின் பயன்பாட்டிற்காக, இலங்கையின் சட்டரீதியான கொடுப்பனவுக்கான நாணய வழங்கல் பணியினை மத்திய வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ்வாண்டில் நாணய முகாமைத் துவம் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாகப் பல மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டன.

நாட்டில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள்களின் தரத்தினை மேம் படுத்தும் நோக்கில் வர்த்தக வங்கிகளின் உதவியுடன் தூய நாணயத் தாள் நடவடிக்கை முயற்சி ஒன்றினை வங்கி மேற்கொண்டது. சுற்றோட்டத்தில் உள்ள நாணயத் தாள்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களைவிட மிகக் குறைந்த தரங்களைக் கொண்டிருப்பதைக் கடந்த காலங்களில் வங்கி அறிந்திருந்தது. ஆகவே வங்கியினால் பொது மக்களுக்குத் தரமான நாணயத் தாள்கள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு நாணயத் தாள் நிபு ணத்துவத் தரங்களை உயர்த்துவது அவசியமானதாக இருந்தது. வங்கியானது, வர்த்தக வங்கிகளின் ஒத்துழைப்புடன் தனது தலைமை அலுவலகத்திலிருந்தும் மாத்தறை, அநுராதபுரம் பிரதேச அலுவலகங்களிலிருந்தும் புதிய நாணயத் தாள்களை வழங்கத் தொடங்கியது. சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் வர்த்தக வங்கி-ளுக்குப் புதிய நாணயத் தாள்களை வழங்குவதன் மூலம் மாத்தறை, மாத்தளை, கண்டி ஆகிய மாவட்டங்களில் இரு தூய நாணயத் தாள்கள் தொழிற்பாட்டுத் திட்டங்களுக்கான முயற்சிகளை வங்கி மேற்கொண்டது. இந்த நிகழ்ச்சிகளுடன் உடன் நிகழும் வகையில் இம் மாவட்டங்களில் பொது மக்கள் புரிந்துணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்றும் முயற்சிக்கப்பட்டது.

1991 காலப் பகுதியில் நாட்டில் சுற்றோட்டத்திலுள்ள நாணயத் தாள் களின் வடிவமைப்பை மாற்றுவதற்கும் வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டது. நாட்டின் வளமார்ந்த மரபுவழியினை வெளிக்காட்டும் வகையில் வரலாற்று மற்றும் தொல்பொருள் விடயங்களைக் குறித்துக் காட்டும் விதத்தில் புதிய ந ணயத் தாள்கள் வடிவமைக்கப்பட்டன. பன்னாட்டுத் தரங்களுக்கு இணங்கவும் பயன்படுத்தும் பொது மக்களுக்கு வசதியான விதத்திலும், நாணயத் தாள்களின்

நீண்ட காலப் பாவனைக்காகவும் ஒவ்வொரு இனத்திலும் ஏற்கனவே உள்ள நாணயத் தாள்களின் அளவைவிடச் சிறிதளவு சிறிதாகப் புதிய வடிவமைப்பிலான நாணயத் தாள்கள் உருவாக்கப்பட்டன. ரூபா 1,000, ரூபா 500, ரூபா 100, இனங்களிலான நாணயத் தாள்கள் 1991 இல் சுற்றோட்டத்திற்காக வழங்கப் பட்டவேளையில் ஏனைய இனங்கள் 1992 இன் ஆரம்பத்தில் வழங்கப்படுவ தற்காக அட்டவணையிடப்பட்டிருந்தன.

1991 காலப் பகுதியில் நினைவு நாணயக் குத்திகள் மூன்றினை வெளியிடு வதற்கு வங்கி ஒழுங்குகளை மேற்கொண்டது. இவற்றில் இரண்டு 1991 திசெம் பரில் கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுக்களை நினைவு கூருமுகமாகவும் ஒன்று மேன்மை தங்கிய சனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்கள் பதவியில் அமர்த்தப்பட்ட மூன்றாவது ஆண்டு நிறைவினை நினைவு கூருமுகமாகவும் வெளியிட்டன. தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டுக்களை நினைவு கூருமுகமாக வெளியிடப்பட்ட நாணயக் குத்திகள் ரூபா 500, ரூபா 100 இனங்களில் காணப்பட்டன. ரூபா 500 நாணயக் குத்தி 12 கரட் தங்கத்தில் வார்க்கப்பட்டிருந்தவேளையில் ரூபா 100 நாணயக்குத்தி வெள்ளியில் வார்க்கப்பட்டிருந்தது. ரூபா 500 நாணயக் குத்தி வட்ட வடிவில் காணப்பட்டதுடன் பண்டைய இலங்கை நாணயக் குத்தியான 'கலந்த' அல்லது 'அக'வின் வடிவமைப்பினைக் கொண்டிருந்தது. ரூபா 100 வெள்ளி நாணயக் குத்தி செதுக்கப்பட்ட விளிம்புகளுடன் சதுர வடிவில் காணப்பட்டதுடன் கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்ட வெள்ளி நாணயக் குத்தியான 'மசுரன்' அல்லது 'புராண' என்ற நாணயக் குத்தியைப் போன்றதாக இருந்தது.

வெள்ளியில் வார்க்கப்பட்ட ரூபா 1 நாணயக் குத்தியை வெளியிடுவதன் மூலம் மேன்மை தங்கிய சனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்கள் பதவியில் அமர்த்தப்பட்ட மூன்றாவது ஆண்டு நிறைவை நினைவு கூருவதற்கு வங்கி ஒழுங்குகளை மேற்கொண்டது. மேன்மை தங்கிய சனாதிபதியின் உருவப்படம் நாணயக் குத்தியின் பின்பக்கத்தில் பொறிக்கப்பட்டிருந்தவேளையில் அதனது முகப்புப் பக்கத்தில் சனாதிபதியின் கொடி பொறிக்கப்பட்டிருந்தது. பொது மக்களின் பயன்பாட்டிற்காக வேண்டி செம்பு–நிக்கல் கலவையில் வார்க்கப்பட்ட இதே வடிவமைப்பிலான நாணயக் குத்திகளைப் பொதுச் சுற்றோட்டத்திற்கு விடவும் வங்கியினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டன. இந்த நாணயக் குத்தி களை 1992 சனவரி முற்பகுதியில் வெளியிடுவதற்கு அட்டவணையிடப்பட் டிருந்தது.

வங்கியினால் வெளியிடப்படும் நாணயத்தின் அளவில் ஏற்பட்ட அதிகரிப் பினைத் தொடர்ந்து பொது மக்களுக்கு மிகத் திறமைமிக்க பணிகளை வழங்கும் பொருட்டு வங்கி நாணயத் தாள்களின் செயல்முறைப்படுத்தலை விரைவுபடுத்த வேண்டிய அவசியம் காணப்பட்டது. கீழ்வரும் வேறுபட்ட தொழிற்பாடுகளை உள்ளடக்கிய நாணயத் தாள் செயல்முறையானது இதுவரை காலமும் ஆட்களி னாலேயே மேற்கொள்ளப்பட்டது.

(1) வர்த்தக வங்கிகளினாலும் அரச திணைக்களங்களினாலும் வங்கியில் வைப்புச் செய்யப்படும் நாணயத் தாள்களை எண்ணுதல்.

(2) போலி நாணயத் தாள்களைக் கண்டுபிடிப்பதற்காக வேண்டி இந்த நாணயத் தாள்களைச் சரிபார்த்தல்.

(3) மேலதிகச் சுற்றோட்டத்திற்காகப் பயன்படுத்தக்கூடிய நாணயத் தாள்களின் மீள் வழங்கலை மேற்கொள்ளும் பொருட்டுப் பயன்படுத்தக் கூடிய நாணயத் தாள்கள், பயன்படுத்த இயலாத நாணயத் தாள்கள் என்ற வகையில் அவற்றினைப் பிரித்தெடுத்தல்.

(4) மீள் வழங்கலுக்காக வேண்டிப் பயன்படுத்தக்கூடிய நாணயத் தாள்களை ஒன்றாகக் கட்டுதல்.

(5) பயன்படுத்த இயலாத நாணயத் தாள்களைப் பாதுகாப்பான நிலைமைகளின் கீழ் அழித்தல்.

இச்செயல்முறைகள் ஆட்களினால் கையாளப்படுவதனால் நீண்ட தாமதங்கள் ஏற்படுவதையும் வங்கியில் நாணயத் தாள்கள் குவிவதையும் நாணயத் தாள்களின் செயல்முறைப்படுத்தலின்போது ஏற்படும் செலவில் காணப்படுகின்ற மிகக் கூடிய அதிகரிப்பையும் நீண்ட நாளாக வங்கி உணர்ந்திருந்தது. இது பொருளாதாரத்திற்குப் போதுமானளவில் தூயதும் பயன்படுத்தக்கூடியதுமான நாணயத் தாள்களை வழங்க வேண்டிய வங்கியின் முதன்மைப் பொறுப்பில் தலையிடுவதாக இருந்தது. இவற்றைக் கருத்திற் கொண்டு நோக்கில் பொது மக்களுக்குச் சிறப்பான பணியினை வழங்குவதற்கான செயல் திறமையினை எய்தும் பொருட்டு நாணயச் செயல்முறை நடவடிக்கைகளைத் தன்னியக்க மாக்குவதற்கு வங்கி தீர்மானித்தது. இதன்படி 'சீவிசிஎஸ்' முறை எனப்படும் நாணயச் சரிபார்த்தல், கணக்கிடல், பிரித்தெடுத்தல் முறைகளுக்கான இரண்டு பொறிகளை வங்கியில் நிறுவுவதற்கு வங்கியினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டன. இந்த முறைகள் மேலே குறிப்பிடப்பட்ட நாணயச் செயல்முறைத் தொழிற்பாடுகளை ஒரு சில தொழிற்பாட்டாளர்களுடன் மிக விரைவில் கையாளக்கூடிய திறமையினைக் கொண்டுள்ளன. 1992 இன் முற்பகுதியில் இப்பொறிகளைத் தொழிற்படுத்துவதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது.

வங்கித்தொழில் அபிவிருத்தி

நிறுவன ரீதியான அமைப்பு

1991 ஆம் ஆண்டானது நாட்டின் வங்கி வலையமைப்பில் கணிசமான விரிவாக்கத்தினையும் மாற்றங்களையும் கண்டது. கிராமிய வங்கித்தொழில் ஊக்குவிப்பிற்கு 1991 இல் தொடர்ந்தும் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இதன் விளைவாக இவ்வாண்டில் மூன்று பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (பி.கி.அ.வ.) மூன்று நிறுவப்பட்டதுடன் நாட்டில் தொழிற்படும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 1991 இறுதியில் 15 இற்குஅதிகரிக்கப்பட்டது. உள்நாட்டு வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை மாறாது 6 ஆகக் காணப்பட்டவேளையில் 1991 செத்தெம்பரில் அல்ஜிமனே வங்கி நெதர்லாந்து என்.வி. (ஏ.பி.என்.) உடன் அமிஸ்டர்டாம் ரொட்டர்டாம் வங்கி என்.வி. (அம்ரோ வங்கி) ஒன்றிணைக்கப்பட்டமையின் காரணமாக வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை 1991 இல் 17 இற்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக நாட்டில் தொழிற்பட்ட வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை 1991 இல் 23 இற்குக் குறைக்கப்பட்டது. பன்னாட்டு வங்கித்தொழில் கைத்தொழில் ஆட்டம் காணவைத்த வரையறுக்கப்பட்ட பாங் ஒவ் கிறடிட் அன்ட் கொமர்ஸ் இன்டர்நசனல் முறிவடைந்தவுடன் உலகம் முழுவதும் காணப்பட்ட வங்கித்தொழில் பிரச்சனையைக் கையாளுவதில் இலங்கை மேற்கொண்ட விதம் இவ்வாண்டின் குறிப்பிடத்

தக்க பண்பாக விளங்கியது. இலங்கையில் தொழிற்படும் பி.சி.சி.ஐ. கிளைகளின் கட்டுப்பாட்டினைக் கையேற்பதற்கு மத்திய வங்கி உடனடி நடவடிக்கைகளை எடுத்தது. இதனைத் தொடர்ந்து பீ.சி.சி.ஐ. யின் உள்நாட்டு வங்கித்தொழில் வியாபாரம் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வாண்டில் வங்கிக் கிளை வலையமைப்பில் கணிசமான விரிவாக்க மொன்று அவதானிக்கப்பட்டது. இம்மாற்றங்களின் விளைவாக பி.கி.அ. வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 101 இலிருந்து ஆண்டின் இறுதியில் 124 இற்கு அதிகரித்தது. வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 763 இற்கு அதிகரிக்க உள்நாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 738 இற்கு அதிகரித்த வேளையில் வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 25 இற்கு உயர் வடைந்தது. எனினும் கிளை விரிவாக்கத்தில் இரு அரச வங்கிகளும் இவ்வாண்டில் மிக மெதுவான தன்மையையே பதிவு செய்தன. மக்கள் வங்கி இரு கிளைகளைத் திறந்ததன் மூலம் அதன் கிளைகளின் எண்ணிக்கை 308 இற்கு அதிகரித்த வேளையில் இலங்கை வங்கி, விரிவாக்க அலுவலகங்கள், கொடுப்பனவு அலுவல கங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அதன் கிளையமைப்பினை 323 இலிருந்து ஆண்டின் இறுதியில் 328 இற்கு அதிகரித்துக் கொண்டது. அதேவேளை தனியார் உள்நாட்டு வங்கிகள் வெளியிடங்களுக்கான அவர்களின் வியாபாரத்தினைத் தொடர்ந்தும் விரிவாக்கின. இதன் விளைவாக வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி, வரையறுக்கப்பட்ட செலான் வங்கி என்பன முறையே 3; 2; 9 புதிய கிளைகளைத் திறந்து உள்நாட்டு தனியார் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கையை 102 இற்கு அதிகரித்துக் கொண் டன. 1991 இல் தேசிய சேமிப்பு வங்கி அதன் கிளையமைப்பினை 81 இற்கு விரிவாக்கிக் கொள்ள, அரச ஈட்டு முதலீட்டு வங்கி அதன் இரண்டாவது கிளையைத் திறந்து கொண்டது. இவ்வாண்டில் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் அதன் பிரதிநிதித்துவ அலுவலகத்தைக் கிளை நிலைக்குத் தரமுயர்த்திக் கொண்டது.

இடம்பெயர் வங்கித்தொழில் பணிகள்

தத்தமது தொழிற்படு பிரதேசங்களில் வங்கித் தொழிலைக் குறைவாகக் கொண்ட அல்லது வங்கித் தொழிலைக் கொண்டிராத இடங்களில் வங்கித் தொழில் வசதிகளை வழங்கும் பொருட்டுப் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கள் தமது இடம்பெயர் வங்கித் தொழில் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண் டன. செலான் வங்கியும் களுத்துறை மாவட்டத்தில் அலுபோமுல்ல, சரிக்காமுல்ல ஆகிய இடங்களிலும், கம்பகா மாவட்டத்தில் யக்கல என்ற இடத்திலும் கொழும்பு மாவட்டத்தில் அத்திடிய, பொரலஸ்கமுவ, கமுபோவில, கொட்டாவ ஆகிய இடங்களிலும் இடம்பெயர் வங்கித்தொழில் நிலையங்களை நடாத்தியது.

தன்னியக்க ரெலர் பொறிகளின் நிறுவல்

1991 இல் மக்கள் வங்கி, இலங்கை வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி என்பனவும் தன்னியக்க ரெலர் பொறிகளை அறிமுகப்படுத்தி, நாட்டில் தன்னியக்க ரெலர் பொறிகளைத் தொழிற்படுத்தும் வங்கிகளின் எண் ணிக்கையை 7 இற்கு அதிகரிக்கச் செய்தன. மக்கள் வங்கி அதனது தன்னியக்க ரெலர் பொறிக்கு 'பெற்' (மக்கள் தன்னியக்க ரெலர்) எனப் பெயரிட்டு ஐந்து கிளைகளில் அவற்றை நிறுவியவேளையில் இலங்கை வங்கி அதற்கு 'சீ பாங் கேஸ் பொயின்ட்' எனப் பெயரிட்டு ஆறு கிளைகளில் அவற்றை நிறுவியது.

இலங்கை வங்கி, கொழும்பு 3 இலுள்ள வரையறுக்கப்பட்ட சிறி லங்கா மர்சன்ட் வங்கி, கொழும்பு 13, வரையறுக்கப்பட்ட சிலோன் டுபாக்கோ கம்பனி என்பன வற்றின் பணிமனைக்கு வெளியே இரண்டு தன்னியக்க ரெலர் பொறிகளை நிறுவியது. வரையறுக்கப்பட்ட கொங்கொங் அன்ட் சங்காய் வங்கிக் கூட்டுத் தாபனம் கொழும்பு 3, லிபட்டி பிளாசா கட்டிட வெளிப்புறத்தில் இரண்டு தன்னியக்க ரெலர் பொறிகளை நிறுவியது.

வங்கி மேற்பார்வை

1991 இல், வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 10 வர்த்தக வங்கிகளின தும் 3 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினதும் (பி.கி.அ.வ.) பரீட்சிப்புக் களை மேற்கொண்டதோடு இவ்வாண்டில் இப்பரீட்சிப்புக்களில் 7 இனை நிறைவு செய்தது. மேலதிகமாக இத்திணைக்களம் 1990 இல் தொடங்கப்பட்டிருந்த 5 வர்த்தக வங்கிகளின் மீதான பரீட்சிப்புக்களையும் முடிவு செய்தது. திணைக் களம் முதன் முறையாக இரு வணிக வங்கிகளின் பரீட்சிப்புக்களை மேற்கொண்ட தன் மூலம் ஆய்விற்குரிய காலப் பகுதியில் மேற்பார்வையின் செயல் நோக்கு விரிவாக்கப்பட்டது.

வர்த்தக வங்கிகளினாலும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினாலும் சமர்ப்பிக்கப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் மீதான மாதாந்தக் கூற்றுக்களின் அடிப்படையில் அவற்றின் நிதி நிலைமையின் கவனமான கண்காணிப்பினைத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது. இதே போன்று வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளில் நிறுவப்பட்டுள்ள வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் கொடுக்கல் வாங்கல்களை மாதாந்த அடிப்படையில் கண்காணித்தலும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்ட வேளையில், ஆண்டுக் கூற்றுக்களின் அடிப்படையில் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளையும் உள்ளடக்கி, வர்த்தக வங்கிகளின் இலாபத் தன்மைபகுப்பாய்வு செய்யப்பட்டது.

மேற்பார்வை நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக 1989 யூனில் முன்னுரிமை யல்லா துறைகள் மீது விதிக்கப்பட்ட கொடுகடன் வரையறைக்கும் குறித்துரைக் கப்பட்ட அத்தியாவசியமற்ற இறக்குமதிகளின் நாணயக் கடிதங்கள் மீதான காசு வரையறைத் தேவைசளுக்கும் இசைவாக வர்த்தக வங்கிகள் நடந்துகொள்கின் றனவா என்பதையும் திணைக்களம் கவனமாகக் கண்காணித்தது. வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளையும் வழிகாட்டல்களையும் வர்த் தக வங்கிகள் பின்பற்றுகின்றனவா என்பதை உறுதி செய்தலும் திணைக்களத்தின் பொறுப்பாக இருந்தது. ஆகக் குறைந்த மூலதன நிதியங்கள் மற்றும் திரவ விகிதங்கள், தனிப்பட்ட கடன்பெறுநர் ஒருவருக்கு, பணிப்பாளர்கள் மற்றும் பணிப்பாளர்களின் அக்கறை கொண்டாருக்கு கடன் வழங்கல் மீதான வரை யறை, பங்குடைமைகள் மீதான கட்டுப்பாடுகள் என்பவற்றை இவை உள்ளடக்கி யிருந்தன. அத்தகைய பணிப்புரைகளும் ஒழுங்குவிதிகளும் மீறப்பட்ட சந்தர்ப் பங்களில் திணைக்களத்தினால் குற்றவாளிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பட்டது.

வங்கித் தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க வழங்கப்பட்ட பணிப்புரை களின் கீழ்த் திரவத் தன்மை தொடர்பாகக் காலத்துக்குக் காலம் அனுப்பப்படும் திரட்டுக்களையும் காலத்துக்குக் காலம் சமர்ப்பிக்கப்படும் ஏனைய கூற்றுக்களை யும் பரீட்சிப்பதன் மூலம் வர்த்தக வங்கிகளின் மீதான தொடர்ச்சியான மேற்

பார்வை 1991 இல் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 5 இன் நடைமுறைப்படுத்தலுடன் 1990 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ''வங்கிகளுக்கான கணக்கு அமைப்புமுறை'' 1991 இல் தொழிற்படத் தொடங்கியது. இதன்படி அனைத்து வர்த்தக வங்கிகளும் 1990 ஆம் ஆண்டிற்கான தமது கணக்குகளைச் சீரான முறையொன்றின் கீழ்ச் சமர்ப்பித்தன.

வருமானத்தை அறிந்து கொள்வதற்கும், கடன் இழப்பு ஒதுக்கலுக்குமான பொதுவான தரமொன்றை நிறுவுவதன் பொருட்டு, திணைக்களம் 1991 பெப்புருவரியில் வழிகாட்டல் தொகுதியொன்றை வெளிபிட்டது. தொங்கலிலுள்ள வட்டி, செயற்பாட்டிலில்லாத முற்பணங்களை வகைப்படுத்தல், மோசமானதும் ஐயத்திற்கிடமானதுமான முற்பணங்களுக்கான ஒதுக்கங்கள் என்பன தொடர்பாக வர்த்தக வங்கிகள் கவனிக்க வேண்டிய ஆகக் குறைந்த தேவைப்பாடுகளை இந்த வழிகாட்டல்கள் குறித்துக் காட்டின. தேவைப்படும் இடங்களில் தொங்கல் வட்டியை 1991 ஏப்பிறில் 1 ஆம் நாள் அளவில் நிறுவும்படியும் 1991 ஏப்பிறில் 1 ஆம் நாள் அளவில் ஏனைய தேவைப்பாடுகளுக்கு இசைவாக நடந்து கொள்ளும்படியும் அனைத்து வர்த்தக வங்கிகளும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

1987 இல் தொழிற்பாட்டிற்கு வந்த வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் செயற்பாட்டினை 1991 இலும் திணைக்களம் தொடர்ந்து நிருவகித்து வந்தது. வர்த்தக வங்கிகள் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், கூட்டுறவு கிராமிய வங்கிகள் என்பனவற்றிற்கு விருப்ப அடிப்படையில் தனது காப்பினை உள்ளடக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் 1991 இறுதியில், 2 வர்த்தக வங்கிகள், 3 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், 8 கூட்டுறவு கிராமிய வங்கிகள் என்பனவற்றை உள்ளடக்கிய 13 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் கீழ்ச் செலுத்தப்படவுள்ள கட்டுப்பணத் தொகை மீளாய்வு செய்யப்பட்டதோடு பிரயோகிக்கப்படக்கூடிய புதிய வீதமானது காலாண்டொன்றிற்கு ஒவ்வொரு 100 ரூபாவிற்கும் 3.75 சதமாக (உதாரணமாக ஆண்டொன்றிற்கு ஒவ்வொரு 100 ரூபாவிற்கும் சதம் 15) 1992 சனவரி 1 ஆம் நாளிலிருந்து பயனுறுவதாகவும் அமைந்தது.

ஆய்விற்குரிய ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் வரையறுக்கப்பட்ட பேங்க் ஒப் கொமர்ஸ் அன்ட் கிரடிட் இன்டர் நசனல் (ஓவசீஸ்) வங்கியின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பலதரப்பட்ட விடயங்களைக் கையாளுவதில் திணைக்களம் நேரடியாக ஈடுபட்டது. பீசீசீஐ வங்கியின் செயற்பாட்டின் உலகளாவிய இடைநிறுத்தத்தைத் தொடர்ந்து நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 30 (1) இன் நியதிகளுக்கிணங்க 1991 யூலை 7 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் பீசீசீஐ வங்கியின் இலங்கைக் கிளைகளின் தொழிற்பாட்டினை நாணயச் சபை இடைநிறுத்தியது. வரையறுக்கப்பட்ட செலான் வங்கியுடன் பதியப்பட்ட முகாமைத்துவ ஒப்பந்தமொன்றின் கீழ் பீசீசீஐ வங்கிக் கிளைகளின் முகாமைத்துவத்தை வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு நாணயச் சபை பேரளித்ததோடு வங்கித்தொழில் நடவடிக்கைகள் 1991 யூலை 29 ஆம் நாள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. 1991 இன் எண் 2 கொண்ட அவசரகால (வங்கித்தொழில் சிறப்பு ஏற்பாடுகள்) ஒழுங்குவிதிகளின் கீழ் பீசீசீஐ வங்கியின் உள்நாட்டு வங்கித்தொழில் வாணிபத்தைச் செலான் வங்கிக்கு உரிமையளிப்பதற்கு 1991 திசெம்பரில் நாணயச்சபை ஒப்புதலளித்ததுடன் 1992 சனவரி 1 ஆம் நாளில் இது பயனுறுவதாக அமைந்தது. முன்னைய பீசீசீஐ வங்கியின் வதிவற்றோர் வெளிநாட்டு நாணய மற்றும் வதிவுடைய தேசிய அல்லா வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருப்போருக்கு நிவாரணம் வழங்கும் வழிமுறையொன்றாக நிவாரணத் திட்ட

மொன்றினை மத்திய வங்கி தொடங்கி வைத்தது. இந்த நிவாரணத் திட்டத்தின் கீழ்க் கிட்டத்தட்ட 85 சதவீதமான வைப்பு உடைமையாளர்கள் அவர்களது வைப்புக்களின் முழுத் தொகையினையும் ரூபாவில் பெறக்கூடியதாக இருக்கும்.

வங்கியல்லா நிதி நிறுவனங்கள்

1988 இன் எண் 78 கொண்ட நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் கீழ் 24 கூட்டு நிலையங்கள் 1991 இல் பதிவு செய்யப்பட்டு, நிதி வாணிபத்தைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் 20 கூட்டு நிலையங்கள் 1990 திசெம்பரிலும், 4 கூட்டு நிலையங்கள் 1991 இன் முதற் சில மாதங்களிலும் பதிவு செய்யப்பட்டன. 1991 இறுதியில் இந்தக் கூட்டு நிலையங்களின் மொத்த வைப்புப் பொறுப்புக்கள் ரூ. 56,479 இலட்சமாக விளங்கி, 1990.12.31 இல் காணப்பட்ட வைப்புப் பொறுப்புக்களைவிட ரூ. 297 இலட்சம் அல்லது 0.5 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1990 திசெம்பர் 17 ஆம் நாள் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரை ஒன்றின் பேரில் பதிவு செய்யப்படாத பல நிதிக் கூட்டு நிலையங்கள் தமது நிதி வாணிபத்தைக் கைவிட்டு வைப்புக்களைத் தீர்ப்பனவு செய்யத் தொடங்கியிருக்கும் சூழ்நிலையில் வைப்புக்களின் இந்த அதிகரிப்பினை நோக்கல் வேண்டும்.

நிதிக் கூட்டு நிலையங்களின் மீதான மத்திய வங்கியின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தும் கடமையானது, 1988 இன் எண் 78 கொண்ட நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் பிரிவுகள் 5, 9, 12, 25, 33, 38 மற்றும் 46 என்பவற்றிற்கு 1991 இன் எண் 23 கொண்ட நிதிக் கூட்டு நிலையங்கள் (திருத்தச்) சட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் ஊடாக மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 40), பிரிவு 5 இன் கீழ், முறையே, 1990 இன் எண் 2, 1990 இன் எண் 1, 1991 இன் எண் 1 கொண்ட அவசரகால (நிதிக் கூட்டு நிலையங்கள்) ஒழுங்கு விதிகளின் மூலம் பிரிவுகள் 12, 25 மற்றும் 46 என்பனவற்றிற்கான திருத்தங்கள் சனாதிபதியினால் முன்னர் பிரகடனப்படுத்தப்பட்டன. 1992 ஆம் ஆண்டிற்காக நிதிக் கூட்டு நிலையங்களுக்கு உரிமம் வழங்குவதற்கான முதல் நடவடிக்கையாக உரிமங்களுக்காக விண்ணப்பித்திருந்த கூட்டு நிலையங்கள் தொடர்பாக அனைத்தினையும் உள்ளடக்கிய தலத்திலேயேயான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. திரவத் தன்மைப் பிரச்சினைகளைக் கொண்டுள்ளதாக முறைப்பாடு செய்த, பதிவு செய்யப்பட்ட இரண்டு நிதிக் கூட்டு நிலையங்கள், சுயாதீனமான கணக்காய்வாளர்களின் புலன் விசாரணைக் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

கூட்டு நிலையங்களைப் பதிவுசெய்தல்

1990 திசெம்பர் 18 ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்டிராத நிதிக் கூட்டு நிலையங்கள், 1990 திசெம்பர் 17 ஆம் நாள் நாணயச் சபையினால் வெளியிடப்பட்ட 1990 இன் எண் 2 கொண்ட பணிப்புரையின் நியதிகளுக்கிணங்கத் தமது நிதி வாணிபத் தொழிலைக் கைவிட்டு வைப்பாளர்களுக்கான தமது பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்யும்படி பணிக்கப்பட்டன. இப் பணிப்புரையின் நியதிகளுக்கிணங்க, பணிப்புரை பிரயோகிக்கப்படக் கூடியதான நிதி நிறுவனங்கள் பின்வரும் முறையில் தமது வைப்புப் பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்ய வேண்டியிருந்தது.

(1) 1990 திசெம்பர் 19 ஆம் நாளன்று ரூ. 400 இலட்சத்தை விஞ்சிய வைப்புப் பொறுப்புக்களைக் கொண்டிருந்த நிறுவனங்கள் மாதமொன் றுக்கு 5 சதவீதத்திற்குக் குறையாத வகையில் தமது வைப்புப் பொறுப்புக்களைக் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

(2) 1990 திசெம்பர் 19 ஆம் நாளன்று ரூ. 400 இலட்சத்தை விஞ்சாத வைப்புப் பொறுப்புக்களைக் கொண்டிருந்த நிறுவனங்கள் மாதமொன் றுக்கு 8.5 சதவீதத்திற்குக் குறையாத வகையில் தமது வைப்புப் பொறுப்புக்களைக் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

மத்திய வங்கியிலிருந்தான நிதி உதவிகள்

நாணயச் சபையினால் உருவாக்கப்பட்ட வைப்பாளர் நிவாரணத் திட்ட மானது நாணயச் சபையினால் நிருவாகமும் முகாமைத்துவமும் கையேற்கப்பட்ட நிதிக் கூட்டு நிலையங்களில் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத் தகைய நிதிக் கூட்டு நிலையங்கள் அனைத்தினதும் வைப்பாளர்களுக்கான நிவா ரணக் கொடுப்பனவுகளின் முன்னேற்றம் கீழ்வரும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளது.

அட்டவணை 2.6

31.12.1991 இல் உள்ளவாறு வைப்பாளர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகளின் முன்னேற்றம்

நிதிக் கூட்டுநிலையத்தின் பெயர்	வைப்புக் களின் மொத்த எண்ணிக்கை	கொடுப்பனவு செய்யப்பட்ட வைப்புக்களின் எண்ணிக்கை	மொத்தவைப் புக்களின் சதவீதமாக கொடுப்பனவு செய்யப்பட்ட வைப்புக்களின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட தொகை (ரூ. '000)
யூனியன் நல்ற அண்ட் இன்வெஸ்ற்மென்ற் லிமிட்டட் ...	18,331	16,047	87.5	202,258
கிடேக்கி பினான்ஸ் அண்ட் இன்வெஸ்ற்மென்ற் லிமிட்டட் ...	4,487	4,190	93.4	44,896
கோம் பினான்ஸ் லிமிட்டட் ...	12,585	7,746	61.5	73,447
சாறபூமி இன்வெஸ்மென்ட் கொம்பனி (பிறைவட்) லிமிட்டட் ...	401	368	91.8	3,796
தபினான்ஸ் அண்ட் கரண்டி கம்பனி லிமிட்டட்	3,198	432	13.5	1,226
காதல் பினான்ஸ் லிமிட்டட ...	2,756	2,698	97.9	33,223
த கொலை பினான்ஸ் அண்ட் இன்வெஸ்ற மென்ற் லிமிட்டட் ...	541	260	48.1	2,039
த யூனைட்டெட் மோட்டர் பினான்ஸ் கோ (திலோன்) லிமிட்டட் ...	1,343	945	70.4	9,830
த ரவல் பாக் இன்வெஸ்ற்மென்ற் (பிறைவட்) லிமிட்டட் ...	146	41	28.1	481
பாணத்துறை பினான்ஸ் அண்ட் என்டபிறைஸ் லிமிட்டட் ...	1,180	840	71.2	6,522
மொத்தம்	44,968	33,567	74.6	377,718

1991 இல் திரவத் தன்மைப் பிரச்சினைகளைக் கொண்டிருந்த பதிவு செய்யப்பட்ட நிதிக் கூட்டு நிலையமொன்றுக்கும் மத்திய வங்கியினால் நிதி உதவி வழங்கப்பட்டது. 1991 திசெம்பர் 31 இறுதியில் 1988 இன் எண் 78 கொண்ட நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 20 (4) மற்றும் பிரிவு 21 என்பவற்றின் ஏற்பாடுகளின் கீழ் 13 நிதிக் கூட்டு நிலையங்களுக்கு மொத்தமாக ரூ. 7,980 இலட்சம் கொண்ட தொகையொன்று பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. இத்தொகையில் ரூ. 2,149 இலட்சம் 1991 இல் பகிர்ந்தளிக்கப்பட்டது.

உரிமையளிக்கப்பட்ட கூட்டுநிலையங்களின் நடவடிக்கைகளை ஒடுக்கல்

நிருவாகமும், முகாமைத்துவமும் நாணயச் சபைக்கு உரிமையளிக்கப்பட்டு வைப்பாளர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் பூர்த்தி செய்யப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட இயலாது வீழ்ச்சியடைந்த மூன்று நிதிக் கூட்டு நிலையங்களின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கு 1991 இல் நாணயச் சபை நீர்மானித்தது. இதன்படி, வரையறுக்கப்பட்ட ஹிடெகி பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மென்ட்ஸ், வரையறுக்கப்பட்ட காசல் பினான்ஸ், வரையறுக்கப்பட்ட சாரபூமி இன்வெஸ்ட்மென்ட்ஸ் (தனியார்) கம்பனி என்பனவற்றை ஒடுக்குவதற்காகக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

பணிப்புரைகளும் விதிகளும்

நிதிக் கூட்டு நிலையங்களுக்குப் புதுப்பிக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் வரைச் சட்டமொன்றை வழங்குவதற்காக 1988 இன் எண் 78 கொண்ட நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பணிப்புரைகளினதும் விதிகளினதும் புதிய தொடர் ஒன்றினை வழங்குவதற்கு மத்திய வங்கி நீர்மானித்தது. 1991 இல், சட்டத்தின் பிரிவு 9 இன் கீழ் ஒன்றாகப் பதினாறு பணிப்புரைகள் வழங்கப்பட்டன. பணிப்புரை எண்களும் அவை தொடர்பான விடயங்களும் பின்வருமாறு:—

பணிப்புரை எண் 01—மோசமானதும் ஐயத்துக்கிடமானதுமான கடன்களுக்கான ஒதுக்கல்.
பணிப்புரை எண் 02—மோசமானதும் ஐயத்துக்கிடமானதுமான கடன்களுக்கான ஒதுக்கல்.
பணிப்புரை எண் 03—கடன்களினதும் முற்பணங்களினதும் பதிவழித்தல்.
பணிப்புரை எண் 04—சொத்துக்களின் மாற்றல்.
பணிப்புரை எண் 05—உறவினர்களுடனான வாணிப நடவடிக்கைகள்.
பணிப்புரை எண் 06—வைப்புக்கள்
பணிப்புரை எண் 07—திரவச் சொத்துக்கள்
பணிப்புரை எண் 08—கடன் வழங்கல்
பணிப்புரை எண் 09—மூலதன நிதியங்கள்
பணிப்புரை எண் 10—பதிவழிக்கப்பட்ட கடன்களின் பதிவேடு
பணிப்புரை எண் 11—நிலையான சொத்துக்கள்
பணிப்புரை எண் 12—முதலீடுகள்
பணிப்புரை எண் 13—வட்டி
பணிப்புரை எண் 14—வாணிபத்தை முடிவு செய்தல்
பணிப்புரை எண் 15—ஒன்று சேர்ந்த வட்டி
பணிப்புரை எண் 16—கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள்

1991 இன் எண் 23 கொண்ட நிதிக் கம்பனிகள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1988 இன் எண் 78 கொண்ட நிதிக் கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 33 (2) (இ) இன் கீழ் விளம்பரம் மீதான 1991 இன் எண் 1 கொண்ட விதி 1991 செத்தெம்பர் 11 ஆம் நாள் ஆக்கப்பட்டது. இந்த விதியானது ''நிதிக் கம்பனிகளின் (விளம்பர) விதி'' எனக் குறிப்பிடப்பட்டதுடன் நிதிக் கூட்டு நிலையங்களின் விளம்பரங்களில் உள்ளடக்கப்படவேண்டிய தகவல்களை ஒழுங்கு படுத்துவதனை நோக்கமாகக் கொண்டிருந்தது.

நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட சட்ட நடவடிக்கைகள்

1991 இல், நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளை மீறியமைக்காக 6 நிதிக் கூட்டு நிலையங்களின் பணிப்பாளர்களுக்கு எதிராகப் பொருத்தமான நீதவான் நீதிமன்றங்களில் தாக்கல் செய்வதற்காக, வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் 69 குற்றங்களுக்கான வழக்காடல்களைத் தயார் செய்தார். பணிப்பாளர்களுக்கெதிராகத் தொடரப்பட்ட அத்தகைய வழக்குகளின் விபரங்கள் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.7

1991. 12. 31 இல் முடிவடைந்த ஆண்டினுள் 1988 இன் எண் 78 கொண்ட நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழான குற்றங்களுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்

குற்றத்தின் தன்மை	கூட்டுநிலையங்களின் எண்ணிக்கை	குற்றம் நாக்கல் செய்யப்பட்ட பணிப்பாளர்களின் எண்ணிக்கை	வழக்குகளின் எண்ணிக்கை	குறிப்புகள்	
				குற்றத் தீர்ப்பு	முடிவுறாதவை
பிரிவு 25 (2) இன் கீழ் பணிப்பாளர்களின் தனிப்பட்ட கொந்தகளை வெளிப்படுத்தும் தகவல்களைச் சமர்ப்பிக்கத் தவறியமை ...	01	01	01	—	01
கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்கத் தவறியமை ...	01	05	05	—	05
வைப்புப் பொறுப்புக்களைத் தீர்ப்பனவு செய்யத் தவறியமை ...	04	16	63*	—	61

* அதே குற்றத்தை மீண்டும் புரிந்தமைக்காக ஒரு பணிப்பாளர்களுக்கு எதிராக ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வழக்குத் தொடரப்பட்டன.

ஆறு நிதிக் கூட்டு நிலையங்களின் பணிப்பாளர்களுக்கு எதிரான 38 குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக 1990 இலும், 1991 இலும், தொடக்கி வைக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள் 1991 இல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டன. தாக்கல் செய்யப்பட்ட 13 வழக்குகள் தொடர்பாகக் குற்றத் தீர்ப்புக்கள் பெறப்பட்ட தோடு 25 வழக்குகளுக்கு தரப்பினரிடையே இணக்கம் காணப்பட்டது.

ஆய்வுக்குரிய காலப் பகுதியில், 1988 இன் எண் 78 கொண்ட நிதிக் கம்பனி கள் சட்டத்தின் பிரிவு 18 இன் ஏற்பாடுகளின் கீழ்ப் பதிவு செய்யப்படாத நிதிக் கூட்டு நிலையமொன்றின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக விண்ணப்பிப்பதற்கு நாணயச் சபை தீர்மானித்தது. இதன்படி, வரையறுக்கப்பட்ட ஹவுஸ் அன்ட் புரபட்டி டிரேடர்ஸ் என்ற நிறுவனத்தை ஒடுக்குவதற்காக வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் 1991 யூன் 18 ஆம் நாள் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தார்.

ஏனைய நடவடிக்கைகள்

நிதி வாணிபம் தொடர்பாக, முக்கியமாக அவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள இடர் வரவுகள், வைப்பாளர்கள் நிதிக் கூட்டு நிலையங்களில் முதலீடுகளை மேற்கொள்ளும்போது பிரயோகிக்க வேண்டிய முன்னெச்சரிக்கையின் தேவைப் பாடு என்பன தொடர்பாகப் பொது மக்களுக்கு அறிவினைப் புகட்டும் நோக்கில் ஆய்வுக்குரிய காலப் பகுதியில் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் செய்தித் தாள்களில் பல அறிவித்தல்களை வெளியிட்டது. வைப் பாளர்களுக்கான வழிகாட்டல்கள், நிலையான வைப்புச் சான்றிதழ்களின் வடிவம் அத்தகைய சான்றிதழ்களில் உள்ளடக்கப்படவேண்டிய ஆகக் குறைந்த தகவல்கள் என்பன தொடர்பான அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன.

1988 இன் எண் 78 கொண்ட நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் நாணயச் சபையால் ஆக்கப்பட்ட பணிப்புரைகளையும் விதிகளையும் கொண்ட கையேடு ஒன்றினையும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் வெளியிட்டது.

அபிவிருத்தி நிதி

1991 காலப் பகுதியில் நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியத்தின் (ந.நீ.கொ.நி.) நிருவாகமும் சிறிய, நடுத்தர அளவு கைத்தொழில்களுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் தொழிற்படுத்தலும் தொடர்ந்தும் அபி விருத்தி நிதித் திணைக்களத்தின் பொறுப்பாக இருந்தது.

நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியம்

வங்கியினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நாணய உறுதிப்பாட்டுக் கொள்கையின் காரணத்தினால் 1991 காலப் பகுதியில் மீள் நிதியிடல் வழங்கு வதில் மத்திய வங்கியானது மிகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் மட்டுப்படுத்தப்பட் டதுமான கொள்கையொன்றினை மேற்கொண்டது. இதன்படி நடுத்தர, நீண்ட காலக் கொடுகடன் நிதியத்தின் வகை II, III மற்றும் IV என்பனவற்றின் கீழ் மீள் நிதியிடலுக்கான ஒப்புதல்கள் 1990 இன் ரூ. 9,080 இலட்சத்திலிருந்து 1991 இல் ரூ. 2,370 இலட்சத்திற்கு 74 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

மீள் நிதியிடல் ஒப்புதல்களின் வீழ்ச்சியானது வகை III மற்றும் IV தொடர்பான தாக இருந்த வேளையில் வகை II இன் கீழான ஒப்புதல்கள் 1990 இன் ரூ. 230 இலட்சத்திலிருந்து 1991 இல் ரூ. 730 இலட்சத்திற்கு அதிகரித்தது.

அட்டவணை 2.8

நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியம்
(வகைகள் II, III, IVஇன் கீழான மீள்நிதியிடலின் ஒப்புதல்கள்)
1989--1991

(ரூபா பத்து இலட்சங்களில்)

	1989		1990		1991	
	கடன் தொகை	மீள் நிதி யிடப்பட்ட தொகை	கடன் தொகை	மீள் நிதி யிடப்பட்ட தொகை	கடன் தொகை	மீள் நிதி யிடப்பட்ட தொகை
II						
ஏற்றுமதித்துறை ..	46.2	32.3	32.7	22.9	103.7	72.6
IIIஉம் IVஉம்						
1. வேளாண்மை ..	14.7	8.8 (அ)	—	—	—	—
2. கைத்தொழில் ..	35.4	21.2	72.6	71.6	—	—
3. உணவகங்கள் ..	—	—	—	—	79.2	47.5
(அ) மீள் நவீனமயப் படுத்தல் ..	—	—	—	—	75.0	45.0
(ஆ) சொகுசு வண்டிகள்	—	—	—	—	4.2	2.5
4. வனையவை ..	80.0	80.0	43.5	26.1	15.0	9.0
நலிவுற்ற கைத்தொழில்களுக் கான உதவி ..	463.1	298.2(ஆ)	787.4	787.4	108.0	108.0
	639.4	440.5	936.2	908.0	305.9	237.1

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) நடுத்தர கால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மரப்பயிர்ச் செய்கைத்திட்டத்திற்காக இலங்கை வங்கிக்கு 1989இல் வழங்கப்பட்ட கடனையும் உள்ளடக்கும்.

(ஆ) ஒதுக்கப்படாதிருந்த வட்டியை மூலதனமயப்படுத்துதல் தொடர்பாக 27 உணவகச் செய்கைச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடலையும் உள்ளடக்கும்.

1991 திசெம்பரில், மேலதிக அறிவித்தல் கொடுக்கப்படும் வரை, நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியத்தின் கீழ் மீள் நிதியிடல் வசதிகளை மத்திய வங்கி இடை நிறுத்தியது.

கொடுகடன் உத்தரவாத தொழிற்பாடுகள்

மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் நான்கு கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் கீழ் 1991.12.31 ஆம் நாளில் இருந்தவாறான கொடுகடன் உத்தரவாத தொழிற்பாடுகளின் தொகுப்பொன்று அட்டவணை 2.9 இல் தரப் பட்டுள்ளது.

31-12-91 இல் உள்ளவாறான மத்திய வங்கிக் கொடுகடன்

	சிறிய அளவுக் கைத்தொழில்கள்				சிறிய நடுத்தர	
	1990		1991		1990	
	எண்ணிக்கை	பெறுமதி	எண்ணிக்கை	பெறுமதி	எண்ணிக்கை	பெறுமதி
1.1 வழங்கப்பட்ட கடன்கள்	767	31.20 (ஆ)	767	31.20 (ஆ)	1670	286.10 (உ)
1.2 ஊத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் ..	767	23.40	767	23.40	1670	157.50
2.1 முழுமையாக மீளச்செலுத்தப்பட்ட கடன்கள்	593	22.90	597	22.98	1189	168.69
2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள்	71	4.04	86	4.84	85	24.51
கோரல்கள்						
3.1 பெறப்பட்ட மொத்தக்கோரல்கள் ..	88	4.32 (ஊ)	88	4.32 (ஊ)	327	73.30 (ஊ)
3.2 மத்திய வங்கிப் பொறுப்புக்கள் ..	—	2.42	—	2.42	—	31.73
3.3 தீர்க்கப்பட்ட கோரல்கள்						
3.3.1 முழுமையாக தீர்க்கப்பட்டவை ..	63	1.68 (எ)	63	1.68 (எ)	220	17.62
3.3.2 பகுதியளவில் தீர்க்கப்பட்டவை ..	1	0.00	1	0.00	28	2.11
3.3.3 நிராகரிக்கப்பட்ட கோரல்கள் ..	7	0.22	7	0.22	26	4.72
3.3.4 கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் (எ) முழுமையாகச் செலுத்தப்பட்டகடன்கள்	16	0.24	16	0.24	37	2.03
3.3.5 மீள்போடப்பட்ட கோரல்கள் (ஒள) .	1	0.27	1	0.27	12	3.04
3.3.6 நிலுவையிலுள்ள கோரல்கள் (ஒள) ...	—	—	—	—	4	0.09
3.3.7 புறக்கீடு செய்யப்பட்ட கோரல்கள்(ஒள) ..	—	—	—	—	—	—
4.1 வெளிநிற்கும் கடன்கள் ..	32	1.14 (ஐ)	13	0.61 (ஐ)	122	17.76 (ஐ)
4.2 (இதில் நிலுவையில் உள்ளவை) ..	32	1.14 (ஐ)	13	0.61 (ஐ)	117	17.02 (இ)
4.3 வெளிநின்ற உத்தரவாதங்கள்மீதான மத்திய வங்கியின் பொறுப்பு ..	32	0.86 (ஆ)	13	0.40 (ஆ)	122	10.32
5. கட்டணச் சேகரிப்புக்கள் ..	—	0.92	—	1.00	—	11.84
6. கோரலுக்குப் பிந்திய மீளப் பெறுகைகள் ..	—	0.36	—	0.52	—	2.75

(அ) 1990 இறுதியில் பகிர்ந்தளிக்கப்பட்டதாக அறிவிக்கப்படாத ரூ. 2,208 இலட்சம் பெறுமதி கொண்ட 346 கடன்களை உள்ளடக்கும்

(ஆ) 75 சதவீதமான வெளிநிற்கும் கடன்கள்

(இ) செயற்றிட்டம் ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூ. 400,000/- இனை வரையறையாகக் கொண்டு வெளிநின்ற கடன்களில் 60 சதவீதம்.

(ஈ) ரூ. 2,000,000 வரையான கடன்களைப் பொறுத்தவரை ஆகக்கூடியது ரூ. 800,000 இனையும் ரூ. 2,000,000 இற்கும் ரூ. 4,000,000 இற்கும் இடைப்பட்ட கடன்களுக்கு ஆகக்கூடியது ரூ. 1,200,000 இனையும் உச்ச எல்லையாகக் கொண்டு வெளிநின்ற கடன்களில் 60 சதவீதம்.

(உ) ரூ. 2,000,000, ரூ. 2,000,000 தொடக்கம் ரூ. 3,000,000, ரூ. 3,000,000 தொடக்கம் ரூ. 4,000,000 வரையான கடன்களுக்கு செயற்றிட்டமொன்றிற்கு ஆகக்கூடியது ரூ. 1,600,000 என்ற அடிப்படையில் முறையே 80 சதவீதம், 60 சதவீதம், 40 சதவீதம்.

அட்டவணை 2.9

உத்தரவாதத் திட்டங்களின் தொகுப்பு

(பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்)

அளவுக் கைத்தொழில்கள்-I		புதிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள்–II				புதிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் III			
1991		1990		1991		1990		1991	
எண்ணிக்கை	பெறுமதி	எண்ணிக்கை	பெறுமதி	எண்ணிக்கை	பெறுமதி	எண்ணிக்கை	பெறுமதி	எண்ணிக்கை	பெறுமதி
1670	286.10	2531	1,392.54	2531	1,392.54	2340	1,383.23	3883	2,373.20
	(இ)		(ஈ)		(ஈ)		(உ)		(உ)
1670	157.50	2531	713.63	2531	713.63	2340	955.88	3883	1,660.65
1204	174.40	487	149.90	707	232.78	12	7.81	48	17.50
109	29.93	238	129.96	276	142.24	97	74.91	208	101.70
	(ஊ)		(ஊ)		(ஊ)		(ஊ)		(ஊ)
329	74.2	144	65.25	180	80.55	3	1.35	11	5.02
—	32.00	—	36.17	—	45.71	—	0.89	—	3.22
224	17.84	76	18.73	99	23.26	1	0.01	6	1.60
(எ				(ஏ)					
27	2.11	8	0.82	5	0.71	—	—	—	—
28	4.78	32	7.61	39	9.08	1	0.56	1	0.56
37	2.03	2	0.58	2	0.58	—	—	—	—
12	3.04	22	6.54	25	7.12	1	0.32	2	0.46
1	0.18	4	1.07	5	1.69	—	—	2	0.59
—	—	—	—	5	2.26	—	—	—	—
	(உ)		(ஐ)		(ஐ)	(ஐ)	(ஐ)		(ஐ)
78	11.69	1690	604.61	1405	422.71	1883	975.58	3620	1,825.42
	(உ)		(ஐ)				(ஐ)		(ஐ)
78	11.69	739	192.51	897	184.05	181	18.02	395	36.37
	(இ)		(ஈ)		(ஈ)		(உ)		(உ)
78	7.01	1690	337.69	1405	265.49	1883	604.70	3620	1,284.42
—	11.98	—	22.69	—	25.42	—	8.32	—	18.79
									(ஒ)
—	4.58	—	0.67	—	3.11	—	—	1	0.00

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(ஊ) ஒன்றுசேர்ந்த வட்டியையும் உள்ளடக்கிய செலுத்தப்படாத தொகை.

(ஈ) ரூ. 4504.75 செலுத்தப்பட்டுள்ளது

(ஏ) முன்னர் பருதியளவில் செலுத்தப்பட்டவை தற்போது முற்றாகச் செலுத்தப்பட்டுள்ளன.

(ஐ) மீளப் பெறப்பட்ட தவணைப் பணம் நீங்கலாக

(ஒ) ரூ. 7,200.00 மீளப் பெறப்பட்டுள்ளது.

(ஏ) 2.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஐ) 4.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சிறிய அளவிலான கைத்தொழில்கள் திட்டம்

1978 – 81 காலப் பகுதியில் சிறிய அளவிலான கைத்தொழில்கள் திட்டத்தின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட மொத்தமான 767 கடன்களில் ரூ. 230 இலட்சம் தொகையினைக் கொண்ட 597 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட வேளையில் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இசைவாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் நடந்துகொள்ளாமையின் காரணமாக ரூ. 50 இலட்சத்தைக் கொண்ட 86 உத்தரவாதங்கள் 1991 இறுதியில் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. 1991 இறுதியில் ரூ. 43 இலட்சம் கொண்ட பொறுப்புகளுடனான 88 உரிமைக் கோரல்கள் பெறப்பட்டு அவற்றில் ரூ. 17 இலட்சத்தினைக் கொண்ட 63 உரிமைக் கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

சிறிய, நடுத்தர அளவு கைத்தொழில்கள் — திட்டம் I

சிறிய நடுத்தர அளவு கைத்தொழில்கள் திட்டம் I இன் கீழ் 1979 – 82 காலப் பகுதியில் ரூ. 2,860 இலட்சம் கொண்ட கடன்களை உள்ளடக்கும் வகையில் 1,670 உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. இவற்றில் 1,204 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்டதோடு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இசைவாக நடந்துகொள்ளாமையின் காரணமாக ரூ. 300 இலட்சம் கொண்ட 109 உத்தரவாதங்கள் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின. 1991 இறுதியில் ரூ. 320 இலட்சம் கொண்ட பொறுப்பினையுடைய 329 உரிமைக் கோரல்கள் பெறப்பட்டதோடு, இவற்றில் ரூ. 180 இலட்சம் கொண்ட 224 கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்ட வேளையில் மத்திய வங்கியின் பொறுப்புக்களின் 50 சதவீதத்தை விஞ்சாத வகையில் 27 உரிமைகள் தொடர்பாக ரூ. 21 இலட்சம் கொண்ட இடைக்காலக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

1991.12.31 இல் இத் திட்டத்தின் கீழ்ச் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் ரூ. 120 இலட்சமாக விளங்கிய வேளையில் இதே நாளில் மத்திய வங்கியினால் பெறப்பட்ட உரிமை கோரல்களுக்குப் பிந்திய மீளப் பெறுகைகள் ரூ. 46 இலட்சமாக விளங்கின.

சிறிய, நடுத்தர அளவு கைத்தொழில்கள் - திட்டம் II

சிறிய நடுத்தர அளவு கைத்தொழில்கள் – திட்டம் II இன் கீழ் 1982–1989 காலப் பகுதியில் ரூ. 13,920 இலட்சத்தினைக் கொண்ட கடன் தொகையை உள்ளடக்கிய 2,531 கடன்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டது. இவற்றில், ரூ. 2,330 இலட்சம் பெறுமதியினைக் கொண்ட 707 கடன்கள் முழுமையாகத் திருப்பிச் செலுத்தப்பட்டவேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்க ஒழுகாமையால் ரூ. 1,420 இலட்சத்திற்கான 276 உத்தரவாதங்கள் புறக்கீடு செய்யப்பட்டன அல்லது காலாவதியாகின.

1991.12.31 இல் ரூ. 457 இலட்சம் பொறுப்பினைக் கொண்ட 180 உரிமைக் கோரல்கள் பெறப்பட்டன. இவற்றில் ரூ. 233 இலட்சம் பெறுமதியான 99 உரிமைகள் தீர்ப்பனவு செய்யப்பட்ட வேளையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்தான ரூ. 7 இலட்சம் கொண்ட 5 உரிமைக் கோரல்களுக்கு மத்திய

அட்டவணை 2.10

சிறிய நடுத்தரக் கைத்தொழில் II, III இன் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள்— கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு 1991 திசெம்பர் 31 இல் உள்ளவாறு

(ரூ. '000)

திட்டம்	சிறிய நடுத்தரக்கைத்தொழில் II, III 1982—1991						சிறிய நடுத்தரக்கைத்தொழில் III 1988—1991						சிறிய நடுத்தரக்கைத்தொழில் III 1991					
	வழங்கப்பட்ட கடன்		கடன் தொகை		உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை		வழங்கப்பட்ட கடன்		கடன் தொகை		உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை		வழங்கப்பட்ட கடன்		கடன் தொகை		உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை	
கைத்தொழில்	எண்ணிக்கை	%	ரூபா	%	ரூபா	%	எண்ணிக்கை	%	ரூபா	%	ரூபா	%	எண்ணிக்கை	%	ரூபா	%	ரூபா	%
1. உணவு பதனிடல் ..	1,688	26.3	1,024,798	27.2	607, 93	25.6	850	21.9	571,661	24.1	376,160	22.7	359	23.3	250,447	25.3	170,372	24.2
2. எஞ்சிய வேளாண்மைக் கைத்தொழில்கள் ..	154	2.4	71,536	1.9	47,631	2.0	105	2.7	48,513	2.0	35,898	2.2	34	2.2	15,174	1.5	11,539	1.6
3. இறப்பர் உற்பத்திகள் ..	173	2.7	154,494	4.1	93,001	3.9	100	2.6	99,423	4.2	65,739	4.0	38	2.5	33,002	3.3	24,102	3.4
4. உலோக உற்பத்திகள் ..	572	8.9	267,513	7.1	167,021	7.0	329	8.5	150,858	6.4	1 8,279	6.5	118	7.6	54,311	5.5	38,706	5.5
5. கட்டடவாக்கப் பொருட்கள்	499	7.8	258,280	6.9	179,310	7.6	338	8.7	168,280	7.1	129,805	7.8	89	5.8	49,150	5.0	37,220	5.3
6 கட்டடவாக்க ஒப்பந்தம் ..	66	1.0	56,726	1.5	33,281	1.4	38	1.0	22,526	0.9	15,821	1.0	7	0.5	10,616	1.1	6,293	0.9
7 மர உற்பத்திகள் ..	423	6.6	165,353	4.4	111,779	4.7	256	6.6	107,678	4.5	79,729	4.8	83	5.4	36,422	3.7	26,578	3.8
8. ஆடைகள் ..	499	7.8	383,226	10.2	247,796	10.4	368	9.5	310,017	13.1	211,408	12.7	150	9.7	130,523	13.2	89,616	12.7
9. புடவைகள் ..	156	2.4	126,204	3.4	75,833	3.2	101	2.6	80,430	3.4	52,711	3.2	47	3.0	35,101	3.5	24,628	3.5
10. தொழிற்கூட்டத் திருத்தல்	236	3.7	101,614	2.7	67,131	2.8	134	3.5	61,137	2.6	44,472	2.7	47	3.0	25,040	2.5	17,232	2.4
11. ..	1,948	30.4	1,155,992	30.7	744,100	31.3	1,264	32.6	752,673	31.7	540,624	32.6	571	37.0	350,177	35.4	258,482	36.7
மொத்தம் ..	6,414	100.0	3,765,736	100.0	2,374,276	100.0	3,883	100.0	2,373,196	100.0	1,660,646	100.0	1,543	100.0	989,963	100.0	704,768	100.0

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வங்கியின் பொறுப்பின் 50 சதவீதத்தை விஞ்சாத இடைக்காலக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன.

1991.12.31 இல் இந்தத் திட்டத்தின் கீழ்ச் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் ரூ. 264 இலட்சமாக விளங்கியவேளையில் இதே நாளில் மத்திய வங்கியினால் பெறப்பட்ட உரிமைக் கோரலுக்குப் பிந்திய மீளப் பெறுகைகள் ரூ. 31 இலட்சமாக விளங்கின.

சிறிய, நடுத்தர அளவு கைத்தொழில்கள் — திட்டம் III

1988 யூலையில் ஆரம்பிக்கப்பட்ட சிறிய, நடுத்தர அளவுக்கைத்தொழில்கள் திட்டம் III இன் கீழ் 1991 இறுதியில் ரூ. 23,730 இலட்சத் தொகைக்கான 3,883 கடன்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டிருந்தது. இவற்றில் ரூ. 175 இலட்சத்திற்கான 48 கடன்கள் முழுமையாகத் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்த வேளையில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற் பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்காமையினால் ரூ. 1,020 இலட்சம் கொண்ட தொகைக்கான 208 கடன்கள் தொடர்பான உத்தரவாதங்கள் புறக்கீடு செய்யப் பட்டன அல்லது காலாவதியாகின. 1991.12.31 இல் ரூ. 32 இலட்சத்திற்கான மத்திய வங்கியின் பொறுப்பினைக் கொண்ட 11 உரிமைக் கோரல்கள் பெறப்பட்ட துடன் இதில் ரூ. 16 இலட்சத்திற்கான 6 உரிமைக் கோரல்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டன. 1991.12.31 இல் இத் திட்டத்தின் கீழ்ச் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம் ரூ. 188 இலட்சமாக விளங்கியது.

இவ்வாண்டில், கண்டி பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி தேசிய அபிவிரு த்தி வங்கியுடன் பங்கேற்பு உடன்படிக்கையைப் பூர்த்தி செய்து கொண்டதன் மூலம் தற்போதுள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி, குருநாகல் மற்றும் கேகாலை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத் தாபனம், வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி, வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி, வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ஆகிய பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்குப் புறம்பாக, மத்திய வங்கி யின் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் சிறிய நடுத்தர கடன் களை வழங்கும் தகைமையைப் பெற்றுக் கொண்டது.

சிறிய, நடுத்தரக் கைத்தொழில் திட்டம் II, III என்பனவற்றின் கீழ் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் கைத்தொழில் வாரியான பகுப்பு அட்ட வணை 2.10 இல் தரப்பட்டுள்ளது.

பேருந்து கொள்வனவு கடன் திட்டம்

திறைசேரியின் வேண்டுகோளின்பேரில், 30 இற்குக் குறையாத இருக்கை இயலளவைக் கொண்ட பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காகத் தனியார் பேருந்து தொழிற்பாட்டாளர்களுக்குப் பங்குபற்றும் நிறுவனங்களினால் வழங்கப் பட்ட கடன்களை உள்ளடக்கும் விதத்தில் மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாத திட்டமொன்றினை 1990 நவெம்பரில் அறிமுகப்படுத்தியது. இத் திட்டத்தின்கீழ், 31.12.1991 இல் ரூ. 8,480 இலட்சம் தொகை கொண்ட 1,511 கடன்கள் உத்தரவாதப்படுத்தப்பட்டன. இவற்றில் ரூ. 9.6 இலட்சம் தொகை கொண்ட 2 கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்டவேளையில் பங்குபற்றும் கொடு கடன் நிறுவனங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு

இணங்கி ஒழுகாமையின் காரணமாக ரூ. 73 இலட்சம் கொண்ட 16 உத்தர வாதங்கள் 31.12.1991 அன்று காலாவதியாகின (அட்டவணை 2.11).

இத் திட்டத்தின் கீழ் 31.12.1991 இல் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டணம் ரூ. 31 இலட்சமாக விளங்கியது.

அட்டவணை 2.11

31.12.1991 இல் உள்ளவாறான பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டத்தின் தொகுப்பு

(பெறுமதி ப. இ. ரூபாய்களில்)

	1991	
	எண்ணிக்கை	பெறுமதி
1.1 வழங்கப்பட்ட கடன்கள் ...	1,511	847.94
1.2 உத்தர்வாதமளிக்கப்பட்ட கடன்கள் ...	1,511	674.82 (அ)
2.1 முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடனகள் ...	2	0.96
2.2 பற்றீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் ...	16	7.35
3.1 வெளிநின்ற கடன்கள் ...	1,493	679.36 (ஆ)
3.2 வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான் மத்திய வங்கியின் பொறுப்பு ...	1,493	541.17
4. சட்டணச் சேகரிப்பு ...		3.08

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) செயற்றிட்டம் ஒன்றுக்கு அதக் கூடியது ரூ. 16 இலட்சம் கொண்டதாய், ரூ. 20 இலட்சம், ரூ. 20 இலட்சம் — ரூ. 30 இலட்சம், ரூ. 30 இலட்சம் —40 இலட்சம் என்பவற்றுக்கு முறையே 80%, 60%, 40%.

(ஆ) மீளப் பெறப்பட்ட தவணைப் பணங்கள் நீங்கலாக.

செயற்றிட்டங்களைப் பின்தொடர்தலும் பரிசோதித்தலும்

தேவையானவிடத்துச் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களினால் செய்யப்பட்ட கோரல்களைத் தீர்ப்பனவு செய்வதற்காகவும் 1991 ஆம் ஆண்டில் சிறிய நடுத்தரக் கைத்தொழில் கடன் திட்டத்தின் கீழ் 246 செயற்றிட்டங்கள் பரிசோதனை செய்யப்பட்டன. இச் செயற்றிட்டங்களில் பெரும்பாலானவை கொழும்பு, கம்பகா, கண்டி, கேகாலை, புத்தளம், காலி ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன.

சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில் - திட்டம் IV

இலங்கை அரசிற்குப் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றினால் இணைந்து நிதியிடப்பட்ட ஐ.அ. டொலர் 750 இலட்சம் கொண்ட ரூபாப் பணக் கடனைக் கொண்டு தேசிய அபிவிருத்தி வங்கியினால் மீள நிதியிடப்பட்ட நான்காவது சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டத்திற்கான கொடுகடன் உத்தரவாதத் திட்ட நிறுவனத்திற்கு 1991 நவெம்பரில் நாணயச் சபை ஒப்புதல் அளித்தது. இக் கொடுகடன் திட்டத்தின் கீழ்த் தேசிய அபிவிருத்தி வங்கியுடன் பங்கேற்பு உடன்படிக்கையினைப் பூர்த்தி செய்த ஒவ்

வொரு வர்த்தக வங்கிக்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கும் மத்திய வங்கி கொடுகடன் உத்தரவாதங்களை வழங்கும்.

உத்தரவாதத் திட்டத்தின் பின்வருவன தவிர்ந்து நியதிகளும் நிபந்தனைகளும் முன்னைய சிறிய நடுத்தரக் கைத்தொழில் திட்டங்களை ஒத்தனவாகவே இருந்தன.

(அ) சிறிய நடுத்தரக் கைத்தொழில் – திட்டம் III இன் கீழ்ப் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் ஒப்புதலளிக்கப்பட்ட தவணைக் கடன்களின் ஒன்று சேர்ந்த பெறுமதி ரூ. 40 இலட்சத்திலிருந்து ரூ. 80 இலட்சத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

(ஆ) கொடுகடன் உத்தரவாதம் உள்ளடக்க வேண்டிய அளவு ஆகக் கூடியது ரூ. 16 இலட்சம் என்ற அளவிற்குட்பட்டு அளவு பின்வரும் விதத்திலமைந்த துணைக் கடன்களின் அளவுடன் தொடர்புற்ற விதத்தில் தீர்மானிக்கப்படும்.

துணைக் கடன்களின் அளவு	உத்தரவாததின் அளவு
ரூ. 500,000 இற்குக் கீழ்	90%
ரூ. 500,000 இலிருந்து ரூ. 1,000,000 இற்குக்கீழ்	80%
ரூ. 1,000,000 இலிருந்து ரூ. 2,000,000 இற்குக்கீழ்	70%
ரூ. 2,000,000 இலிருந்து ரூ. 8,000,000 வரை	60%

(இ) ஒவ்வொரு உடன் முந்திய ஆண்டின் இறுதியிலும் கடன் கணக்கில் உத்தரவாதமளிக்கப்பட்டு வெளிநின்ற தொகையின் 1 சதவீதம் கொண்ட வீதத்தில் அமையும் உத்தரவாதத்திற்கான கட்டணம் ஆண்டுதோறும் ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் செலுத்தப்பட வேண்டும்.

சிறிய, நடுத்தரக் கைத்தொழில் மற்றும் பேருந்துக் கொள்வனவுக் கடன் உத்தரவாத நிதியங்களின் முதலீடு

முதலாந்தர, இரண்டாந்தர திறைசேரி உண்டியல்கள் சந்தைகளில் சிறிய, நடுத்தரக் கைத்தொழில் மற்றும் பேருந்துக் கொள்வனவுக் கடன் உத்தரவாத நிதியங்களின் முதலீடு முறையே 1988 யூலையிலும் 1991 சனவரியிலும் தொடங்கின. இரண்டு நிதிகளின் பேரிலுமான மொத்த முதலீடு 1991.12.31 அன்று ஏறத்தாழ ரூ. 3,000 இலட்சமாக விளங்கியது. இம் முதலீடுகளிலிருந்து இவ் வாண்டில் பெறப்பட்ட மொத்த வட்டி வருவாய் ரூ. 270 இலட்சமாக விளங்கியது.

தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

இவ்வாண்டில் மூன்று தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. பள்ளிக்கூடங்களிலிருந்து விலகுவோரிடையேயும் சனசக்தி நன்மை பெறுவோரிடையேயும் சுயதொழில் வாய்ப்புக்கள் பற்றிய அறிவினை ஊட்டும் நோக்குடன் பொலநறுவை மாவட்டத்தில் நடத்தப்பட்ட முதல் நிகழ்ச்சித் திட்டத்தில் 102 பங்குபெறுநர்கள் பங்குபற்றினர். இரண்டாவது

நிகழ்ச்சித் திட்டம், மொனராகலை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட தற்போதைய 130 தொழில் முயற்சியாளர்களின் தேர்ச்சி அபிவிருத்தியில் ஈடுபாட்டினை ஏற்படுத்துவதற்காக மொனராகலையில் நடத்தப்பட்டது. மென் பொறியியலில் ஈடுபட்டுள்ள 35 கைத்தொழிலாளர்களின் முகாமைத் தேர்ச்சி மற்றும் தொழில் நுட்பத்தினைத் தரமுயர்த்தும் நோக்கினைக் கொண்ட 3 ஆவது நிகழ்ச்சித் திட்டம் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. இவ்வனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை, மற்றும் பொலனறுவை, மொனராகலை, அம்பாந்தோட்டை மாவட்டங்களின் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினதும் உதவியுடன் நடத்தப்பட்டன.

கிராமியக் கொடுகடன்

வெளிநாட்டு முகவர்களினால் நிதியிடப்பட்ட பின்வரும் கொடுகடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மத்திய வங்கி 1991 இலும் தொடர்ந்து கொடுகடன் நிறைவேற்று முகவராக அதன் பங்கையாற்றியது.

1. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட பதுளை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

2. வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தினால் நிதியிடப்பட்ட கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

3. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட கிருண்டி ஓயா நீர்ப்பாசனக் குடியேற்றச் செயற்றிட்டம் (கட்டம்—II).

4. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்.

5. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட மத்திய நில நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம்.

6. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட வேளாண்மைப் புத்தாக்கச் செயற்றிட்டம்.

1991 இல் பதுளை, கேகாலை மாவட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கீழ் ரூ. 264 இலட்சம் கொண்ட கடன்கள் வழங்கப்பட்டன.

புதிய குடியேற்றவாசிகளது கடன் தேவைகளை ஈடுசெய்வதில் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களது செயலாற்றத்தினை மதிப்பிடும் பொருட்டுச் செயற்றிட்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிருண்டி ஓயா நீர்ப்பாசன, குடியேற்றச் செயற்றிட்டம் கட்டம்—II இன் கீழான பங்குபற்றும் கொடுகடன் நிறுவனங்களது கிளைகளின் செயலாற்றம் பற்றிய மீளாய்வொன்று 1991 யூலையில் நடாத்தப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் நிதியங்களிலிருந்து இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கி, அட்டன் நசனல் வங்கி, சம்பத்

வங்கி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் கண்டி, கேகாலை, களுத்துறை மாவட்டங்களில் உள்ள பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்பனவற்றினூடாக வெளிக்கள அபிவிருத்தி, நாற்று மேடை அபிவிருத்தி, தொழிற்சாலை புத்தாக்கம் போன்ற நோக்கங்களுக்காக மீள் நிதியிடலை வழங்குவதன் மூலம் சிறு உடமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கொடுகடன் கூறுக்கான நிறைவேற்று முகவர் என்ற அதன் பங்கினை 1991 இல் வங்கி தொடர்ந்து வகித்தது. 1991 இறுதியில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 189 இலட்சம் கொண்ட மீள் நிதியிடல் வழங்கப்பட்டது.

நீண்டகாலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டம் ஆ.அ. வங்கியிலிருந்து பெறப்பட்ட நிதியங்களிலிருந்து வேளாண்மையாளருக்குக் கொடுகடன் வசதிகளை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இது பதுளை, கண்டி, மாத்தளை, பொலநறுவை மாவட்டங்களிலுள்ள நீண்ட காலப் பயிர்களைக் குறிப்பாகச் சிறு ஏற்றுமதிப் பயிர்களினதும் உணவுப் பயிர்களினதும் உற்பத்தியை அதிகரிப்பதையும் அவற்றின் வர்த்தக மயப்படுத்தலை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது. கொடுகடன் திட்டத்தில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாவன இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி, வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி, மற்றும் கண்டி, கேகாலை, மொனராகலை மாவட்டங்களில் உள்ள பி.கி.அ. வங்கிகள் என்பனவாகும்.

இச் செயற்றிட்டத்தின் கீழான கொடுகடன் வசதிகள் நீண்டகாலப் பயிர்களின் பண்ணைப் பயிர் அபிவிருத்தி, தனியார் நாற்று மேடை அபிவிருத்தி, பண்ணையில் அறுவடைக்குப் பிந்திய பண்ணை மீதான கையாளலும் செயல்முறை நடவடிக்கைகளும் என்பவற்றுக்கு வழங்கப்படுகின்றன. 1991 இறுதியில் ரூ. 56 இலட்சம் மத்திய வங்கியினால் மீளளிப்பாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஆ.அ. வங்கி–சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம், நீண்ட காலப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டங்கள் என்பவற்றின் கீழான நிதியங்களின் பகிர்ந்தளிப்பு என்பவற்றின் மேம்பாட்டினை மீளாய்தல், அவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகளை அடையாளம் காணுதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு 1991 நவெம்பரில் கண்டி, கேகாலை, மாத்தளை மாவட்டங்கள் மூன்றிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

1991 ஆம் ஆண்டில் மத்திய வங்கியின் உள்நாட்டு உண்டியல் திட்டத்தின் கீழ் ரூ. 137 இலட்சம் கொண்ட தொகைக்கு மத்திய வங்கி 11 ஏற்றுக்கொள்ளத்தக்க கொடுகடன் எல்லைகளுக்கு ஒப்புதலளித்தது. தேயிலைத் துறையில் கொழுந்து இலைகளை நிரம்பல் செய்வோர், வாங்கப்பட்ட இலைத் தொழிற்சாலை உடைமையாளர் ஆகியோருக்கு உதவும் வகையில் 1989 இல் இத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து நுவரேலியா பி.கி.அ. வங்கியினூடாகப் பால் வாங்குவோர், விற்போருக்கும் நிதி உதவி வழங்கும் வகையில் இவ்விடயம் விரிவுபடுத்தப்பட்டது.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்

1985 இல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டதிலிருந்து காணப்பட்ட போக்கினைத் தொடர்ந்து சேமிப்புக்களைத் திரட்டுதல், கொடுகடனை விரிவாக்குதல், கிராமியப் பொருளாதாரத்தின் அபிவிருத்திக்காக ஏனைய

வசதிகளையும் பணிகளையும் வழங்கல் என்பனவற்றில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் நடவடிக்கைகள் 1991 இல் மேலும் விரிவடைந்தமை கிராமிய அபிவிருத்தி வங்கிக்கான நிறுவன ரீதியான அமைப்பு வேலைகளின் முக்கிய மூலமாக இவ்வங்கிகளை மாற்றி விட்டன.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி நிறுவப்பட்டமையும் கிளையமைப்புக்களின் விரிவாக்கமும்

நடைமுறையாண்டில் பொலனறுவை, மாத்தளை, இரத்தினபுரி ஆகிய நிருவாக மாவட்டங்களில் 3 புதிய பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டதுடன் தொழிற்பாட்டிலிருந்த பி.கி.அ. வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 12 இலிருந்து 1991 இறுதியில் 15 இற்கு அதிகரித்தது. அதேவேளை 1991 இல் 23 புதிய பி.கி.அ. வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டதன் மூலம் 1990 இல் 101 ஆக இருந்த கிளைகளின் மொத்த எண்ணிக்கை 124 இற்குக் கொண்டு வரப்பட்டது.

அட்டவணை 2.12

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கிளையமைப்பு

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் பெயர்	பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி நிறுவிய திகதி	தலைமை அலுவலகம்	திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை							1991 இறுதியில் மொத்தம்
			1985	1986	1987	1988	1989	1990	1991	
களுத்துறை	85.07.13	புளத்சிங்கள	4	3	4	1	—	—	1	13
மாத்தறை	85.07.28	மாத்தறை	5	2	—	1	—	—	—	8
குருநாகல்	85.08.10	குளியாப்பிட்டி	6	4	2	1	1	1	—	15
அநுராதபுரம்	85.08.12	மிஹிந்தலை	2	4	1	—	—	—	3	10
அம்பாந்தோட்டை	86.12.13	அம்பாந்தோட்டை		2	2	2	—	1	—	7
கேகாலை	87.02.08	கேகாலை			8	1	2	—1	1	11
புத்தளம்	87.07.11	சிலாபம்			5	1	—	2	1	9
காலி	87.08.17	எல்பிட்டிய			1	7	1	—	—	9
கண்டி	87.10.03	கம்பளை			6	3	—	2	—	11
நுவரெலியா	88.10.10	நுவரெலியர				1	3	2	—	6
மொனராகலை	88.10.11	புத்தளை				1	2	1	2	6
பதுளை	90.10.13	டதுளை						4	2	6
பொலநறுவை	91.05.17	பொலநறுவை							4	4
மாத்தளை	91.06.21	மாத்தளை							5	5
இரத்தினபுரி	91.09.30	இரத்தினபுரி							4	4
மொத்தம்	—	—	17	15	29	19	9	12	23	124

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வைப்புக்களைத் திரட்டுதல்

கடந்த ஆறு ஆண்டு காலத்தில் எடுத்துக் காட்டப்பட்ட போக்கின் தொடர்ச்சியாக, பி.கி.அ. வங்கிகளது கிராமிய சேமிப்புக்களின் திரட்டலில் சேமிப்புக்களின் எண்ணிக்கை, நிலையான வைப்புக் கணக்குகள் இரண்டும் 1990 இல் ரூ. 3,140 இலட்சம் பெறுமதி கொண்ட 309,616 கணக்குகளிலிருந்து 1991 இல் ரூ. 4,380 இலட்சம் பெறுமதி கொண்ட 423,680 கணக்குகளுக்கு மேலும் விரிவடைந்தது. இது முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொடர்பான எண் தொகைகளை விட முறையே 114,064 கணக்குகள் அல்லது 37 சதவீதமும், ரூ. 1,240 இலட்சம் அல்லது 39 சதவீதமும் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. 1991 இல் ஏற்பட்ட இச்சாதகமான அபிவிருத்திக்குப் புதிய சேமிப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டமை, வைப்புக்கள் மீதான கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள், பி.கி.அ. வங்கிகளின் வலையமைப்பு விரிவாக்கம், கிராமியப் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட எழுச்சி, முன்னேற்றமடைந்த பாதுகாப்பு நிலைமை என்பன முக்கிய உதவு காரணியாக விளங்கின. 1991 இன் வெளிநின்ற வைப்புக்களின் மொத்தப் பெறுமதியில் சேமிப்பு வைப்புக்கள் ரூ. 3,880 இலட்சமாக விளங்கிய வேளையில் மீதி ரூ. 500 இலட்சமும் நிலையான வைப்புக்கள் வடிவில் காணப் பட்டன.

கடன் தொழிற்பாடுகள்

கிராமியத்துறையில் கொடுகடனுக்கான வழிவகைகளை முன்னேற்றுவதில் நீண்ட காலமாக உணரப்பட்ட தேவைகளைக் கருத்திற் கொண்டு, பி.கி.அ. வங்கிகள் 1980 களின் நடுப் பகுதியிலிருந்தும் பல்வேறு கொடுகடன் திட்டங்களினூடாக இத்துறைக்கான கொடுகடன் பாய்ச்சலைத் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளன. பொருளாதார நடவடிக்கைகளின் பரந்தளவு பிரிவுகளுக்கு பி கி.அ. வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களின் (வெளிநின்ற) மொத்தப் பெறுமதி 1990 இன் ரூ. 5,170 இலட்சத்திலிருந்து 1991 இல் ரூ. 8,060 இலட்சத்திற்கு விரிவடைந்து 56 சதவீத அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது. நடைமுறையாண்டில் வழங்கப்பட்ட கடன்களின் மூலம் வேளாண்மை, சிறு அளவுக் கைத்தொழில்கள், வியாபாரம் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளும் பரந்தளவில் சுயதொழில் முயற்சிகளும் நன்மையடைந்தன. கடந்த காலத்தில் அவதானிக்கப்பட்ட போக்கினை ஒத்த விதத்தில், 1991 இறுதியில் வெளிநின்ற கடன்களின் மொத்தப் பெறுமதியில் பெரும் பங்கான 45 சதவீதம் வேளாண்மை நோக்கங்களுக்காக முக்கியமாக நெல் மற்றும் பல்வேறு துணை உணவுப் பயிர்களின் பயிர்ச்செய்கைக் காக வழங்கப்பட்டது. எனினும் நடைமுறையாண்டின் இறுதியில் பி.கி.அ. வங்கிகளின் மொத்தக் கடன் பட்டியலில் வேளாண்மைக் கொடுகடனின் சதவீதப் பங்கு 1990 இன் 52 சதவீதத்திலிருந்து 1991 இல் 45 சதவீதத்திற்கு வீழ்ச்சியொன்றைப் பதிவு செய்தது. வியாபாரம் மற்றும் வர்த்தகத் துறைகள் தொடர்பான வெளிநின்ற கடன் 1991 இல் ரூ. 860 இலட்சமாக விளங்கி மொத்தத்தில் 11 சதவீதத்திற்கு மட்டும் வகை கூறி உற்பத்தி தொடர்பான நடவடிக்கைகளை நோக்கிச் சாய்ந்திருந்தமையைப் பிரதிபலிக்கின்றது. கடந்த சில ஆண்டுகளாக பி.கி.அ. வங்கிகளின் கடன் தொழிற்பாடுகளின் குறிப்பிடத் தக்கதொரு பண்பு யாதெனில் தங்க நகைப் பிணைகளுக்கெதிராகப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் தொகைகளின் ஆண்டு அதிகரிப்பு முன்னேற்றம் கண்டிருப்பதே யாகும். பரந்தளவிலான நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட இக்கடன்கள் 1990 இல் ரூ. 940 இலட்சத்திலிருந்து 1991 இல் ரூ. 1,540 இலட்சத்திற்கு அதிகரித்

தன. இது உயர்ந்த செலவினைக் கொண்ட முறைசாரா நிதியியல் துறையிலிருந்து கிராமிய மக்கள் படிப்படியாக விலகிச் செல்வதில் குறிப்பிடத்தக்க பங்கினை யாற்றியுள்ளது.

ஏனைய நடவடிக்கைகள்

வருமான உருவாக்க நடவடிக்கைகளுக்கு நிதியியல் உதவிகளை வழங்குவதன் மூலம் கிராமியத் துறையில் வறுமையை ஒழிக்கும் அரசின் குறிக்கோளினை அடைவதற்காக நடைமுறையாண்டில் கி.அ. வங்கிகள் வழங்கி வந்த அவற்றின் ஆதரவினைத் தொடர்ந்தும் விரிவாக்கிக் கொண்டன. மத்திய வங்கியினால் ஆதரவளிக்கப்பட்ட தீவு முழுவதற்குமான சுயதொழில் வாய்ப்பு கொடுகடன் திட்டத்தின் கீழான சுய வேலைவாய்ப்பு முயற்சிகளுக்காக பி.கி.அ. வங்கிகள் ஆய்விற்குரிய காலப் பகுதியில் 9,222 கடன்படுநர்களுக்கு ரூ. 1,120 இலட்சத் தினை வழங்கின. இத்திட்டத்தின் கீழ் 1991 இல் பி.கி.அ. வங்கிகளின் செய லாற்றமானது, மொத்தமாக ரூ. 180 இலட்சம் வழங்கப்பட்டு 1,779 தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தினைப் பிரதிபலித்தது. சனசக்தி திட்டத்தின் முதலாவது சுற்று முடிவில், இத்திட்டமும் பி.கி.அ. வங்கிகளும் கூட்டாகத் தொழிற்படும் மாவட்டங்களில் ரூ. 200 இலட்சம் தொகை கொண்ட 3,197 கடன்களை வழங்கியதன் மூலம் 4,102 தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொண்டன. நடைமுறையாண்டின் இறுதியில் சனசக்தித் திட்டத்தின் இரண்டாவது சுற்றின் கீழ் பி.கி.அ. வங்கிகள் ரூ. 120 இலட்சங்களை வழங்கியிருப்பதன் மூலம் 2,329 தொழில் வாய்ப்புக்களை உருவாக்கின.

வேளாண்மையாளர்களினால் எதிர்நோக்கப்பட்ட சந்தைப்படுத்தல் பிரச் சனைகளைத் தீர்ப்பதற்குத் தாக்கமிக்க வழிமுறைகளின் அவசியத்தினை அங்கீ கரிக்கின்ற விதத்தில் ஆய்விற்குரிய காலப் பகுதியில் பி.கி.அ. வங்கிகள் வேளாண் மைச் சந்தைப்படுத்தல் உத்திகளை வலிதாக்கவும் முன்னேற்றவும் பல நடவடி க்கைகளை மேற்கொண்டன. அறுவடைக்குப் பின் வேளாண்மையாளர்கள் உற் பத்திகளை அதிகரித்த விலைகளில் விற்பதற்கு அவர்களுக்கு உதவும் நோக்குடன் 1991 இல் 5 பி.கி.அ. வங்கிகளினால் நெல் மற்றும் ஏனைய துணை உணவுப் பயிர்களுக்கு களஞ்சிய வசதிகள் வழங்கப்பட்டன. பி.கி.அ. வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்குக் களஞ்சியப்படுத்தல் வசதிகளை வழங்குவதற்காக நெற் சந்தைப்படுத்தும் சபையிடமிருந்து 8 களஞ்சியங்களை இராசாங்கனை, மீகலேவ, மொரஜாஜ, ஆனைமடு, சூரியஎற, இங்குராங்கொட, கலவெலை, வீரவில ஆகிய இடங்களில் பெற்றுக்கொண்டது. பி கி.அ வங்கிகள் கடன்படுநர்களுக்கு அவர்களின் உற்பத்திகளை விற்பதற்கான வாய்ப்புக்களையும் வசதிகளையும் வழங்கியதுடன் வேளாண்மையாளர்கள் அவர்களது அவசர காசுத் தேவைகளை ஈடுசெய்வதனை இயலச் செய்யுமுகமாகக் களஞ்சியப்படுத்திய உற்பத்திகளுக்கெதிராகக் குறுங் காலக் கொடுகடனையும் வழங்கியது. நியாயமான செலவுகளில் வேளாண்மை உள்ளீடுகளை வேளாண்மையாளர்களுக்கு வழங்கியமையும் 1991 இல் பி.கி.அ. வங்கிகளினால் வழங்கப்பட்ட வசதிகளில் இன்னொன்றாகும். நடைமுறையாண் டின் இறுதியில் பி.கி.அ. வங்கிகள் ரூ. 42 இலட்சம் பெறுமதி கொண்ட விதை நெல், வளமாக்கி, வேளாண்மை இரசாயனங்கள் மற்றும் வேளாண்மைக் கருவி களைப் பகிர்ந்தளித்தன.

கிராமியத்துறையில் புதிய கருவியொன்றைப் பிரபல்யப்படுத்தும் நோக் குடனும் அத்துடன் பாற்பண்ணைத்துறையின் தொழிற்படு மூலதனத் தேவை

களுக்கு நிதியளிப்பதற்குமாக நுவரெலியா பி.கி.அ. வங்கி 1991 மார்ச்சில் உள் நாட்டு உண்டியல் திட்டத்தில் சேர்ந்து கொண்டது. 9 மாத காலப் பகுதியில் 246,538 இலீற்றர் பாலின் பதனிடலை நிதியிடுவதற்காக ஏறத்தாள ரூ. 10 இலட்சம் பெறுமதியான 1,299 உள்நாட்டு உண்டியல்கள் பி.கி.அ. வங்கியினால் வழங்கப்பட்டன.

1991 இல் பி.கி.அ. வங்கிகள் மக்கள் சந்திப்புக்களினூடாக பி.கி.அ. வங்கிகளினால் வழங்கப்படும் வங்கித்தொழில் வசதிகள், சேமிக்கும் பழக்கம் போன்றன பற்றிக் கிராம மக்களுக்குக் கல்வி புகட்டுவதில் தொடர்ந்தும் ஈடுபட்டு வந்தன.

இலங்கையில் சிறுவேளாண்மையாளர், நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்

சிறு வேளாண்மையாளர், நிலமற்றோர் செயற்றிட்டம் கண்டி, புத்தளம், காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் செலவுத்திறன் வாய்ந்த கொடுகடன் விநியோக முறைமை, மற்றும் ஏனைய உதவிப் பணிகள் வழங்கல் மற்றும் பொதுவான பொருளாதார அபிவிருத்திக்கு உதவியளித்தல் என்பவற்றினூடாக வறுமை நிலையிலுள்ள ஏறத்தாள 32,870 கிராமிய வீட்டுத் துறையினது பொது நலன்களை அதிகரித்தலைக் குறிக்கோளாகக் கொண்டு 1990 இல் செயற்படத் தொடங்கியது.

கனேடியன் பன்னாட்டு அபிவிருத்தி முகவராண்மை (சீடா), வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம் என்பவற்றினால் நிதியிடப்பட்ட இச் செயற்றிட்டத்தின் நிறைவேற்று முகவர் இலங்கை மத்திய வங்கியாகும். இச் செயற்றிட்டம் ஏறத்தாள ரூபா 7,540 இலட்சங் கொண்ட (ஐ.அ. டொலர் 178 இலட்சம்) தொகையை வழங்குகிறது. இதில் அரசாங்கத்தின் பங்களிப்பு மொத்தச் செயற்றிட்டச் செலவில் 23 சதவீதமாகும். மேலும் 3 சதவீதம் பயன்பெறுநர்களின் சேமிப்புக்களிலிருந்து பெறப்படுகின்றது.

இச் செயற்றிட்டத்தின் நோக்கமானது வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள கிராமிய ஏழைகள் தங்களின் குறுகிய மற்றும் நடுத்தரகாலக் கொடுகடன் தேவை களைச் சமாளிப்பதற்கான நிறுவன ரீதியிலான கொடுகடன் வழங்கல்களுக்கான செயற்றிறன் வாய்ந்த கொடுகடன் விநியோகப் பொறிமுறையொன்றினை விருத்தி செய்தல் ஆகும். அத்துடன், இச் செயற்றிட்டமானது கொடுகடன் நெறிமுறை களைத் திட்டத்தினுள் உட்புகுத்துகின்ற அதேவேளையில் பிணையற்ற கடன்களை வழங்குவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. அத்துடன் இலக்குகளில் 40 சதவீதத்திற்குக் குறையாதளவிற்குப் பெண்களின் பங்குபற்றலையும் ஊக்குவிக் கின்றது. மற்றொரு குறிக்கோளானது பிரதேச மட்டத்தில் மீள் முதலிடுவதற் கான கிராமிய சேமிப்புக்களைப் பெருமளவில் திரட்டுவதாகும்.

இச் செயற்றிட்டமானது இலங்கை மத்திய வங்கியின் வங்கித் தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தில் நிறுவப்பட்டுள்ள செயற்றிட்ட மத்திய அலுவல கத்தினூடாக முகாமைப்படுத்தப்படுகின்றது. இது நான்கு மாவட்டங்களிலுமுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. செயற்றிட்ட மாவட்ட அலுவலகங் கள் 1990 மேயில் புத்தளத்திலும், கண்டியிலும் 1990 திசெம்பரில் காலியிலும், மாத்தறையிலும் திறக்கப்பட்டுக் கொடுகடன் திட்டம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

மதிப்பீடு செய்யப்பட்ட பயன்பெறுநர்களின் எண்ணிக்கை புத்தளம், கண்டி ஆகிய மாவட்டங்களில் 18,770 என்ற மட்டத்திலும் காலி, மாத்தறையில் 14,100 ஆகவும் விளங்கியது. செயற்றிட்டப் பயன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் அடிப்படையில் கண்டி, புத்தளம் ஆகிய இரு மாவட்டங்களில் ஆய்விற் குட்பட்ட இவ்வாண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கை, தொகை என்பன கணிசமாக அதிகரித்தன. இதைப்போன்றே பயன் பெறுநர் களுக்கிடையேயிருந்து திரட்டப்பட்ட சேமிப்புக்களானது 1990 திசெம்பர் 31 இல் இருந்தவாறான ரூபா 5.24 இலட்சத்திலிருந்து 1991 திசெம்பர் 31 இல் ரூபா 27 இலட்சத்திற்கு அதிகரித்தன.

கண்டி, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் 1990 திசெம்பர் 31வரையில் பகிர்ந் தளிக்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகை ரூபா 39 இலட்சமாகவும் 1991 இறுதியில் இது ரூபா 202 இலட்சமாகவும் விளங்கிப் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன்களின் ஒன்று சேர்ந்த தொகை ரூபா 241 இலட்சமாக உயர்வடைந்தது.

காலி, மாத்தறை ஆகிய இரு மாவட்டங்களில் கொடுகடன் தொழிற்பாடுக ளின் முன்னேற்றமும் திருப்திகரமாயுள்ளது. 1991 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகை ரூபா 69இலட்சமாக விளங்கியது.

வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம், கனேடியன் பன் னாட்டு அபிவிருத்தி முகவராண்மை ஆகியவற்றின் கீழ்வரும் மாவட்டங்களில் அடையப்பட்ட கடன் அறவிடல் வீதங்கள் சராசரியாக முறையே 91 சதவீத மாகவும், 99 சதவீதமாகவும் விளங்கி இதுவரையில் திருப்திகரமாயுள்ளது.

1991 திசெம்பர் 31 வரையில் குறுகிய, நடுத்தரகாலக் கடன்களாக மொத்தம் ரூபா 310 இலட்சம் கொண்ட தொகை நான்கு மாவட்டங்களிலுமுள்ள மொத்தமான 5,372 பயன்பெறுநர்களுக்குச் சராசரியாக ஒவ்வொன்றும் ஏறக் குறைய ரூபா 5,800 அளவிலான கடனாக அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆய்விற் குட்பட்ட காலப்பகுதியில் சேமிப்புத் திரட்டல் நடவடிக்கைகளும் முனைப்படை யத் தொடங்கியதுடன் 1991 திசெம்பர் 31 இல் குழு சேமிப்புகள் நிதியம் ரூபா 34 இலட்சத்திற்கு உயர்வடைந்திருந்தது.

சமூக–பொருளாதார அளவீடுகள், குழுக்களை அமைத்தல், கிராமிய சேமிப்புக்களைத் திரட்டுதல், பயன்பெறுநர்களின் திறன்களை விருத்தி செய்வதற் கான பயிற்சிகளை அளித்தல், கடன்கள் வழங்கல் அல்லது விதந்துரைத்தல் மற்றும் வெளிப்படையான வற்புறுத்தலின் மூலம் கடன்களை மீளப் பெறுவதற்கு உதவியளித்தல் என்பனவற்றை மேற்கொண்டு உள்ளார்ந்த பயன்பெறு திட்டத் தைத் தயாரிப்பதில் பங்குபற்றும் முகவர்கள் முக்கிய பங்கினை ஆற்றுகின்றனர்.

பயிற்சியானது, செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் ஒரு பகுதியாக அமைந்துள்ளதுடன் அலுவலர் மற்றும் பயன்பெறுநர்களின் பயிற்சிக்கென ரூ. 357 இலட்சங் கொண்ட தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. பயன் பெறுநர்களுக்குக் குழு கொடுகடன் விநியோக பொறிமுறையினூடாக நிதியளித்தலானது இலங்கையி லுள்ள வங்கிகளால் பரந்தளவில் முயற்சிக்கப்படவோ அல்லது பரிசோதனை செய்யப்படவோ இல்லை. ஆகையால் செயல்திறன் வாய்ந்த அலுவலர், பயன் பெறுநர் பயிற்சியானது செயற்றிட்டத்தின் வெற்றிக்கு மிக முக்கியமானதாகும். உற்பத்தி, உற்பத்தித் திறன் என்பனவற்றை அபிவிருத்தி செய்யும் வகையில் புதிய தொழில்நுட்பத்தைக் கிராமியப் பிரதேசங்களுக்கு இடம் மாற்றல், தொழில்

முயற்சி மற்றும் முகாமை நுட்பங்கள் அபிவிருத்தி என்பனவற்றில் செயற்றிட்ட அலுவலர்களுக்கும் பங்குபற்றும் முகவர்களின் அலுவலர்களுக்கும் வெளிநாட்டுப் பயிற்சியளித்தல் என்பனவற்றிற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட்டன.

மாவட்ட சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள், பெண்களின் பணியகம் லங்கா மகில சமித்தி, தர்ம விஜய பவுண்டேசன் போன்ற அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் கெயார் இன்டர்னெசனல், யுனிசெப் போன்ற வெளி நாட்டு முகவர்களும் இச் செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலில் பங்குபற்று கின்றன. இச் செயற்றிட்டத்தில் பங்குபற்றும் கொடுகடன் நிறுவனமாகச் செயற் றிட்டத்தின் பயன்பெறுநர்களுக்குக் கொடுகடனை வழங்கும் முக்கிய பொறுப்பு நான்கு மாவட்டங்களிலுமுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சி கல்லூரி

கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி 1991 இல் 2,385 ஆட்களுக்கு 97 பயிற்சி நெறிகளை ஒழுங்குசெய்து நடத்தியது. இது, 1990 இல் 1,608 ஆட்களுக்கு நடத்தப்பட்ட 50 பயிற்சி நெறிகளைவிடக் குறிப்பிடத் தக்களவிற்கு அதிகமானதாகும். 97 பயிற்சி நெறிகளில் 63 நெறிகள் வெளி யிடங்களில் நடத்தப்பட்டதுடன் 1,700 சிறு அளவு தொழில் முயற்சியாளர்களும் சுயதொழிலாளர்களும் கலந்து கொண்டனர். இவ்வாறு பங்குபற்றியோரில் 1,198 பேர் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் நன்மை பெறுவோராகவிருந்தனர். மீதி 34 பயிற்சி நெறிகளும் வங்கித் தொழில் மற்றும் அதனோடிணைந்த துறை களில் ஈடுபட்டிருந்த அலுவலர்களுக்கு நடத்தப்பட்டதுடன் இதில் 685 ஆட்கள் கலந்து கொண்டனர். இப் பங்குபற்றுநர்களில் 272 ஆட்கள் இலங்கை மத்திய வங்கியிலிருந்தும் 266 பேர் வர்த்தக வங்கிகளிலிருந்தும் 74 பேர் பி.கி.அ. வங்கி களிலிருந்தும் 68 பேர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், ஏனைய நிதியியல் நிறுவனங்கள், நிதிக் கூட்டுநிலையங்கள், தேசிய சேமிப்பு வங்கி மற்றும் சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் போன்ற முகவர் நிலையங்களிலிருந்தும் கலந்து கொண்டனர்.

1991 இல் வழங்கப்பட்ட பயிற்சியின் முக்கிய துறைகளாகக் கிராமிய வங்கித்தொழில், அபிவிருத்தி சார்ந்த செயற்றிட்டங்கள், வர்த்தக வங்கித் தொழில், உள்நாட்டு வர்த்தகம், வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள், வாடகைக் கொள்வனவும் குத்தகை நிதியிடலும், முகாமைத்துவம், பயிற்சியாளர் களின் பயிற்சி, செயற்றிட்டங்களைக் கண்காணித்தலும் மதிப்பிடலும், தொடர் பூட்டல், சிறு அளவு தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி என்பன விளங்கின. 1991 இற்காக அட்டவணையிடப்பட்ட நெறிகளுக்குப் புறம்பாக, வேண்டு கோளின் பேரில் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி மாத்தறை மாவட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் கிராமியக் கொடுகடன் முன்னோடி செயற்றிட்டத்தின் நன்மை பெறுநர்களுக்கும், சிறு வேளாண்மையாளர் நிலமற் றோர் கொடுகடன் செயற்றிட்டத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் இரத்தினபுரி பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியில் புதிதாகச் சேர்க்கப்பட்டவர்களுக்கும் பல சிறப்புப் பயிற்சி நெறிகளை நடாத்தியது.

இவ்வாண்டில், கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியினால் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளையும் தற்போதைய அபிவிருத்திகளின் பின்னணி யில் அவற்றுக்குள்ள தொடர்புகளையும் ஆய்வதற்குக் குழுவொன்று நியமிக்கப்

பட்டது. குழுவின் அறிக்கை 1991 ஒற்றோபரில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் விதந்துரைப்புக்கள் 1992 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைப்பதிலும், திட்டமிடுவதிலும் பின்பற்றப்பட்டுமுள்ளன.

ஊழியர் சேமநிதியம்

ஊழியர் சேம நிதியச் சட்ட நியதிகளின்படி உதவுதொகைகள், தண்டப் பணங்கள், நிதியத்தின் பண முதலீட்டு வருவாய் என்பனவற்றைப் பெற்றுக் கொள்ளும் பொறுப்பும் பதிவு செய்யப்பட்ட தொழில் தருநர்களினதும் தனிப் பட்ட உறுப்பினர்களினதும் கணக்குகளைச் சரியாகப் பேணுவதும் உறுப்பினர்களின் மீளளிப்பு நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல் என்பன மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேம நிதிய சட்ட ஏற்பாடுகளின் நிருவாகம், நடைமுறைப்படுத்தல் என்பனவற்றைக் கவனிக்கும் தொழிற் திணைக்கத்தின் ஊழியர் சேம நிதியப் பிரிவின் நெருங்கிய ஒத்துழைப்புடன் மத்திய வங்கியின் ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தினால் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உதவு தொகைகள்

நிதியத்தினால் பெறப்பட்ட உதவுதொகை 1990 இன் ரூபா 39,095 இலட்சத்திற்கெதிராக 1991 இல் ரூபா 44,213 இலட்சமாக விளங்கியது. இது முந்திய ஆண்டில் பெறப்பட்ட உதவுதொகையின் மட்டத்தினைவிட ரூபா 5,118 இலட்சம் அல்லது 13 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.

உறுப்பினர்களின் நிலுவைகள்

ஆய்விற்குரிய ஆண்டிற்கான வட்டி ஒதுக்கீடுகளிற்கு முன் 1991 திசெம்பர் 31 ஆம் நாளில் உள்ளவாறான உறுப்பினர்களின் நிலுவைகள் ரூபா 437,687 இலட்சமாக விளங்கியது. இது 1990 இனைவிட ரூபா 74,710 இலட்சம் அல்லது 20.5 சதவீதம் அதிகமானதாகும்.

முதலீடுகள்

ஆய்விற்குரிய ஆண்டில் நிதியம் அரச பிணைகள், திறைசேரி உண்டியல்கள், வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை (1991 ஒற்றோபர் 21 இலிருந்து) என்பவற்றில் 1990 இன் ரூபா 110,447 இலட்சத்திற்கெதிராக ரூபா 160,144 இலட்சத்தினை முதலீடு செய்தது. இது 1990 இன் முதலீட்டு மட்டத்தினைவிட ரூபா 49,677 இலட்சம் அதிகமானதாகும். 1991 திசெம்பர் 31 ஆம் நாளன்று நிதியத்தின் மொத்த முதலீடுகள் ரூபா 462,463 இலட்சமாக விளங்கின. இது 1990 இன் மட்டத்தினைவிட ரூபா 77,796 இலட்சம் அதிகமானதாகும். இது அழைப்புப் பணச் சந்தையில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 200 இலட்சம் கொண்ட தொகையையும் உள்ளடக்கும்.

முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்

1989 இல் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்தின் நியதிகளின்படி ஊழியர் சேம நிதியத்திற்கு வருமான வரியிலிருந்து வழங்கப்பட்டிருந்த விலக்களிப்பு புறக்கீடு செய்யப்பட்டது. இதன்படி 01.04.1989 இலிருந்து

செயற்படும் வகையில் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட எல்லா வருவாய்களும் 10% தடுத்து வைத்தல் வரிக்கு உட்படுத்தப்பட்டன. 1991 இல் முதலீட்டு வருமானத்திலிருந்து தடுத்து வைத்தல் வரிக்காகக் கழிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா 5,648 இலட்சமாகும்.

முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய் 1990 இன் ரூபா 41,876 இலட்சத்திற்கெதிராக 1991 இல் ரூபா 50,917 இலட்சமாக விளங்கி ரூபா 9,041 இலட்சங் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது.

மீளளிப்புக்கள்

ஊழியர் சேம நிதிய நன்மைகளின் மீளளிப்பு மூலம் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 1990 இன் ரூபா 12,093 இலட்சத்திற் கெதிராக 1991 இல் ரூபா 13,442 இலட்சமாக விளங்கியது. இது ரூபா 1,349 இலட்சம் அல்லது 11.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. நன்மை களின் மீளளிப்புக்காக 1990 இல் மீளச் செலுத்தப்பட்ட 44,813 கோரல்களுக் கெதிராக ஆய்விற்குரிய ஆண்டில் 38,910 கோரல்கள் செலுத்தப்பட்டன.

உறுப்பினர்களின் நிலுவைகளின் மீதான வட்டி

நிதியத்தின் பண முதலீட்டிலிருந்து பெறப்பட்ட வருவாயிலிருந்து ஒவ்வொரு வருட இறுதியிலும் உறுப்பினர்களின் நிலுவைகளுக்கு வட்டி வழங்கும்படி ஊழியர் சேம நிதியம் கேட்கப்பட்டுள்ளது. 1991 இறுதியில் உறுப்பினர்களின் நிலுவைகள் மீது செலுத்தப்பட வேண்டிய வட்டி வீதம் 11.5 சதவீதமாக விளங்கியது.

உறுப்பினர்களின் வரவில் ஆண்டு இறுதியில் நிலுவையாக நிற்கும் ஒன்று சேர்ந்த தொகையின்மீது வட்டி செலுத்தப்படுகின்றது. பணம் பெறப்பட்ட நாளைக் கணக்கில் எடுக்காது ஆண்டுக் காலத்தில் பெறப்பட்ட எல்லா உதவு தொகைகளும் ஆண்டு முழுவதற்குமான வட்டியைப் பெறத் தகுதியுடையதாகும். உதாரணமாகத் திசெம்பர் மாதத்தில் பெறப்பட்ட உதவுதொகைகள் அதே ஆண்டின் சனவரி மாதத்தில் பெறப்பட்ட உதவுதொகைகளைப் போன்று முழு வருடத்திற்குமான வட்டியைப் பெறும். எனவே தாக்கமுள்ள வட்டி வீதம் ஓரளவு கூடுதலானதாகும்.

ஊழியர் சேமநிதிய வீடமைப்புக் கடன் திட்டம்

குறிப்பிட்ட சில கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்பு நோக் கங்களுக்காக உறுப்பினர்கள் தமது வரவில் நிற்கும் நிலுவையின்மீது 75% வரையிலான தொகையைக் கடனாகப் பெறுவதற்கு இயலச் செய்யும் வகையில் ஊழியர் சேமநிதியச் சட்டம் 1988 இன் எண் 42 கொண்ட சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டது. இத்திட்டத்தில் பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங் களாவன வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, நாட்டில் பரவலாக உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவாகும்.

1991 திசெம்பர் 31 ஆம் நாளின்படி ஊ.சே.நி. திணைக்களம் நிலுவைகளை உறுதிப்படுத்துவதற்காக மொத்தமாக 38,761 விண்ணப்பங்களைப் பெற்றது.

இதில் செயல்முறைப்படுத்தப்பட்டுச் சம்பந்தப் பட்டதொழில் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

தற்பொழுது கிடைக்கத்தக்க தரவுகளின் அடிப்படையில் நிதியத் தொழிற் பாடுகளின் ஒப்பீட்டுக் கூற்று கீழே தரப்படுகின்றது.

அட்டவணை 2.13

ஊழியர் சேமநிதியப் புள்ளி விபரங்கள் 1990–1991

(ரூ. பத்து இலட்சங்களில்)

	1990	1991
1. பெறப்பட்ட உதவு தொகைகள் ...	3,909.5(அ)	4,421.3 (அ)
2. முதலீடுகள் ...	11,044.7(ஆ)	16,014.4 (ஆ)
3. முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்கள் ...	4,187.7	5,091.7
4. மீளளிப்புக் கொடுப்பனவுகள் ...	1,209.4	1,344.2
5. மீளளிப்புக்களின் எண்ணிக்கை ...	44,813	38,910
6. வட்டி வீதம் (%) ...	11.5%	11.5%
7. உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி ஒதுக்கல் ...	4,174.2	5,041.2

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவு தொகைகள் நீங்கலாக.

(ஆ) அரச பிணைகளில் மேல் முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சிப் பெறுகைகளையும் குறுங்கால முதலாந்தர திறைசேரி உண்டியல்களிலும் அழைப்புப் பணச் சந்தையிலும் முதலீடு செய்யப்பட்ட பணத்தையும் உள்ளடக்கும்.

செலாவணிக் கட்டுப்பாடு

1991 இல் மத்திய வங்கியினால் செலாவணிக் கட்டுப்பாட்டு நடவடிக்கை முறைகளில் பின்வரும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

1. இறக்குமதிகள்

(அ) தயாரிப்பாளர் சுங்கப் பிணைத் திட்டத்தின் கீழ் மூலப் பொருட்களின் இறக்குமதி

120 நாள் பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளிலும், நாணயக் கடிதங்கள் நிறுவப்படாமலேயே ஆவணங்களின் மீதான கொடுப்பனவு நியதிகளிலும், ஏற்றுமதிசார் ஆடை உற்பத்தியாளர்களுக்கு அவர்களது மூலப் பொருட்களை இறக்குமதி செய்ய இயலச் செய்யும் வகையில் ஆரம்பத்தில் இத்திட்டம் பரீட்சார்த்த அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்டுக் காலத்துக்குக் காலம் நீடிக்கப்பட்டது. (1990.01.23 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசி/4/90 (ஆ) (இத்திட்டம் செயற்படுத்தப்பட்ட காலப் பகுதியினுள் எத்தகைய கைத்தொழிலாளரினாலும் இவ் வசதி பயன்படுத்தப்படாமையின் காரணமாக ஏற்றுமதி சார்ந்த பெறுமதியூட்டப்பட்ட இரத்தினக்கல் கைத்தொழி

வின் வைரக்கற்கள் நீங்கலாகச் செப்பமற்ற இரத்தினக்கற்களின் இறக்குமதிக்கும் 90 நாட்களுக்குக் குறைக்கப்பட்டு விரிவாக்கப்பட்ட இவ்வசதி (1990.01.26 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/5/90 (ஆ)) 1991 மார்ச்சு இறுதியில் காலாவதியாக்கப்பட்டது. எனினும், ஏற்றுமதிசார் வைரக்கல் கைத்தொழிலின் பிரதிநிதித்துவத்தைத் தொடர்ந்து இத்திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு வைரக்கற்களின் இறக்குமதியும் அதனது செயல் எல்லைக்குள் கொண்டு வரப்பட்டது. (1991.12.11 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/113/91 (ஆ)).

(ஆ) பிற்போடப்பட்ட கொடுப்பனவு நியதிகளில் இறக்குமதிகளுக்கான நாணயக் கடிதங்களை நிறுவுதல்

உயர் முன்னுரிமைத் துறைகள் (உதாரணம்: ஏற்றுமதி அபிவிருத்தி சார்ந்த கைத்தொழில்களும், வேளாண்மையும்) மிக அத்தியாவசிய விடயங்கள் (உதாரணம்: குழந்தைப் பால்மா, மருந்தாக்கற் பொருட்கள் மற்றும் கல்வி) ஆகிய இரண்டும் தொடர்பான பொருட்களின் இறக்குமதிக்கான பிற்போடப் பட்ட கொடுப்பனவு வசதிகளின் வழங்கல் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் பேரளிக்கப்பட்டுள்ளது. (1991, திசெம்பர் 11 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/112/91 (ஆ)) எனினும் வெளிநாட்டவரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கூட்டு நிலையங்களுக்கு இந்த வசதிகள் வழங்கப்படமாட்டாது. அதாவது அத்தகைய இறக்குமதிகள் மேலே குறிப்பிடப்பட்ட இறக்குமதிகளின் வகைப்படுத்தலினுள் காணப்பட்டாலும் பங்குரிமையில் 50 சதவீதத்திற்கு மேலானவை வதிவற்றோர் வசம் காணப்படுமிடத்து மூலதனப் பொருட்களின் இறக்குமதிக்காக அத்தகைய வசதிகள் வழங்கப்படமாட்டாது.

(இ) க.ஏ.பெ. அல்லது கொ.கா. நியதிகளில் நாணயக் கடிதங்களை நிறுவுதல்

ஏதேனும் கப்பலில் அல்லது வானூர்தியில் சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பதற்கான செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முன் ஒப்புதல் இன்றியே க.ஏ.பெ. மற்றும் கொ.கா. நியதிகளில் நாணயக் கடிதங்களை நிறுவுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (1991.05.23 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/33/91 (ஆ)) இந்தத் திருத்தமானது பொருட்களை ஏற்றிச் செல்லலைத் தேசிய சரக்கேற்றுக் கலன்களுக்கு மட்டும் கட்டுப்படுத்தலையோ அல்லது வேறு சரக்கேற்று முறைகளுக்குச் சொந்தமான கலன்களில் பொருட் போக்குவரத்தை மேற்கொள்ளுவதற்குத் தேசிய சரக்கேற்று முறையிலிருந்து தளர்த்தலைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவசியத்தையோ இனிமேலும் தேவைப்படுத்தவில்லை.

(ஈ) இழுபொறிகள்

இறக்குமதி செய்யப்பட்ட நான்கு சக்கர இழுபொறிகள் 5 வருடத்திற்கு மேலான பழமையைக் கொண்டிருக்கக் கூடாது எனத் தேவைப்படுத்தும், 1990 நவெம்பர் 30 இல் முடிவடைந்த ஓராண்டுக் காலத்துக்குச் செயற்பட்டுக் கொண்டிருந்த கட்டுப்பாட்டு விதி 1991 நவெம்பர் 30 இறுதி வரை நீடிக்கப்பட்டது. (1991.05.31 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/04/91 (ஆ)).

(உ) பாதுகாப்புத் தலைக் கவசங்கள்

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சினால் ஒழுங்கு விதிகள் முறைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இப்பொழுது இறக்குமதி செய்யப்படும் பாது காப்புத் தலைக் கவசங்கள் இலங்கைத் தரக் கட்டளை 517: 1981 ''வாகனப் பாவனையாளர்களுக்கான தலைக் கவசங்களுக்கான குறித்துரைக்கப்பட்ட விளக்க விபரங்கள்'' என்பதில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்க விபரங்களை ஒத்ததாக இருத்தல் வேண்டும். (1991.05.31 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத் தல்கள் எண் ஈசி/34/91 (ஆ)).

(ஊ) இறக்குமதியாளர்களின் தனிப்பட்ட பாவனைக்காகப் பொருட்களின் இறக்குமதி

இறக்குமதியாளரின் தனிப்பட்ட பாவனைக்கான பொருட்கள் கைத்தொழில் களுக்கான மூலப் பொருட்கள், பொறிகளுக்கான உதிரிப்பாகங்கள் (வர்த்தக தொகைகளில் அல்ல) என்பனவற்றின் இறக்குமதி மீதான வரையறை கொழும்பு கொ.கா.க. ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 500 இலிருந்து ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 1,000 இற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. (1991.07.12 தேதியிடப் பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசி/47/91 (ஆ)).

2. ஏற்றுமதிகள்

(அ) பின்வரும் நடவடிக்கைகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்குப் பேரளிக் கப்பட்டன.

(1) கோப்பி மற்றும் கழிவு உலோகங்களின் ஏற்றுமதி (1991.11.28 தேதியிடப்பட்ட ஈசி/108/91 (எச்)).

(2) திருத்தக் கட்டணங்களின் பணவனுப்பல், படங்களின் விருத்தி, அச் சிடல் மற்றும் வண்ணங்களை வேறுபடுத்தல். (1991.11.25 தேதி யிடப்பட்ட ஈசி/100/91 (எச்)).

(3) தனியாருக்குச் சொந்தமான நகைகள், பொருட்கள் என்பனவற்றின் ஏற்றுமதி, திருத்தலுக்காக அனுப்பப்பட்டுத் திரும்பப் பெறும் விடயங் கள், சினிமாப் படங்களை விருத்தி செய்து அச்சிடுவதற்காக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல். (1991.11.28 தேதியிடப்பட்ட, ஈசி/104/91 (எச்)).

(4) வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட பணவனுப்பல்களுக்கு எதிராக வர்த் தகமல்லா ஏற்றுமதிகள், பன்னாட்டுக் கடன் அட்டைகளின் மீது கொண்டு வரப்பட்ட நியமங்கள் (1991.11.28 தேதியிடப்பட்ட 9 ஈசி/105/91 (எச்)).

(5) ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 3,500 வரையில் அன்பளிப்புக்களும் வர்த்தக மாதிரிகளும். (1991.11.28 தேதியிடப்பட்ட ஈசி/106/91 (எச்)).

(6) ஏற்றுமதிகளின் மீதான உரிமைக் கோரல்கள் மீதான பணவனுப்பல்கள் (எடைக் குறைப்பு தரம் என்பன). (1991.11.28 தேதியிடப்பட்ட ஈசி/107/91 (எச்)).

(ஆ) பயணிகளால் உள்ளே கொண்டுவரப்பட்ட தனியார் விடயங்களின் மீள்–ஏற்றுமதி

வெளிநாடுகளிலிருந்துவரும் பயணிகளினால் இலங்கையினுள் கொண்டு வரப் படும் தனியார் விடயங்களின் (உதாரணமாக: சிறு கணனிகள், மின் உபகரணங் கள்) மீள் ஏற்றுமதிகளினைச் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துக்கு அறிவிக்காமலேயே மேற்கொள்ளும்படி சுங்கப் பணிப்பாளர் நாயகம் அறிவிக்கப் பட்டார்.

(இ) ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கடன்கள்

ஏற்றுமதியாளர்களுக்கான ரூபா மீள் நிதியிடல் வசதிகள் கட்டுப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து, ஏற்றுமதிக் கட்டளைகளை நிறைவேற்றும் நோக்கத்திற் காகத் தேவைப்படும் உள்ளீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளுக்கு நிதியிடு வதற்காக ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களது வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் பிரிவுகளிலிருந்து வெளிநாட்டு நாணயக் கடன்களை வழங்குவதற்கு வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. இந்த வசதியானது உறுதிப்படுத்தப் பட்ட ஏற்றுமதிக் கட்டளையின் மொத்தப் பெறுமதியின் 70 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. (1991.09.20 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறி வுறுத்தல்கள் எண் ஈசீ/66/91 (சி உம், எப் உம்).

1991 ஓகத்தில், தேயிலை ஏற்றுமதியாளர்களுக்குக் கப்பலேற்றலுக்கு முன் னான தமது கடன் தேவைப்பாடுகளுக்கு நிதியிடுவதற்காகச் சரக்கு விலைப் பட்டியல் பெறுமதியின் 75 சதவீதம் வரையிலான வெளிநாட்டு நாணயக் கடன் பெறுகைக்கான வசதிகள் வழங்கப்பட்டன. இந்த வசதி 1991.12.31 ஆம் நாளன்று காலாவதியானது. (1991.09.26 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/70/91 (சி உம், எப் உம்).

3. பயணம்

(அ) 1991 மாச்சில், இந்தியப் பிரதேசத்துக்கான பயணத்தின் நிகழ்வு ஈராண்டுக்கொருதடவையிலிருந்து ஆண்டுக்கொரு தடவைக்குத் தளர்த்தப்பட்டது. (1991.03.28 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்எண் ஈசீ/22/91 (கே)). 1991 யூனில், அடிப்படை செலாவணி உரித்துக்கள் விஞ்சப்படாது காணப்படுமிடத்தும், ஏனைய விமான மார்க்கமாக ஒரே ஒரு பயணமும், பயண ஏற்பாடுகள் தேசிய விமானமார்க்கமாக மேற்கொள்ளப்படுமிடத்தும் இந்தியப் பிரதேசம் அல்லாத பிரதேசங்களுக்கான பயணம் ஆண்டொன்றுக்கு ஒரு தடவை யிலிருந்து ஆண்டொன்றினுள் எத்தனை தடவைக்கும் மேற்கொள்ளலாம் என மேலும் தளர்த்தப்பட்டது. (1991.06.14 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/40/91 (கே)) இந்தியப் பிரதேசமல்லாத பிரதேசங் களுக்கான அடிப்படைப் பங்கீடு 1991 நவெம்பரிலிருந்து ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 2,500 இற்கு அதிகரிக்கப்பட்டது. (1991.10.31 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/91/91 (கே உம், ஈ உம்) ரூ. 200,000 வருமான வரி செலுத்தும் வதிவுடைய இலங்கைத் தொழிற்துறையினருக்கு அடிப்படைப் பங்கீட்டுக்கு மேலதிகமாக ஆகக் கூடியது 14 நாட்களுக்கு, இந்திய பிரதேச நாடுகள் தொடர்பாக நாளொன்றுக்கு, ஐக்கிய அமெரிக்க டொலர்கள்

150 கொண்டதும் இந்தியப் பிரதேசமல்லாத நாடுகளுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 225 கொண்டதுமான சிறப்புப் படியொன்று அனுமதிக்கப்பட்டது. (1991.03.20 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/15/91 (கே)).

(ஆ) குழுப் பயணிகளாக இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு யாத்திரை மேற்கொள்ளும் ஒவ்வொரு ஆளுக்கும் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 600 கொண்ட சிறப்புப் படியொன்று அனுமதிக்கப்பட்டது. அனைத்து மதத் தினருக்கும் இந்த வசதி அனுமதிக்கப்பட்டது. (1991.03.28 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/22/91 (கே)).

(இ) அடிப்படைப் படிக்குத் தகைமை பெறுவதற்கான ஆறுமாத காலப் பகுதிக்கான தொடர்ச்சியான வதிவுத் தேவைப்பாடு மீளப் பெறப்பட்டது. (1991.03.27 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/19/91 (கே)).

(ஈ) வாணிபப் பயணங்களுக்கு நாள் ஒன்றுக்கான படி அதிகரிக்கப்பட்டது (1991.06.24 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/42/91 (கே).

(உ) வெளிநாட்டுச் செலாவணியைச் சுங்கத்துக்கு வெளிப்படுத்துவதில் தளர்த்தல்.

இலங்கைக்கு வருகைதரும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டை வைத்திருப்போர் நாட்டினுள் கொண்டுவரும் வெளிநாட்டு நாணயத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர் கள் 5,000 வரையில் அல்லது வேறு பெயர் குறிப்பிடப்பட்ட நாணயங்களின் அதற்குச் சமமான தொகை வரையில் வெளிப்படுத்தத் தேவையில்லை. (1991.05.02 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/29/91 (டி)). இலங்கைப் பிரசைகளும் அவர்கள் வெளிநாட்டில் மேற்கொள்ளும் பயணங்களின் எண்ணிக்கையினைக் கருத்திற்கொள்ளாது ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 5,000 வரையில் அல்லது வேறு பெயர் குறிப்பிடப்பட்ட நாணயங் களில் அதற்குச் சமமான தொகை வரையில் தம்முடன் வெளிநாட்டு நாணயங் களை இறக்குமதி–ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டனர் (சுங்கத்துக்கு முகவரி யிடப்பட்ட கடிதம்). சுங்கத்துக்கு வெளிப்படுத்தல் ஒன்றை மேற்கொள்ளுவதன் மூலம், மாற்றப்படக்கூடிய வெளிநாட்டு நாணயத்துக்கு மேலதிகமாக மாற்றப்பட முடியாத வெளிநாட்டு நாணயத்தின் எத்தகைய தொகையினையும் தம்முடன் இறக்குமதி செய்வதற்கும் அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். (1991.03.27 தேதி யிடப்பட்ட ஈசீ/18/91 (டி)).

(ஊ) மீள்மாற்றல்

காசாக மாற்றப்பட்டமைக்கான மூலப் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் வெளிச்செல்லும் இடத்தில் வெளிநாட்டு நாணயம் வெளிப்படுத்தப் பட்டதா இல்லையா என்பதைக் கருத்திற்கொள்ளாது, மீள் மாற்றலுக்கு ஆறு மாதங்கள் முன் சென்ற காலப் பகுதியினுள் உள்ளே கொண்டுவரப்பட்ட அல்லது பெறப்பட்ட ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 5,000 அல்லது அதற்குச் சமமான நாணயங்களில் அத்தொகைகளுக் சமமான தொகை வரையிலான செலவிடப் படாத ஏதேனும் இலங்கை ரூபாக்களை மீள் மாற்றல் செய்வதற்கு வெளிநாட்டுக்

கடவுச் சீட்டை வைத்திருப்பவர்கள் அனுமதிக்கப்பட்டனர். (1991.08.28 தேதியிடப்பட்ட ஈசீ/62/91 (டி)). வங்கிகளினூடாகப் பெறப்பட்ட அத்தகைய தொகைகள், வெளிச்செல்லும் இடத்திற்கு மேலதிகமாக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் அனைத்துக் கிளைகளிலும் வரைவுகள், தந்தி மூலமான மாற்றல்கள், பயணிகள் காசோலை என்பனவற்றிற்கு மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்படும். ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 5,000 அல்லது அதற்குச் சமமான தொகையை விஞ்சிய தொகைகளின் மீள் மாற்றலானது உள்ளே கொண்டுவரப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் பெறுகைக்கான பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் மட்டுமே அனுமதிக்கப்படும். (1991.11.12 தேதியிடப்பட்ட ஈசீ/111/91 (டி)).

4. கல்வி

1991.03.20 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் ஐக்கிய இராச்சியத்துக்குச் செல்லும் மாணவர்களுக்கான வாழ்க்கைப்படி பட்டதாரி மாணவர்கள், தொழிற்றுறை மற்றும் தொழில்நுட்பக் கல்வி தொடர்பாக ஆண்டொன்றுக்கு ஸ்டேர்லிங் பவுண்டுகள் 3,120 இலிருந்து இடேர்லிங் பவுண்டுகள் 4,800 இற்கும் பட்டப் பின்படிப்பு தொடர்பாக ஆண்டொன்றுக்கு ஸ்டேர்லிங் பவுண்டு 3,840 இலிருந்து ஸ்டேர்லிங் பவுண்டு 5,400 இற்கும் அதிகரிக்கப்பட்டது. (1991.03.20 தேதியிடப்பட்ட ஈசீ/16/91 (ஈ)). ரூசியா செல்லும் மாணவர்களுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 200 வரையிலான நாணயத்தாள்கள் அனுமதிக்கப்பட்டன. (1991.10.17 தேதியிடப்பட்ட ஈசீ/79/91 (ஈ)).

5 முதலீடுகள்

(அ) வதிவற்றோர் வெளிநாட்டு நாணய நிதியங்களைக் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட தொழில் முயற்சிகளில் முதலீடு செய்வதற்கும் அத்தகைய முதலீடுகளின் வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படும் விற்பனைப் பெறுமதிகளை வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வரவு வைப்பதற்கும், வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருப்போர் அனுமதிக்கப்பட்டனர். (1991.11.25 தேதியிடப்பட்ட ஈசீ/17/91 (டி)).

பொதுவான கொடுகடன் வரையறை மற்றும் தரம் சார்ந்த கொடுகடன் கட்டுப்பாடு என்பனவற்றிற்கான வங்கிகளின் உறுதிப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வதிவற்றோர் வெளிநாட்டு நாணய நிலுவைகளுக்கு எதிராக மூன்றாவது தரப்பினர்களுக்கும் ரூபாக் கடன் வசதிகள் அனுமதிக்கப்பட்டன. (1991.12.12 தேதியிடப்பட்ட ஈசீ/115/91 (டி)).

(ஆ) வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 500 இனை அல்லது ஏனைய பெயர் குறிப்பிடப்பட்ட நாணயங்களில் அதற்குச் சமமான தொகையினை வைப்புச் செய்யக்கூடிய நிலையில் உள்ள வதிவுடைய மற்றும் வதிவற்ற இலங்கையர்கள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர். அத்தகைய வெளிநாட்டுச் செலாவணியின் மூலத்தைக் கருத்திற் கொள்ளாது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் பணத்தினை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டது. எனினும் வகை கூறப்பட வேண்டிய அடிப்படையில் வதிவோர்

களுக்கு விடுவிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியை இக்கணக்கில் வரவு வைப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. முன்னைய ஆண்டைவிட நடைமுறை ஆண்டில் தமது ஏற்றுமதி வருவாய்களை அதிகரித்த கூட்டு நிலையங்களுக்கும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு வசதிகள் கிடைக்கத்தக்கதாக இருந்தன. அவர்களது ஏற்றுமதி வருவாய்களின் ஆண்டுக்கான அதிகரிப்பின் 5 சதவீதத்தினை வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வரவு வைப்பதற்கு அனுமதிக்கப் பட்டது. (1991.08.01 தேதியிடப்பட்ட எண் ஈசீ/52/91 (டி) யும் 1991.08.13 தேதியிடப்பட்ட எண் ஈசீ/60/91 (டீ) யும் கொண்ட தொழிற்பாட்டு அறி வுறுத்தல்கள்.)

(இ) பிணைகளில் முதலீடு

ஒப்புதலளிக்கப்பட்ட நாடுசார் நிதியங்கள், ஒப்புதலளிக்கப்பட்ட பிரதேச நிதியங்கள் என்பனவற்றினாலும் வெளிநாட்டில் வதியும் இலங்கையர் உட்பட வதிவற்ற தனியாட்களினாலும் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்காகப் பிர யோகிக்கப்படும் அதே நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு, 1991.05.08 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் கொழும்பு பங்கு பரி வர்த்தனையில் வர்த்தகம் செய்யப்படும் பிணைகளில் முதலீடு செய்வதற்கு வெளிநாடுகளில் ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டு நிலையங்கள் அனுமதிக்கப்பட் டுள்ளன. (1991.07.03 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/44/91 (சி உம், எப் உம்).

6. சரக்கு அனுப்பல்

1990 யூன் 20 ஆம் தேதியிடப்பட்ட எண் 615/15 கொண்ட அதிசிறப்பு வர்த்தமானியில் மாண்புமிகு நிதியமைச்சரினால் வெளியிடப்பட்ட கட்டளை ஒன்றின் மூலம், சரக்கு அனுப்பும் பணியானது குறித்துரைக்கப்பட்ட பணி ஒன்றாக ஆக்கப்பட்டது. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 29 (ஆ) வின் நியதிகளுக்கிணங்கக் கருமமாற்றும் சரக்கு அனுப்பும் பணிகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர் அல்லது இலங்கையில் வதிவுடையோர் மீது சில நிபந்தனைகளையும் தேவைப்பாடுகளையும் செலாவணிக் கட்டுப்பாட்டாளர் விதித்துள்ளார். 1990 திசெம்பர் 20 ஆம் தேதியிடப்பட்ட எண் 641/15 கொண்ட அதி சிறப்பு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட இந்தத் தேவைப்பாடுகளின் நியதிகளுக்கிணங்க இலங்கைக்கு வெளியே வதியும் ஆள் ஒருவருக்காக அல்லது அவரின் சார்பாக சரக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து ஆட்களும் இந்தப் பணி தொடர்பாகக் கப்பலேற்றப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பதிவு செய்ய வேண்டியுள்ளதோடு, முதன்மை வான்வழி விலைப்பட்டியல், வணிக நிலைய வான்வழி விலைப்பட்டியல்—கப்பற்சரக்கு முதன்மை விலைப்பட்டியல் மற்றும் வணிக நிலைய கப்பற்சரக்கு விலைப்பட்டியல் எப்பவற்றினால் சான்று பகரப் பட்டதும் உட்பணவனுப்பல்களின் பெறுகையை உறுதிப்படுத்தும் வங்கிக் கடிதங் களுடனானதுமான பற்றுச்சீட்டுக்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

7 வதிவுடைய அதிதி திட்டம்

இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் முகவராண்மையினால் ஒப்புதலளிக் கப்பட்ட வதிவுடைய அதிதிகளுக்கு, முதலீடு மற்றும் வாழ்க்கைச் செலவுகளுக்காக இலங்கைக்கு அனுப்பப்படும் வெளிநாட்டு நாணயங்களை வைப்புச் செய்வதற்காக வதிவுடைய அதிதி வெளிநாட்டு நாணயக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அதிகார

மளிக்கப்பட்ட வணிகர்களுக்குச் செலாவணிக் கட்டுப்பாட்டு அனுமதி வழங்கப் பட்டது. (1991.02.20 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/08/91 (சி உம், எப் உம்).

8. தடுத்து வைக்கப்பட்ட நிதியங்கள்

குடிபெயர்ந்த அல்லது வெளிநாட்டில் பிரசா உரிமையைக் கைக் கொண் டுள்ள இலங்கைப் பிரசைகளும் தாயகத்துக்கு மீள அனுப்பப்படும் இந்திய, பாக்கித்தானியர்களும் தவிர்ந்த வதிவற்ற வெளிநாட்டுப் பிரசைகளினதும் வெளி நாட்டு கூட்டு நிலையங்களினதும் வரவிலுள்ள தடுத்து வைக்கப்பட்ட நிதிபங்கள் விடுவிக்கப்பட்டன. (1991.02.20 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் கள் எண் ஈசீ/24/91 (சி உம், எப் உம்).

9. நாணய மாற்றுநர்

இலங்கையில் முதன் முறையாகப் பண மாற்றுநர்கள் நியமிக்கப்பட்ட தோடு இலங்கை நாணயத்துக்கு எதிராக அல்லது ஏனைய வெளிநாட்டு நாணயங் களுக்கு எதிராக வெளிநாட்டு நாணயத் தாள்களைக் கொள்வனவு செய்யவும் மாற்றவும் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டது. (1991.02.18 தேதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் ஈசீ/7/91 (ஐஎன்வி)).

பொதுப் படுகடன்

நாணய விதிச்சட்டத்தின் 113 ஆம் பிரிவின் நியதிகளின்படி அரசின் சார்பாக மத்திய வங்கி பொதுப்படு கடனைத் தொடர்ந்தும் முகாமைப்படுத் தியது. பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்ட முக்கிய கருவிகளாக அரச பிணைகள், கடன்கள், திறைசேரி உண்டியல்கள், தொகுதிக் கடன்கள், திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் என்பன விளங்கின. திணைக்களம், அரசின் வெளிநாட்டுப் படுகடனை முகாமைப்படுத்திப் பேணுதலையும் கையாண் டது. மேலும் திணைக்களம் தரவு அடிப்படையினைப் பேணியதுடன் பொதுப்படு கடன் தொடர்பான கொள்கை உருவாக்கத்தினையும் மேற்கொண்டது.

1991 இறுதியில் வெளிநின்ற அரசின் மொத்தப் படுகடன் ரூ. 3,751,407 இலட்சமாக அமைந்து ரூ. 596,081 இலட்சங் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக் காட்டியது. வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ரூ. 2,143,487 இலட்சமாக விளங்கியது. இவ்வாண்டில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் பொறுப்புக்கள் ரூ. 374,660 இலட்சத்தினால் அதிகரித்ததுடன் இதில் ரூ. 159,029 இலட்சம் செலாவணித் தேய்வு காரணமாக ஏற்பட்டதாகும். மொத்தத்தில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 57.2 சதவீதத்திற்கு வகை கூறியவேளையில் உள்நாட்டுப் படுகடனின் பங்கு 42.8 சதவீதமாக விளங்கியது.

வரவு செலவுத் திட்டத் தேவைகளை ஈடுசெய்வதற்காக இவ்வாண்டில் ரூ. 260,042 இலட்சம் பெறுமதி கொண்ட அரச ரூபாப் பிணைகள் மிதக்க விடப்பட்டன. 1991 இல் ரூபாக் கடன்களின் மொத்த மீள் கொடுப்பனவும் செலுத்தப்பட்ட வட்டியும் முறையே ரூ. 138,573 இலட்சமாகவும், ரூ. 76,955 இலட்சமாகவும் விளங்கின. ஆண்டின் இறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 713,556 இலட்சமாக அமைந்ததுடன் இதில் ரூ. 45,324 இலட்சம் பாது காப்பு முறிகளை உள்ளடக்கியதாகவிருந்தது. 1991 இல் ரூபாக் கடன் நிகழ்ச்சித்

திட்டத்திற்கான முக்கிய உதவுநராக ஊழியர் சேம நிதியம் தொடர்ந்தும் விளங்கி மொத்தத்தில் 51.39 சதவீதத்திற்கு வகை கூறியது. 1991 இல் தேசிய சேமிப்பு வங்கி ரூ. 97,940 இலட்சங் கொண்ட கணிசமானதொரு தொகையை அல்லது மொத்தத்தில் 37.66 சதவீதத்தினை உதவியது.

ரூ. 650,000 இலட்சத்திலிருந்து 1991 ஒற்றோபர் 29 ஆம் நாள் ரூ.900,000 இலட்சத்திற்கு அதிகரித்த திறைசேரி உண்டியல்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட எல்லை 1991 இல் மாற்றமின்றியிருந்தது. வங்கி 3; 6; 12 மாத முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட திறைசேரி உண்டியல்களைப் பொது மக்களுக்குத் தொடர்ந்தும் வழங்கியது. 1991 பெப்புருவரி, மார்சு, நவெம்பர், திசெம்பர் மாதங்களில் 3, 6, 12 மாத திறைசேரி உண்டியல்களுடன் 3 மாதங்களுக்குக் குறைவான முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட திறைசேரி உண்டியல்களும் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டன. பிரதேச அலுவலகங்களுக்குப் புறம்பாக, கொழும்பில் முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட விலைகளின் கீழ் மத்திய வங்கி அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், பணத் தரகர்கள் என்பனவற்றினூடாகத் தொடர்ந்தும் திறைசேரி உண்டியல்களை விற்பனை செய்தது. பொது மக்களிடையே திறைசேரி உண்டியல்களைப் பிரபல்யப்படுத்தல் ஆய்விற்குரிய ஆண்டிலும் தொடர்ந்தது. முதலாந்தரச் சந்தையில் வங்கிவசமிருந்த பங்கு 1990 இறுதியில் 45 சதவீதத்திலிருந்து 1991 இறுதியில் 48 சதவீதத்திற்கு அதிகரித்தது. ஆண்டினிறுதியில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் தொகை ரூ. 729,680 இலட்சமாக விளங்கியது. இவ்வாண்டில் செலுத்தப்பட்ட மொத்த வட்டி ரூ. 104,195 இலட்சமாக விளங்கியது. மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட புதிய வழங்கல்கள் ரூ. 50,000 இலட்சமாக அமைந்தது.

1990 மே 23 ஆம் நாளிலிருந்தும் தொடங்கப்பட்ட 6, 12, 24 மாத முதிர்ச்சிக் காலங்களைக் கொண்ட திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் வழங்கலை வங்கி தொடர்ந்தும் மேற்கொண்டது. 1991 இறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 1,525 இலட்சமாக விளங்கியது.

1991 இல் நடுத்தர, நீண்டகால வெளிநாட்டுப் படுகடன் மீதான மொத்தப் பெறுகை ரூ 257,408 இலட்சமாகவும் மீள் கொடுப்பனவு ரூ. 49,123 இலட்சமாகவும் விளங்கின. வெளிநாட்டுப் படுகடனில் செயற்றிட்டக் கடன்களின் பங்கு 77.4 சதவீதமாக அமைந்த வேளையில் மீதித் தொகை செயற்றிட்டமல்லாக் கடன்களைக் கொண்டிருந்தது. 1991 இல் வெளிநாட்டுப் படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகளும் ஏனைய கட்டணங்களும் ரூ. 41,222 இலட்சமாக விளங்கின.

பிரதேச அலுவலகங்கள் – மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை

1991 இல் மாத்தறை, அநுராதபுரம், மாத்தளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள மத்திய வங்கியின் மூன்று பிரதேச அலுவலகங்களும் அவைகளது பிரதேசங்களுக்கு ஒதுக்கப்பட்ட வழமையான மத்திய வங்கிப் பணிகளை நிறைவேற்றுவதற்கு மேலதிகமாகத் தமது அபிவிருத்தி நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டன.

நிலைத்து நிற்கக் கூடியதும் வளம் மிக்கதுமான, செயற்றிட்டங்களை அடையாளம் காணல், மதிப்பிடல், நிதியிடலுக்காகக் கொடுகடன் நிறுவனங்களுக்கு அவற்றினை விதந்துரைத்தல், அத்தகைய செயற்றிட்டங்களின் பின்

மேற்பார்வை, மத்திய வங்கியினால் மீள் நிதியிடப்பட்ட கிராமிய கொடுகடன் திட்டங்களைக் கண்காணித்துத் தகவல் திரட்டல், பயனுள்ள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்தரங்குகளையும் நடத்துதல், பிரதேசங்களில் உள்ள மூல வளங்களை அடையாளம் காணல், சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள அரச திணைக்களங்கள், முகவராண்மைகள், அமைப்புக்கள் என்பனவற்றுடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பனவற்றைப் பிரதேச அலுவலகங்களின் அபிவிருத்தி வேலைகள் உள்ளடக்கியுள்ளன.

வங்கித்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகப் பிரதேச அலுவலகங்களினால் வழங்கப்படும் முக்கியத்துவமானது, நாடளாவிய சுயதொழில் கொடுகடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்தலை மையமாகக் கொண்டிருந்தது. 1991 இல் மீள் நிதியிடலுக்காக இந்தத் திட்டத்தின் கீழ்ப் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு ரூ. 56 இலட்சம் பெறுமதியான 575 செயற்றிட்டங்களை மாத்தறைப் பிரதேச அலுவலகம் விதந்துரைத்தது. மாத்தறைப் பிரதேச அலுவலகமானது, ஏனைய மீள் நிதியிடல் கடன் திட்டங்களின் கீழ்ப் பண்ணை வரவு செலவுத் திட்டம் மற்றும் நிதிப் பாய்ச்சற் கூற்றுக்கள் என்பனவற்றைத் தயாரித்தல், பங்கேற்கும் வங்கிகள் ஏனைய முகவராண்மைகள் மற்றும் பொது மக்களுக்கு வழிகாட்டல்களை வழங்குதல் போன்ற பணிகளை வழங்குவதையும் தொடர்ந்து மேற்கொண்டது. இந்தத் திட்டங்கள் தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்திச் செயற்றிட்டம், நிரந்தரப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் பிரதேச அலுவலகத்துடன் இணைந்து தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் விடயங்கள் தொடர்பாக அவற்றினை நடைமுறைப்படுத்தும் முகவராண்மைகளின் அலுவலர்களது அறிவினை அதிகரிக்கும் பொருட்டு மாத்தறை பிரதேச அலுவலகத்தில் கருத்தரங்கு ஒன்றும் நடாத்தப்பட்டது.

அநுராதபுர பிரதேச அலுவலகம், நாடளாவிய சுயதொழில் கொடுகடன் திட்டத்தின் கீழ் ரூ. 40 இலட்சம் பெறுமதியுடைய 217 சிறிய அளவு அபிவிருத்திச் செயற்றிட்டக் கடன்களை விதந்துரைத்தது. 1991 இல் கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் நாடளாவிய பண்ணைப் பொறித் திட்டம் என்பன தொடர்பான வங்கி நிதியிடலுக்காக முறையே 68 கடன்களையும், 8 கடன்களையும் பிரதேச அலுவலகம் விதந்துரைத்தது. பெரிய வெங்காயப் பயிர்ச்செய்கையினை மேம்படுத்துவதையும் மாட்டுப் பண்ணைகளைத் தரமுயர்த்துவதையும் பிரதேச அலுவலகம் ஊக்குவித்தது.

ஆய்வுக்குரிய காலப் பகுதியில் மாத்தளைப் பிரதேச அலுவலகம் நாடளாவிய சுயதொழில் கொடுகடன் திட்டத்தின் கீழ் ரூ. 101 இலட்சம் கொண்ட தொகைக்காக 690 சுயதொழில் செயற்றிட்டக் கடன்களுக்கு விதந்துரைப்புக்களை வழங்கியது. கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிதியிடலின் பொருட்டு ரூ. 26 இலட்சம் கொண்ட 168 செயற்றிட்டங்கள் கடன் வழங்கும் வங்கிகளுக்கு விதந்துரைக்கப்பட்டன. மேலும், ஆய்வுக்குரிய ஆண்டில் நாடளாவிய பண்ணைப்பொறி கொடுகடன் திட்டத்தின் கீழ் ரூ. 11 இலட்சம் பெறுமதியான 59 கடன்களைப் பிரதேச அலுவலகம் விதந்துரைத்தது. தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்திச் செயற்றிட்டம் தொடர்பாக 143 பரீட்சிப்புக்களை அவர்கள் மேற்கொண்டு நிதியிடலுக்காகத் தொடர்பான வங்கிகளுக்கு அத்தகைய செயற்றிட்டங்களை அனுப்பி வைத்துள்ளனர். உருளைக்கிழங்கு

பயிரிடல் தொடர்பான முன்னோடிச் செயற்றிட்டமானது 1991/92 பெரும் போகத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன் 31 வேளாண்மையாளர்களுக்குப் பயிற்சி யும் கொடுகடன் வசதிகளும் வழங்கப்பட்டன. முன்னைய ஆண்டினைப்போலவே வங்கிகளினால் நிதியிடப்படுவதற்காகப் பிரதேச அலுவலகத்தினால் அடையாளம் காணப்பட்ட இப்பிரதேசத்திலுள்ள சிறு கைத்தொழிலாளர்களின் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும் மாத்தளைப் பிரதேச அலுவலகம் உதவி களை வழங்கியது. இவ்வாண்டில் மூன்று விற்பனை கண்காட்சிகள் வெற்றிகரமாக ஒழுங்கு செய்யப்பட்டன.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ், வேளாண்மைக் கடன்களின் பகிர்ந்தளிப்புக்கும் மீட்புக்குமாகப் பிரதேச அலுவல கங்கள் கொடுகடன் முகாம்களைத் தொடர்ந்து நடாத்தின. 1991 ஆம் ஆண்டில் அநுராதபுரம், மாத்தளை ஆகிய பிரதேச அலுவலகங்கள் தத்தமது பிரதேசங் களில் முறையே அத்தகைய முகாம்கள் 9 இனையும், 17 இனையும் நடாத்தின. வேளாண்மையாளர்கள், தொழில்வாய்ப்பற்ற இளைஞர்கள், சனசக்தி பெறுநர் கள் ஆகியோருக்காக, பயனுறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகள் பலவற்றையும் பிரதேச அலுவலகங்கள் ஒழுங்கு செய்தன. கொடுகடன் வழங்கல் முறையில் காணப்படும் கட்டுப்பாடுகளை அடையாளம் காணுவதற்கும் பங்கேற்ப வர்களுக்கு வங்கித்தொழில் வசதிகளைப் பயன்படுத்துவதுடன் தொடர்பான சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்காகவும், கிராம மட்டத்திலான கூட் டங்களையும் மக்கள் சந்திப்புக்களையும் (சனகமுவ) பிரதேச அலுவலகங்கள் தொடர்ந்து மேற்கொண்டன.

இந்த நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, பிரதேச அலுவலகங்கள் தத்தமது பிரதேசங்களில் மூலவள அளவீட்டு நடவடிக்கைகளையும் ஆரம்பித்தன. பிர தேசத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்கள் மீதான தகவல்களைச் சேகரி த்து வருவாய் உருவாக்க நடவடிக்கைகளுக்காக அவற்றினைத் திரட்டுவதற்குத் திட்டமிட உதவுவதே இந்த அளவீடுகளின் நோக்கமாக இருந்தது.

1990 இல் மாத்தறை, அநுராதபுரம் பிரதேச அலுவலகங்களில் ஆரம்பிக்கப் பட்ட நாணயப் பிரிவுகள் தத்தமது பிரதேசங்களிலுள்ள வர்த்தக வங்கிகள், நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோருக்கு நாணயத்தை மாற்றும் வசதிகளைத் தொடர்ந்து வழங்கி வந்தன. இவ்விரு பிரதேச அலுவலகங்களும் தமது நிலவறைகளில் காசு வைப்புச் செய்வதற்கும் மீளப் பெறுவதற்குமான வசதிகளை வர்த்தக வங்கிகளுக்கு வழங்கின. ஆய்விற்குரிய காலப் பகுதியில் சுற்றோட்டத்தில் உள்ள நாணயத் தாள்கள் தூய்மையானவையாக இருக்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்கான தேவையைப் பொது மக்களுக்கு அறியத்தரும் பொருட்டு, மாத்தறைப் பிரதேச அலுவலகம் ''தூய நாணயத் தாள் வாரமொன்றை'' நடாத்தியது. காலப் போக்கில் ஏனைய பிரதேசங்களை யும் உள்ளடக்கும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் விரிவாக்கப்படும்.

1991 இல் பிரதேச அலுவலகங்கள் திறைசேரி உண்டியல்கள் விற்பனையைத் தொடர்ந்து மேற்கொண்டன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 43 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கும் வகையில் ரூ. 1,820 இலட்சம் பெறுமதியான திறைசேரி உண்டியல்களை மாத்தறைப் பிரதேச அலுவலகம் விற்பனை செய்தது. அநுராதபுரம், மாத்தளைப் பிரதேச அலுவலகங்களினால் முறையே ரூ. 1,420 இலட்சம், ரூ. 1,020 இலட்சம் கொண்ட திறைசேரி உண்டியல்கள் விற்பனை

செய்யப்பட்டு 1990 ஆம் ஆண்டின் நேரிணையான எண் தொகையுடன் ஒப் பிடுகையில் இரண்டும் வீழ்ச்சிகளைப் பதிவு செய்திருந்தன.

பிரதேச அலுவலகங்களினால், வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்டிருந்த பிரதேச காசோலைத் தீர்ப்பனவு வசதிகள் 1991 இலும் தொடரப்பட்டன. ரூ. 20,200 இலட்சம் கொண்ட எல்லாமாக 135,314 காசோலைகள் மாத் தறைப் பிரதேச தீர்வகத்தினால் தீர்ப்பனவு செய்யப்பட்ட வேளையில் அநுராத புரம் காசோலைத் தீர்வகம் ரூ. 5,500 இலட்சம் பெறுமதியான 89,791 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது. மாத்தளைப் பிரதேச அலுவலகத்தின் கீழ் இயங்கும் கண்டி, மாத்தளை ஆகிய இரு தீர்வகங்களும் 1991 இல் ரூ. 87,070 இலட்சம் பெறுமதியான 387,647 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தன.

பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய நடவடிக்கை களில் மத்திய வங்கியின் நாடளாவிய தரவு சேகரிப்பு முறையை மேற்பார்வை செய்தல் மற்றும் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் பிரதேச அளவீடு களின் தரவு சேகரிப்புக்கு உதவுதல் என்பனவும் அடங்கியிருந்தன.

தகவலும் வெளியீடுகளும்

அபிவிருத்தி முயற்சிகள், அபிவிருத்தி உத்திகள், மற்றும் அவற்றுக்கான வங்கியின் உதவிகள் என்பன தொடர்பான முக்கிய தரவுகளைப் பொறுத்தவரை வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படாதது ஆகிய இரு தகவல்களினதும் சேகரிப்பவர்/பரப்புபவர் என்ற அதன் தொழிற்பாட்டினை நிறைவேற்றும் விதத் தில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் முயற்சிகளைத் திணைக்களம் முன்னின்று பேணி வருகின்றது. சமூக பொருளாதார அபிவிருத்தியின் அண்மைய போக்கினை முழுமையாக அறிந்து வைத்திருப்பதுடன் ஆராய்ச்சியாளர்கள் மற் றும் மாணவர்களின் கற்கைகளுக்குத் தேவையான விடயங்களையும் வழங்குகிறது. இந் நோக்கத்துடன் திணைக்களம் பின்வரும் வெளியீடுகளை அச்சிட்டுப் பொது மக்களிடையே பரப்பி வருகின்றது.

1. 1990 இன் ஆண்டறிக்கை (சிங்களம், தமிழ், ஆங்கிலம்).
2. பொருளாதார அளவீடு—1991 இன் முதலரைப் பகுதி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்).
3. உயர் அலுவலர் ஆய்வுகள்—தொகுதி 19 எண் 1—2
   தொகுதி 20 எண் 1—2
4. மாதாந்த செய்தித் திரட்டு (சிங்களம், தமிழ், ஆங்கிலம்).
5. இருமாதத்திற்கொரு முறையான பொருளாதாரச் செய்தித்திரட்டு.
6. 1990 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதார சமூக புள்ளி விபரங்கள்.
7. 1991 ஆம் ஆண்டுக்கான சமூகப் பொருளாதார மடிப்பு.
8. இலங்கையின் வளர்ச்சியும் சமூக முன்னேற்றமும்.
9. உறுதியான மூன்றாண்டுச் சாதனைகள்.
10. வங்கியல்லா நிதி நிறுவனங்களின் ஒழுங்கு விதிகள்.
11. இலங்கையின் நாணய மாற்றுப் பொறிமுறை பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை 1977—1985.

திணைக்களம் 'சட்டகன', 'செய்தி அளவீடு', வங்கி புவத்' என்பனவற்றைத் தொடர்ந்து வெளியிட்டதுடன் இலங்கையின் தாராளமாக்கப்பட்ட பொருளாதாரம் பற்றிய கருத்துக்களைப் பொது மக்களுக்கு வழங்குவதற்காக விபரங்களைத் தரும் சிற்றேட்டினையும் வெளியிட்டது.

திணைக்களத்தின் முதன்மைத் தரவு, மற்றும் தகவல் தளமாக விளங்கும் நூலகத்திற்கு 858 நூல்களும் சிற்றேடுகளும் புதிதாகச் சேர்க்கப்பட்டதுடன் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் 244 சஞ்சிகைகளுக்கும் சந்தா செலுத்தப் படுகிறது. ஆசிய பவுண்டேசன், வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடை, செலாவணி என்பனவற்றின் வடிவில் நூலகம் 153 நூல்களையும் சிற்றேடுகளையும் பெற்றது. இது, இவ்வாண்டுக் காலத்தில் நூலகம் அதன் தரவு தளத்தை மேலும் உயர்த்த இயலுமானதாக்கியது.

மக்கள் தொடர்புச் சாதனங்களுடன் நெருங்கிய தொடர்பு பேணப்பட்டதுடன் இவை தொடர்பாக இவ்வாண்டில் பல செய்தியாளர் மாநாடுகள் நடத்தப்பட்டுப் பல எண்ணிக்கையான பத்திரிகைச் செய்திகளும் வெளியிடப்பட்டன.

தகவல்களைப் பரப்புவதற்கானதொரு வழியாக உருவாக்கப்பட்ட விளம்பரங்களும் வெளியாரின் நிபுணத்துவத்தை நாடாமல் திணைக்கலத்திலுள்ளவர்கள் மூலமாக முன்னேற்றம் கண்டதுடன் கட்புலத் தயாரிப்புக்களும் தொழில்சார் தரத்திற்கு ஈடுகொடுக்கத்தக்க விதத்தில் தயாரிக்கப்பட்டன.

ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் செய்தி ஒளிபரப்பில் சேர்க்கப்படுவதற்காக அனுப்பப்பட்ட பெரும்பாலான நிகழ்ச்சிகளைக் கொண்ட முக்கிய நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய வீடியோப் படங்கள், களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட கட்புலப் பட்டியல் அதிகரிக்க உதவியுள்ளன.

திணைக்களம் வானொலி, ரூபவாகினி என்பவற்றினூடாகக் கல்வி சார்ந்த நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தியது. பொருளாதார தாராளமயமாக்கல் நடவடிக்கையின் படிப்படியான முன்னேற்றம் அதன் பயன்பாடுகள் மற்றும் தாக்கம் என்பவற்றை வெளிக்காட்டும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் நடத்தப்பட்டது. இரு மொழிகளில் நடத்தப்பட்ட இந் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியோரில் வங்கியின் மூத்த அலுவலர்கள் 27 பேர் உள்ளடங்கியிருந்ததுடன் இது குழுநிலைக் கலந்துரையாடல் வடிவிலும் இடம் பெற்றது.

வங்கி அச்சகம், மேற் குறிப்பிட்ட வெளியீடுகளின் அச்சிடலில் ஏறத்தாள 75 சதவீதத்தினை அதன் வேலையின் ஒரு பகுதியாகப் பொறுப்பேற்றுள்ளது. 1991 இல் கையாளப்பட்ட அச்சிடல் வேலைகளுக்காக வங்கிக்கு ஏற்பட்ட உண்மைச் செலவுகளுடன் தொடர்பான சந்தை விலைகளைக் கருத்திற் கொண்டு பார்க்கையில், 1991 ஆம் ஆண்டுக்கான அச்சிடல் வேலைகளின் பேரில் ஆகக் குறைந்தது ரூ. 15 இலட்சம் வரையிலான தொகை தேறிய சேமிப்பாக அடையப் பட்டுள்ளது. விரிவாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் முதற் கட்டம் முற்றுப் பெற்றுள்ளது. புதிய பொறித் தொகுதி நிறுவப்பட்டதுடன் வங்கி அச்சகம் 4 நிற அச்சிடல் வேலைகளைக் கையாளக்கூடியதாகவுள்ளது.

திணைக்களம் அதன் விற்பனை நிலைய வலையமைப்பினைத் தொடர்ந்தும் பேணியதுடன் இவ்வாண்டுக் காலத்தில் திறக்கப்பட்ட பிரதேச கிராமிய அபிவிரு

த்தி வங்கிக் கிளைகளினூடாகப் பரந்தளவிலான வாசகர் வட்டத்தினை நாம் அடையக்கூடியதாக இருந்தது.

ஆராய்ச்சி நடவடிக்கைகள்

வங்கி அலுவலர்கள் தமது சொந்த ஊக்கம், மற்றைய அமைப்புக்களின் கேள்வியை ஈடுசெய்தல் ஆகிய இரண்டின் பொருட்டும் பல ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொண்டனர். இவை கொள்கை சார்ந்த ஈடுபாடுகளைப் பெருமளவிற்குக் கொண்ட ஆய்வுகளையும் உள்ளடக்கியிருந்தன. இத்தகைய ஆய்வுகளில் எட்டு மத்திய வங்கியின் அலுவலர் ஆய்வு, தொகுதி 20 இலும் 21 இலும் வெளியிடப் பட்டுள்ளன.

முகாமைக் கணக்காய்வு

1991 ஆம் ஆண்டில் முகாமைக் கணக்காய்வுத் திணைக்களம் அதன் வேலை நிகழ்ச்சித் திட்டத்தின்படி அநுராதபுரம், மாத்தறை, மாத்தளை ஆகியவற்றி லுள்ள பிரதேச அலுவலகங்கள் உட்பட வங்கியின் பல்வேறு திணைக்களங்களின் கணக்காய்வை மேற்கொண்டது. இக்காலப் பகுதியில் இத்திணைக்களம் காலி, அநுராதபுரம் ஆகியவற்றிலுள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் நடவடிக்கைகளையும் செறிவாகக் கணக்காய்வு செய்தது.

கணக்காய்வின்போது வங்கியின் விதிகளிலும் ஒழுங்கு முறைகளிலும் கூறப் பட்டுள்ள நடைமுறைகளுக்கு இணங்கி ஒழுகுவது தொடர்பான குறைபாடுகளை வெளிப்படுத்துவதில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

கணக்காய்வுத் தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக ஆய்விற்குரிய காலத்தில் இத்திணைக்களத்தின் முகாமைப் பணிகள் பிரிவு வங்கியின் முகாமைத்துவம் தொடர்பான பல முக்கிய ஆய்வுகளை மேற்கொண்டது. இவ் ஆய்வுகள் மத்திய வங்கியின் மனிதவளப் பயன்பாடு, வங்கியில் நிறுவப்பட்டுள்ள தொலைபேசிகள் மீதான ஆய்வு, சிற்றூழியர்களின் நேர மற்றும் இயங்கும் முறை பற்றிய ஆய்வு, மேலதிக நேர வேலைக் குறைப்பு, நேரப் பதிவுப் பொறிகளை நிறுவியதன் விளைவாக நேரத்திற்கு வருகை தருவதில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

அளவீடுகள், தரவுச் சேகரிப்பு மற்றும் சிறப்பு வெளியீடுகள்

தேசிய கணக்குகள்

1991 இல் வங்கி உற்பத்திப் பக்கம், செலவுப் பக்கம் ஆகிய இரண்டிலு மிருந்து தேசிய கணக்கு மதிப்பீடுகளின் தரத்தினைத் தொடர்ந்தும் மேம்படுத் தியது. இம் மதிப்பீடுகளைப் பெறுவதற்கு இரண்டாந்தர மூலங்களுக்கு மேலதிக மாக முதலாந்தர மூலங்களிலிருந்தான தரவுகள் அதிகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. பல்வேறு துறைகளினது தகவல்கள், புதிய பொருளாதார நட வடிக்கைகள் என்பன மீதான தகவல்களை உள்ளடக்கும் வகையில் முதலாந்தர மூலங்களிலிருந்தான தரவுச் சேகரிப்புக்கள் மேலும் செறிவாக்கப்பட்டன. தேசிய கணக்குகளுக்கான தரவு அடிப்படையினை மேம்படுத்துதல், ஆண்டுக் காலத்தில் பொருளாதாரப் போக்குகளின் குறிகாட்டிகளைக் கணித்தல் போன்ற நோக்கத் திற்காக இயலுமானவரையில் காலாண்டு அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப் பட்டுள்ளன.

நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறை

1978 இல் ஆரம்பிக்கப்பட்ட நாடளாவிய தரவுச் சேகரிப்பு முறை 1991 இலும் தொடரப்பட்டது. நாடு முழுவதும் பரந்துள்ள தெரிந்தெடுக்கப்பட்ட 100 நிலையங்களிலிருந்து நுகர்வோர் பொருட்களின் சில்லறை விலைகள், முக்கிய வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியாளர் விலைகள், நன்கமைக்கப்படாத தேயிலை, இறப்பர், தெங்குத்துறையினதும் கட்டடத்துறையினதும் கூலி வீதங்கள் முக்கிய வேளாண்மை உள்ளீடுகளின் விலைகள் என்பன மீதான தரவுகள் ஒழுங்கான அடிப்படையில் சேகரிக்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழான தகவல்கள் பாடசாலை ஆசிரியர்களால் சேகரிக்கப் படுகின்றன. பொருளாதார அமைப்பிலும் பொருட்களின் சார்பு ரீதியான முக்கியத்துவத்திலும் ஏற்பட்ட மாற்றத்தினைக் கருத்திற் கொண்டு இம்முறையின் கீழ்ச் சேகரிக்கப்பட்ட தகவல்களில் உள்ள விடயங்கள் பற்றி முழுமையான மீளாய்வொன்று 1991 இல் மேற்கொள்ளப்பட்டது.

நுகர்வோர் நிதியும் சமூக பொருளாதாரமும் பற்றிய அளவீடு 1986/87

நுகர்வோர் நிதியும் சமூக பொருளாதார அளவீடும் 1986/87 இன் II ஆம் பகுதி 1991 இல் வெளியிடப்பட்டது. பரந்த அளவிலான விடயங்கள் மீதான ஆய்வுக்கான மூலங்களை வழங்கும் இவ்வறிக்கை; சமூக நலப் பண்புகள், சமூக—பொருளாதார நிலைகள் தொழில்வாய்ப்பும் தொழிலின்மையும், வருமானம், செலவு, சேமிப்புக்கள், முதலீடுகள், கடன்கள் என்பன மீதான 1,126 விபரமான புள்ளி விபர அட்டவணைகளைக் கொண்டுள்ளது.

தரவுகளின் ஆய்வினைக் கொண்டுள்ள இவ்வறிக்கையின் I ஆம் பகுதி செயல்முறையில் உள்ளது.

வருமானம் உருவாக்கும் நடவடிக்கைகள் மீதான அளவீடும் மக்கள் கடன் முன்னோடித் திட்டமும்

மத்திய வங்கி மக்கள் கடன் முன்னோடித் திட்டத்தின் தாக்கத்தினைப் பற்றி ஆய்வு செய்யும் பொருட்டு 1990 இல் ஒரு வெளிக்கள புலனாய்வினை நடாத்தியது. வெளிக்களப் புலனாய்வு மாத்தளை, கண்டி, நுவரெலியா, கேகாலை மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட புலனாய்வு பற்றிய அறிக்கை ஒன்றிணைக்கப்பட்டு 1991 இல் சமர்ப்பிக்கப்பட்டது.

இறக்குமதிகளைக் கண்காணித்தல்

மொத்த இறக்குமதிகளும் அதன் உள்ளடக்கமும் பற்றி முன்கூட்டியே குறிகாட்டியை வழங்கும் நோக்குடன் வர்த்தக வங்கிகளிடமிருந்து சேகரிக்கப் பட்ட நாணயக் கடிதங்கள், நாணயக் கடிதங்களுக்கு எதிராகப் பெறப்பட்ட உண்டியல்கள் என்பவற்றினூடாகப் புள்ளிவிபரத் திணைக்களம் இறக்குமதியைத் தொடர்ந்து கண்காணித்து வந்தது.

சிறப்பு வெளியீடு

சுதந்திரத்தைத் தொடர்ந்து இலங்கையின் பொருளாதாரம் எய்திய வளர்ச்சியையும் சமூக நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றத்தையும் பற்றிய சுருக்கமான தொகுப்பினை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட வெளியீடு ஒன்று இலங்கையில் வளர்ச்சியும் சமூக முன்னேற்றமும் என்ற தலைப்பில் 1991 நவெம்பரில் வெளியிடப்பட்டது. பொருளாதார, சமூக நிலைகளில் இலங்கையில் அண்மைக் கால அபிவிருத்திகள் பற்றிய பொது மக்களின் அறிவினைத் தூண்டும் நோக்குடன் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தொடரில் முந்திய இரு வெளியீடுகளின் தொடர்ச்சியாக இது விளங்குகின்றது.

பொருளாதார வளர்ச்சி, வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றங்கள், சேமிப்புக்களும் முதலீடுகளும், தொழில் உருவாக்கம், வெளிநாட்டு வர்த்தகம், சென்மதி நிலுவை, அரச நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் மத்திய வங்கியின் நிலை பிறழாத பங்கு போன்ற முக்கிய துறைகளின் மீதான விபரமான கணக்குகளையும் உள்ளடக்கியுள்ளது.

பயிற்சி

வங்கி கல்வி சார்ந்த, கல்வி சாராத நெறிகளில் அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் அதன் கொள்கையினை ஆய்விற்குரிய காலப் பகுதியில் தொடர்ந்தும் மேற்கொண்டது. கல்வி சார்ந்த பயிற்சி பொருளாதாரத்திலும் அது தொடர்பான துறைகளிலும் பட்டப்பின் பாட நெறிகளில் வெளிநாட்டிலுள்ள தகுதிவாய்ந்த பல்கலைக் கழகங்களில் ஒழுங்கு செய்யப்பட்டது. இவை முதுமாணி, முனைவர் பட்டங்களுக்கான நெறிகளை உள்ளடக்கியிருந்தன. 1991 இல் மொத்தமாக 10 அலுவலர்கள் பட்டப்பின் படிப்பைத் தொடர்ந்தனர்.

வங்கிக்கு முக்கியத்துவமுடைய குறிப்பிட்ட துறைகள் தொடர்பான உள்நாட்டு, வெளிநாட்டுக் கல்வி சாராத் துறைகளிலான பயிற்சியானது குறுங்காலப் பயிற்சி நெறிகள், ஆய்வரங்குகள், வேலைத்தளங்கள், கல்விச் சுற்றுலாக்கள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. ஆய்விற்குரிய காலப் பகுதியில் மொத்தமாக 49 அலுவலர்கள் குறுங்காலப் பயிற்சிக்காக வெளிநாடு சென்றனர். 117 அலுவலர்கள் இலங்கையிலுள்ள பல்வேறு நிறுவனங்களில் உள்ள உள்நாட்டுப் பயிற்சி நெறிகளில் பங்குபற்றிய வேளையில் 246 அலுவலர்கள் கிராமிய வங்கித்தொழில், அலுவலர் பயிற்சிக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட நெறிகளில் பங்குபற்றினர்.

பட்டப்பின் படிப்புக்காக வெளிநாடு செல்லத் திட்டமிட்டுள்ள அலுவலர்களுக்காக வங்கி பொருளாதாரத்திலும் கணிதவியலிலும் வகுப்புக்களை நடாத்தியது. ''வெளிநாட்டுக் கல்விக்கான ஆங்கிலம்'' மீதான நெறியை மீண்டும் நடாத்துவதற்குக் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பட்டப்பின் படிப்பிற்காக வெளிநாடு செல்லத் திட்டமிட்டுள்ள அலுவலர்களதும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள உயர் பதவி அலுவலர்களினதும் நலனுக்காக நடைமுறைப் பொருளாதாரப் பிரச்சனைகள் தொடர்பான விடயங்கள் பற்றி ஆய்வரங்குத் தொடர்களைப் பயிற்சித் திணைக்களம் தொடர்ந்து மேற்கொண்டது. இதேவேளை புதிதாகச் சேர்க்கப்பட்ட உயர் பதவி அலுவலரின் நலனுக்காக ''வங்கியின் கடமைகளும் தொழிற்பாடுகளும்'' மீதான பிரத்தியேகமான மூன்று நாள் பயிற்சி நெறி நடாத்தப்பட்டது.

வங்கியின் உட்பணிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கணக்கியலிலும் நிதி முகாமைத்துவத்திலும் பயிற்சியளிப்பதற்குத் திட்டமிடப் பட்ட ''கூட்டு நிதியின் மூலகங்கள்'' எனும் பிரத்தியேக நெறி 1991 இல் ஆரம்பிக்கப்பட்டது.

திணைக்களம் அதன் வழமையான கடமைகளான தொழில்நுட்பத் தரத்தி லுள்ளவர்களுக்கான பதவியேற்றப் பரீட்சைகளையும் உயர் பதவி அலுவலர் களுக்கும் உயர் பதவியல்லா அலுவலர்களுக்குமான தகுதிகாண் பரீட்சைகளையும் தொடர்ந்தும் நடாத்தியது.

பணிமனை

அதன் வழமையான பேணல், மத்திய வங்கியின் அலுவலகங்களைச் சுத்தப் படுத்தல் ஆகியவற்றிற்குப் புறம்பாக, பின்வரும் சிறப்புச் செயற் திட்டங்களையும் பொறுப்பேற்றுள்ளது.

1. தற்போதைய வங்கிக் கட்டடத்தினை விரிவாக்குவதற்கான கட்டுமானம்

இச் செயற்றிட்டம் தொடர்பாகக் கட்டட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அமைச்சினால் நியமிக்கப்பட்ட கேள்விப் பத்திர சபையிடம் இது கையளிக்கப்பட்டது. இக் கேள்விப் பத்திரச் சபை அதன் விதந்துரைப்பு களை 1992 இன் முதற் காலாண்டில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2. கண்டியிலுள்ள அலுவலகக் கட்டடத் தொகுதியின் கட்டம்—I இன் கட்டுமானம்

கண்டி கட்டடத் தொகுதியின் கட்டம் I இன் வரைபடம் 1991 இன் முதலரைப் பகுதியில் இறுதி முடிவாக்கப்பட்டதுடன் 1991 ஒகத்தில் தொடங்கப் பட்ட கட்டுமான வேலை 1991 இல் திருப்திகரமான முன்னேற்றத்தைக் கொண் டிருந்தது. கட்டம்—I 1992 மே இறுதியளவில் நிறைவேறும் என எதிர்பார்க்கப் படுகின்றது. 1991 இல் கட்டம்—II இற்கான வரைபடமும் வரையப்பட்டு ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3. ஊர்திகளுக்கான பலமாடித் தரிப்பிடம்

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினால் உதவி வழங்கப்பட்ட சுய வேலைவாய்ப்பு உற்பத்திகளுக்கான விற்பனை நிலையங்களாகப் பல கடைகளை யும் கொண்ட ஊர்திக்கான பலமாடித் தரிப்பிடத்தின் மீது 1990 திசெம்பரில் தொடங்கிய கட்டுமான வேலைகள் 1991 ஆம் ஆண்டில் திருப்திகரமான முன்னேற்றத்தினைக் கொண்டிருந்தன. இச் செயற்றிட்டம் 1992 இன் முதற் காலாண்டில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

4. நுவரெலியாவில் சுற்றுலா விடுதியும் விடுமுறை இல்லமும்

1990 இல் தொடங்கிய சுற்றுலா விடுதியின் கட்டுமான வேலைகள் 1991 யூனில் முற்றுப்பெற்றதுடன், அதன் பின்னர் உடனடியாக 15 பிரிவுகளைக் கொண்ட விடுமுறை இல்லம் மீதான கட்டுமான வேலைகள் தொடங்கின.

1991 திசெம்பர் இறுதியில் கட்டுமான வேலைகள் இரண்டாவது மாடி வரை முன்னேற்றம் கண்டன.

5. நுவரெலியாவில் இரட்டை பங்களா

இரட்டை பங்களாவிற்கான வரைபடங்கள் 1991 ஓகத்தில் தயாரிக்கப்பட்டு 1991 ஒற்றோபரில் கட்டுமான வேலைகள் தொடங்கி 1991 திசெம்பரில் அதாவது 3 மாதங்களில் முழுக் கட்டுமான வேலைகளும் முற்றுப் பெற்றுள்ளன.

6. மாத்தறையில் முகாமையாளர் விடுதி

1991 இல் தொடங்கிய பிரதேச முகாமையாளருக்கான அலுவலக தங்கு மிடத்தின் கட்டுமான வேலைகளை ஆண்டின் இறுதிக்கிடையில் நிறைவேற்று வதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது.

7. இராஜகிரியவில் புதிய கட்டடத் தொகுதியும் தொழிற்கூடமும்

புதிய கட்டடத் தொகுதியொன்றையும் முழுமையாகக் கருவிகள் மயப் படுத்தப்பட்ட தொழிற்கூடமொன்றையும் கட்டுவதற்காக இராஜகிரியவில் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையிடமிருந்து மேலதிக நிலமொன்று பெறப் பட்டது. 1991 இல் ஆரம்ப வரை படங்கள் தயாரிக்கப்பட்டு இறுதி முடிவெடுக்கப் பட்டது. 1991 ஒற்றோபரில் தொடங்கிய தொழிற் கூடத்தின் மீதான கட்டுமான வேலைகள் 1991 திசெம்பரில் முற்றுப்பெற்றன.

நலம்

நலத் திணைக்களம் மத்திய வங்கி ஊழியர்களின் பின்வரும் நல வசதிகளை நிருவகிப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது.

1. வீடமைப்புக் கடன் திட்டம்.
2. அலுவலர் நன்மைத் திட்டம்.
3. ஊர்திகள் கடன் திட்டம்.
4. மருத்துவ நன்மைகள் திட்டம்.
5. சேமநிதிக் கடன் திட்டம்.

எந்த ஒரு நலத் திட்டத்தின் கீழுமான கடன் வழங்கல் 1991 திசெம்பரி லிருந்து வீட்டிற்கு எடுத்துச் செல்லும் கொடுப்பனவு ஆகக் குறைந்தது 40 சதவீதமாக இருக்க வேண்டும் என்ற விதிக்கு உட்பட்டிருந்தது.

வங்கி மருத்துவ சிகிச்சைப் பிரிவு அனைத்து வேலைநாட்களிலும் அலுவலக நேரத்தில் முழுக் கவனிப்புடனான வைத்தியரைக் கொண்டிருந்தது. மருந்தகம் வைத்தியக் குறிப்புக் கோவைகளையும் உரிமையளிக்கப்பட்ட மருந்துகளையும் களஞ்சியப்படுத்தியிருந்தது. சிகிச்சைப் பிரிவு மின்னியல் இதயத்துடிப்பளக்கும் கருவிப் பரிசோதனை, உணவின்றிய இரத்தத்தில் சீனியின் பரிசோதனை, மற்றும் இடையிடையே இரத்தத்தில் சீனிப் பரிசோதனை என்பனவற்றை மேற்கொள் வதற்கான வசதிகளை வழங்குகின்றது.

ஆளுனர்

ஆளுநர் முனைவர் எச். என். எஸ். கருணாதிலக 1991 இல் பின்வரும் மாநாடுகளிலும் கூட்டங்களிலும் கலந்துகொண்டார்:—

(1) இந்தோனேசியாவில் நடைபெற்ற தென்கிழக்காசிய மத்திய வங்கிகளின் ஆளுநர்களது 26 ஆவது மாநாடு.

(2) பாக்கித்தானில் நடைபெற்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஆளுநர்கள் சபையின் கூட்டம்.

(3) நெதர்லாந்தில் நடைபெற்ற பன்னாட்டு அபிவிருத்திக்கான சமூகத்தின் உலக மாநாடு.

(4) இலண்டனில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களது ஆண்டுக் கூட்டம்.

(5) மலேசியாவிலும் தாய்லாந்திலும் முறையே இடம்பெற்ற பொதுநலவாய நிதியமைச்சர்களதும் மூத்த நிதி அலுவலர்களினதும் கூட்டமும் பன்னாட்டு நாணய நிதியம்–உலக வங்கி என்பவற்றின் ஆளுநர்கள் சபையின் ஆண்டுப் பொதுக் கூட்டங்களும்.

(6) யப்பானில் நடைபெற்ற ஒயென்சா மத்திய வங்கி ஆளுநர்கள் சபையின் 19 ஆவது கூட்டம்.

ஆளுநர் இலங்கையில் இல்லாத காலத்தில் துணை ஆளுநர் எஸ். ரி. ஜி. பர்னாந்து மூத்த துணை ஆளுநராக நியமிக்கப்பட்டு வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும் நாணயச்சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

திறைசேரித் துணைச் செயலாளர் திரு. எச். பி. திசாநாயக்கா நிதி அமைச்சின் செயலாளர் இல்லாத காலத்தில் அவரது மாற்றுச் செயலாளராக நாணயச் சபையின் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

நியமனங்கள்

ஆலோசகர் திரு. எஸ். ஈஸ்பரதாசன் 1991 சனவரி 1 இலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

வங்கியில் கடமைகளை மீண்டும் தொடர்ந்த திரு. எச். எம். ஆர். எல்லப் பொல 1991 சனவரி 1 இலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

முதன்மைக் கணக்காளர் திரு.என்.ஏ. தர்மபந்து 1991 சனவரி 1 இலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

செலாவணிக் கட்டுப்பாட்டாளர் திரு. பி. அமரசிங்க 1991 சனவரி 1 இலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

கிராமியக் கொடுகடன் பணிப்பாளர் திரு. ஜி. எம். பி. டி. த சில்வா 1991 சனவரி 1 இலிருந்து ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

திரு. எஸ். பட்டிவிதான 1991 சனவரி 1 இலிருந்து நலன்புரிப் பணிப்பாள ராக நியமிக்கப்பட்டார்.

நலன்புரிப் பணிப்பாளர் செல்வி சி. அபயநாயக்க 1991 சனவரி 1 இலிருந்து கிராமியக் கொடுகடன் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

தரவுச் செய்முறையின் மேலதிகப் பணிப்பாளர் திரு. எம். ஐ. எப். ஹமிட் 1991 சனவரி 1 இலிருந்து முகாமைக் கணக்காய்வுப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

முகாமைக் கணக்காய்வுப் பணிப்பாளர் திரு. எம். ஆர். பர்னாந்து 1991 சனவரி 1 இலிருந்து செலாவணிக் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

புள்ளிவிவரவியல் மேலதிகப் பணிப்பாளர் முனைவர் எஸ். எஸ். கொலம்பகே 1991 சனவரி 1 இலிருந்து தரவுச் செய்முறைப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

மேலதிக முதன்மைக் கணக்காளர் திரு. எம். பி. திசாநாயக்கா 1991 சனவரி 1 இலிருந்து முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

பணிமனை மேலதிகப் பணிப்பாளர் திரு. ஜி. ஏ. பெரேரா 1991 சனவரி 1 இலிருந்து பணிமனைப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

ஊழியர் சேமநிதியத்தின் பதில் மேலதிகக் கண்காணிப்பாளர் திரு. கே. சி எம். குணசேகர 1991 சனவரி 1 இலிருந்து ஊழியர் சேமநிதிக் கண்காணிப் பாளராக நியமிக்கப்பட்டார்.

வங்கித்தொழில் அபிவிருத்தியின் பதில் மேலதிகப் பணிப்பாளர் திரு. சி. ஈ. ஜயசூரிய 1991 செத்தெம்பர் 10 இலிருந்து வங்கித்தொழில் அபிவிருத்தியின் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

திணைக்களத் துணைத் தலைவர் திரு. டபிள்யூ. ஏ. விஜயவர்த்தன 1991 செத்தெம்பர் 10 இலிருந்து நாணயப் பதில் மேலதிகக் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

துணை முதன்மைக் கணக்காளர் திரு. ஆர். ஜி. ஜயரத்ன 1991 செத்தெம் பர் 10 இலிருந்து பதில் மேலதிக முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

செலாவணித் துணைக் கட்டுப்பாட்டாளர் திரு. எச். ஏ. ஜி. எட்டியாராச்சி 1991 செத்தெம்பர் 10 இலிருந்து பதில் மேலதிகச் செயலாளராக நியமிக்கப் பட்டார்.

நலன்புரித் துணைப் பணிப்பாளர் திரு. ரி. எச். டி. பீரிஸ் 1991 செத்தெம் பர் 10 இலிருந்து நலன்புரிப் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

துணைப் பணிப்பாளர் செல்வி சி. ஐ. பர்னாந்து 1991 ஒற்றோபர் 1 இலிருந்து வங்கி மேற்பார்வைப் பதில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

செலாவணி மேலதிகக் கட்டுப்பாட்டாளர் திரு. பி. எல். ஜயமான 1991 ஒற்றோபர் 8 இலிருந்து கிராமியக் கொடுகடன் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியின் துணைப் பணிப் பாளர் திரு. ஜெ. ஈ. டி. கருணாரத்ன 1991 ஒற்றோபர் 30 இலிருந்து கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் மேலதிகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

விடுவிப்பிலுள்ள அலுவலர்கள் (1991 திசெம்பர் 31 இல் உள்ளவாறு)

பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையிலுள்ள அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிற்கும் பன்னாட்டு அமைப் புக்களுடன் செயற்படுவதற்குமாக விடுவிக்கப்பட்டனர்.

திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன செயலாளராகக் கடமையாற்றுவதற்காகக் கைத்தொழில் அறிவியல் தொழில்நுட்ப அமைச்சிற்கு.

முனைவர் எல். ஈ. என். பர்னாந்து வங்காள தேசம், பூட்டான், இந்தியா, இலங்கை என்பவற்றின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமையாற்று வதற்காகப் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு.

திரு. பி. எம். நாகாவத்தை கொள்கை, திட்டமிடல் வீடமைப்பு நிர்மாண அமைச்சின் பணிப்பாளராகக் கடமையாற்றுவதற்காக வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சிற்கு.

முனைவர் (திருமதி) ஆர். ஜயமகா செயலாளராகக் கடமையாற்றுவதற்காக வங்கித்தொழில் மீதான சனாதிபதி ஆணைக் குழுவிற்கு.

திரு. எம். இராமநாதன் கொள்கைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் அமைச்சிற்கு.

திருவாளர்கள் சி. த. எஸ். ஜயவர்த்தன, சி. லியனகே, டபிள்யூ. ஏ. டி. ஈ. வீரசிங்க, என். எம். தயாரத்ன, செல்வி கே. சரவணமுத்து நிதி அமைச்சிற்கு.

திரு. எஸ். எம். ஏ. சிறிவர்த்தன செயற்றிட்ட மாவட்ட இணைப்பதிகாரி யாகக் கடமையாற்றுவதற்காகப் புத்தளம் மாவட்டத்திலுள்ள சிறு வேளாண்மை யாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்திற்கு.

திருவாளர்கள் ஜி. எச். பர்னாந்து, என். எம். ஜயசேகர ஆகியோர் இலங்கைக் கொடுகடன் தகவல் பணியகத்திற்கு.

ஓய்வுபெறல்/பதவி விலகல்

நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. பி. வத்தேகம 1991 சனவரி 10 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வுபெற்றார்.

பொதுப்படுகடனின் மேலதிகக் கண்காணிப்பாளர் திரு. வி. சிவசுப்பிரமணியம் 1991 மாச்சு 14 ஆம் நாளிலிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

நாணயக் கண்காணிப்பாளர் திரு. டபிள்யூ. எம். டபிள்யூ. வணிகசிங்க 1991 ஒற்றோபர் 29 ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஆலோசகர் திரு. வி. என். டி. நாணயக்கார 1991 நவெம்பர் 11 ஆம் நாளிலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.